

# காணாமல்போன கன்சுல்

(இளையோர் நாவல்)

அ. வா. முஹ்சீன்
(Dip.in.Psychology & Dip.in.Sociology)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வெளியீடு :
பண்பாட்டலுவல்கள் திணைக்களம், கிழக்கு மாகாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணாமல் போன கன்சுல்

(இளையோர் நாவல்)

அ. வா. முஹ்சீன்.
(Dip.in. Psychology & Dip.in. Sociology)

எண்ணம் போல் வாழ்க்கை
கலை இலக்கிய மன்றம்
திருகோணமலை

வெளியீடு
பண்பாட்டலுவல்கள் திணைக்களம்
கிழக்கு மாகாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூல் விபரப் பட்டியல்

| | | |
|---|---|---|
| நூல் | : | காணாமல் போன கன்சுல் |
| வகை | : | நாவல் |
| நூலாசிரியர் | : | அ.வா.முஹ்சீன் |
| முதற்பதிப்பு | : | 2023 |
| பக்கங்கள் | : | VIII + 115 |
| பதிப்புரிமை | : | பண்பாட்டலுவல்கள் திணைக்களம் கிழக்கு மாகாணம். |
| வெளியீடு | : | பண்பாட்டலுவல்கள் திணைக்களம் கிழக்கு மாகாணம். |
| அச்சுப்பதிப்பு | : | ஏ.ஆர்.டிரேடர்ஸ், திருகோணமலை |
| ISBN | : | 978-624-6135-21-8 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மென்மேலும் இத்துறையிற் பிரகாசியுங்கள்...**

**கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளரின் வெளியீட்டுச் செய்தி.**

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் வேலைத்திட்டங்களில் ஒன்றான கிழக்கு மாகாண எழுத்தாளர்களை ஊக்குவிப்பதும் ஒரு பெறுமதி வாய்ந்த பணியாகும். ஏனெனில் நூல் வெளியீடுகள் பொருளாதாரச் சுமை மிக்கதால் குறைந்த அளவிலேயே இடம்பெறுகின்றன. பல பிரதிகள் நூலுருப் பெறமால் உறங்குநிலைக்குச் செல்கின்றன. இவற்றை ஓரளவேனும் நிவர்த்தி செய்யும் முகமாக நூலுருவாக்கம், சிறந்த நூல் தெரிவு, நூல் கொள்வனவு என்பன கிழக்கு மாகாணப் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படுகின்றன. இந்தவகையில் தேர்ந்தெடுக்கப்பட்ட தகுதியான நூல்களைப் பிரசுரிக்கின்ற **2023**ஆம் ஆண்டிற்கான நூலுருவாக்கப் பணித்திட்டத்தினூடாக தங்களைச் சந்திப்பதில் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன்.

ஒரு எழுத்தாளன் கற்றல், கற்பனைத்திறன், எண்ணம், அனுபவம், படைப்பாற்றல், ஆளுமை என்பவற்றைப் பயன்படுத்தி சீரான ஒழுங்கு முறைகளினூடாக ஒரு ஆக்கத்தைப் பிரசவிக்கின்றான். இவ்வாறான பிரசவங்களினூடாக பல்வேறு ஆக்க இலக்கியங்கள் எமக்கு கிடைக்கப்பெறுகின்றன. இவை சமூகத்தின் பரிணாம வளர்ச்சிக்குரிய பண்பாடுகள் மற்றும் விழுமியங்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்தியம்பி அடுத்த தலைமுறைக்கு அவற்றை எடுத்துச் செல்கின்றன.

**2023**ஆம் ஆண்டு தமிழ்மொழி மூலம் நூலுருவாக்கத்திற்குக் கிடைக்கப்பெற்ற **இருபது (20) வகையான** பல்வேறு ஆக்கங்களிருந்து எமது நிதி ஒதுக்கீட்டின் அடிப்படையில் **ஒன்பது (09)** ஆக்கங்கள் பிரசுரத்திற்கு உகந்தவையாகத் தகுதியான நடுவர் குழாமினால் தேர்ந்தெடுக்கப்பட்டன. இங்கு இளம் எழுத்தாளர்களின் கன்னி வெளியீடும், மூத்த எழுத்தாளர்களின் விரிந்த எண்ண அனுபவ ஆக்கங்களும், அறிவியலும், தொழில்நுட்பமும், நாட்டார் இலக்கியம், சுயகவிதை, சிறுகதை, சிறுவர் இலக்கியம், புலமைத்துவம் சார் படைப்புக்கள் என பல்வேறு வடிவில் ஆக்க இலக்கியமாக நூலுருப்பெறுவது சிறப்பான ஒரு அம்சமாகும்.

**"காணாமல் போன கன்சுல்"** எனும் இந்நூலின் நூலாசிரியர் தனது விரிந்த சிந்தனை, பரந்த அனுபம் என்பவற்றுடன் கூடிய மொழிவாண்மை மூலம் இதனை படைத்துள்ளார். இந்த படைப்பும் வாசகர் நுகர்விற்கு மிகவும் பொருத்தமானது என நம்புகின்றேன். அந்தவகையில் இப்படைப்பினை மேற்கொண்ட நூலாசிரியரை பாராட்டுவதுடன், அவர் மேலும் இத்துறையில் பிரகாசிக்க வாழ்த்துக்களைச் தெரிவிப்பதோடு, இத்தேர்விற்கு உதவிய நடுவர்கள் குழாத்திற்கும் மற்றும் ஏ.ஆர் அச்சகத்திற்கும் இச்சந்தர்ப்பத்தில் நன்றியை நவில்கின்றேன்.

**திரு. சரவணமுத்து நவநீதன்**
மாகாணப் பணிப்பாளர்,
பண்பாட்டலுவல்கள் திணைக்களம்,
கிழக்கு மாகாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

இந்நூல் ஒரு பரீட்சார்த்த முயற்சி. இளையோர்களை நோக்கமாகக் கொண்ட ஒரு முயற்சி. இலங்கைத் தமிழ்ச் சூழலில் இளையோருக்கான நூல்கள் எழுதப்படுவது குறைவாக இருக்கிறது. 'பாப்பா பாடல்கள்', 'சிறுவர் பாடல்கள்' என பாடல் நூல்கள் அதிகளவில் எழுதப்பட்டு வந்திருக்கின்றபோதிலும், இளையோர்களுக்கான நாவல்கள் எழுதப்படுவது குறைவாகவே இருக்கிறது.

ஒரு சமூகத்தில் வாசிப்பின் தொடர்ச்சியைப் பேணுவதில், இளையோர் நாவல்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. இளம்பராயத்தில் வாசிப்பின் மீது ஏற்படுகின்ற ஆர்வம்தான், வளர்ந்த பின்னரும் ஒருவர் தொடர்ச்சியாக வாசிப்பதற்குக் காரணமாகிறது. தமிழ், முஸ்லிம் சமூகங்களின் மத்தியில் வாசிப்பின் மீதான ஆர்வம் வெகுவாக குறைந்திருப்பதற்கு, இளையோர்களை வாசிக்கத் தூண்டுகின்ற நாவல்கள் அதிகளவில் இல்லாததும் ஒரு காரணமாக இருக்கிறது.

இத்தகைய பின்னணியில், இளையோர்களின் வாசிப்பு ஆர்வத்தைத் தூண்டுவது இந்நாவலின் பிரதான இலக்காக இருக்கிறது. அதேநேரத்தில், வளர்ந்தோரும் வாசிக்கும் விதத்தில் இந்நாவலை கட்டமைத்திருக்கிறேன். உளவியல் அம்சங்கள், விருப்பங்கள், ஆர்வங்கள், நடத்தைகள் போன்றவற்றில் கவனமான அக்கறையுடன் இந்நாவலை எழுதியிருக்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நாவலில் சிங்கள, ஆங்கில மொழிச் சொற்களையும் பயன்படுத்தியுள்ளேன். சிங்களச் சொற்களுக்கான தமிழ் அர்த்தங்களை அச்சொற்களுக்கு அருகிலும் ஆங்கிலச் சொற்களுக்கான தமிழ் அர்த்தங்களை நூலின் இறுதியில் தனியாகவும் இணைத்துள்ளேன்.

இந்நூலை வெளியிடுகின்ற கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்திற்கு எனது நன்றிகள்.

*அ.வா. முஹ்சீன்*
*836, பாலையூற்று*
*திருகோணமலை*
*சிறீலங்கா*

தொ.பேசி: 077 – 8089827 / 075 – 2342062
மின்னஞ்சல்: sonaham60@gmail.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளே.........


| பொருளடக்கம்: | | பக்கம் |
| --- | --- | --- |
| 1. | கன்சுலின் கவலை | 01 |
| 2. | கன்சுலின் குடும்பம் | 10 |
| 3. | கன்சுலின் ஆசிரியர்கள் | 19 |
| 4. | கன்சுலின் நண்பர்கள் | 25 |
| 5. | கன்சுல் வழிகாட்டுகிறான் | 29 |
| 6. | கன்சுலைக் காணவில்லை | 32 |
| 7. | காவல்துறையினரின் நடவடிக்கைகள் | 39 |
| 8. | கன்சுலுக்கு நடந்தது என்ன? | 46 |
| 9. | புதிய இடத்தில் கன்சுல் | 53 |
| 10. | கன்சுலும் காமினியும் | 60 |
| 11. | ஓர் இயற்கை அனர்த்தம் | 69 |
| 12. | கன்சுலின் புதிய நண்பன் | 77 |
| 13. | கன்சுலின் தங்கை | 82 |
| 14. | கன்சுலின் சாதுரியம் | 94 |
| 15. | கன்சுலின் பிரியாவிடை | 106 |
| | இணைப்பு | 113 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# -1-

# கன்சுலின் கவலை

கன்சுல் வீதியின் வலது பக்கமாக நடந்து கொண்டிருந்தான். அவனுடைய முதுகில் 'ஸ்கூல் பேக்' தொங்கிக் கொண்டிருந்தது. அதற்குள் புத்தகங்கள் இருக்கவில்லை. அவனுடைய உடைகளில் சில அதற்குள் இருந்தன. அவனுடைய வலது கரத்தில் ஒரு 'கிரிக்கட்' மட்டை இருந்தது. அது அவனுக்கு மிகவும் பிடித்தமான 'கிரிக்கட்' மட்டை. அது ஒரு அற்புதமான மட்டை. அவனுடைய வாப்பா அதை அவனுக்கு வாங்கிக் கொடுத்த முதல் நாளில் இருந்து, பல தடவைகளில் அவன் அதை அழகுபடுத்தியிருந்தான். சென்ற வருடம், அவனுடைய பத்தாவது பிறந்தநாளின் போது, அவனுடைய வாப்பா அந்த 'கிரிக்கட்' மட்டையை வாங்கிக் கொடுத்தார்.

'கிரிக்கட்' மட்டையை கையில் வாங்கியபோது, கன்சுல் மகிழ்ச்சியின் உச்சத்திற்கே சென்றிருந்தான். அதை அவன் மிகவும் வாஞ்சையுடன் தடவிப் பார்த்தான். அது வழுவழுப்பாக இருந்தது. அதை தனது கன்னத்தில் வைத்து அழுத்தினான். கன்னம் குளிர்ந்தது. பின்னர், அவன் ஒரு 'சைக்கிள்' திருத்தும் கடைக்குச் சென்று, பழைய 'சைக்கிள் ரியூப்' ஒன்றை வாங்கி வந்தான். அந்த 'ரியூப்பை' சின்னச்சின்ன கீலங்களாக வெட்டி, மட்டையின் கைப்பிடியைச் சுற்றி, கவனமாக வரிந்தான். ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரைமணித்தியாலம் செலவிட்டு, அதை அவன் வரிந்து முடித்தபோது, அந்த மட்டை கம்பீரமாகக் காட்சியளித்தது.

அன்று பின்னேரம், அந்த மட்டையுடன் அவன் விளையாட்டு மைதானத்திற்குச் சென்றபோது, அவனுடைய நண்பர்கள் ஆர்வத்துடன் அவனைச் சூழ்ந்து கொண்டார்கள். அவர்களுடைய கைகளில், பலகைகளில் வெட்டிச் செய்த மட்டைகளே இருந்தன. எல்லோரதும் கனவாக இருந்த, நிஜமான 'கிரிக்கட்' மட்டையுடன் கன்சுலைக் கண்டதும், அவர்களின் விழிகள் வியப்பால் உயர்ந்தன. அன்றில் இருந்து கன்சுல் அவர்களுடைய 'கிரிக்கட்' விளையாட்டில் ஒரு முக்கியமான நபராக மாறி விட்டான்.

கன்சுல் அடிக்கடி அந்த 'கிரிக்கட்' மட்டையை அழகுபடுத்தினான். மட்டையின் உட்புறமாகவும், வெளிப்புறமாகவும் வெவ்வேறு வடிவங்களை வரைந்து, அவற்றிற்கு வெவ்வேறு நிறங்களைத் தீட்டினான். பாடசாலைக்குச் செல்லும் நேரம் தவிர, மற்றைய நேரங்களில் அவன் அந்த மட்டையை தன்னுடனேயே வைத்திருந்தான். இரவில் தூங்கும்போதும், அதைத் தனக்கு அருகில் வைத்தவாறே அவன் தூங்கினான். அவ்வளவு பிரியமான மட்டையுடன்தான், இப்போது வீதியோரமாக அவன் நடந்து கொண்டிருந்தான்.

கன்சுல் கவலையுடன் காணப்பட்டான். அவனுடைய முகம் வாடியிருந்தது. கடந்த ஒருமாதகாலமாக அவன் விளையாட்டு மைதானத்திற்கு தன்னுடைய புதிய 'சைக்கிளில்'தான் சென்று வந்தான். ஆனால் இப்போது அவன் நடந்து போய்க் கொண்டிருந்தான்.

இந்த வருடத்தின் ஆரம்பத்திலேயே அவனுடைய வாப்பா அவனுக்கு வாக்குறுதி அளித்தார்:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கன்சுல், நீ நன்றாகப் படித்து, 'ஸ்கொலர்சிப்' பரீட்சையில் 'பாஸ்' பண்ணினால் நான் உனக்கு ஒரு புதுச் 'சைக்கிள்' வாங்கித் தருவேன்"

வாப்பா இதைக் கூறியபோது, கன்சுலுக்கு தலைகால் புரியாத சந்தோசம் ஏற்பட்டது. எனினும் அந்த சந்தோசம் அதிக நேரம் நீடிக்கவில்லை.

'ஒருவேளை நான் 'பாஸ்' பண்ணாவிட்டால்..?'

இந்த எண்ணம் அவனுக்கு வந்ததும், அவனுடைய சந்தோசம் மறைந்து விட்டது. எனவே உடனடியாகவே அவன் வாப்பாவிடம் ஒரு மாற்று யோசனையை முன்வைத்தான்.

"வாப்பா, நான் பரீட்சை எழுதி முடித்தவுடன் எனக்கு சைக்கிள் வாங்கித் தரணும். அப்படியென்றால்தான் நான் ஒழுங்காகப் படிப்பேன்."

கன்சுலின் புதிய யோசனையை அவனுடைய வாப்பா மெல்லிய சிரிப்புடன் ஏற்றுக் கொண்டார்.

ஒரு மாதத்திற்கு முன்னர் பரீட்சை முடிந்தவுடன், அன்று பின்னேரமே கன்சுல் வாப்பாவை ஒரே பிடியாய் பிடித்து விட்டான்.

"வாப்பா, பரீட்சை முடிந்திட்டுது. இப்பவே எனக்குச் சைக்கிள்' வாங்கித் தரணும்."

"எனக்கு இப்ப நேரமில்ல. நாளைக்கு வாங்கித் தாறேன்"

வாப்பா கூறியதை கன்சுல் ஏற்கவில்லை.

"இல்ல, எனக்கு இப்ப 'சைக்கிள்' வேணும்"

அப்போது கன்சுலின் உம்மா அவனுக்கு 'சப்போர்டாக' கூறினார்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இங்க, பரீட்சை எழுதி முடித்தவுடன் 'சைக்கிள்' வாங்கித் தருவதாக நீங்கதானே சொன்னீங்க. பேசாம போய் அவனுக்கு வாங்கிக் கொடுங்க"

அதன் பின்னர் அவனுடைய வாப்பா எதுவும் பேசவில்லை. கன்சுலையும் கூட்டிக் கொண்டு 'சைக்கிள்' கடைக்குச் சென்றார். கன்சுலுக்குப் பிடித்தமான சிவப்பு நிற 'சைக்கிளை' அவனுக்கு வாங்கிக் கொடுத்தார்.

'சைக்கிளை' முதன்முறையாக உருட்டியபோது, ஒரு விமானத்தை ஓட்டிய பரபரப்பையும் மகிழ்ச்சியையும் கன்சுல் உணர்ந்தான். இரண்டு நாட்களிலேயே அவன் 'சைக்கிள்' ஓட்டக் கற்றுக் கொண்டான். ஆரம்பத்தில் வீட்டு வளவிற்குள்ளும், பின்னர் தன்னுடைய வீடு இருந்த வீதியிலும் அவன் அந்த 'சைக்கிளை' ஓட்டினான். ஒரு வாரம் சென்றதும், அவன் தனது 'சைக்கிளில்' எங்கும் போகத் தொடங்கினான்.

'சைக்கிளில்' செல்வது ஒரு அற்புதமான அனுபவமாக இருந்தது. 'சைக்கிளில்' செல்லும்போது, வீதியில் மிதந்து போவதுபோல அவன் உணர்ந்தான். ஆரம்பத்தில், முன்னால் வாகனம் வரும்போது அவனுக்கு ஏற்பட்ட பயம், மெல்ல மெல்ல அகன்று விட்டது. அவன் 'சைக்கிளை' எப்போதும் கவனமாக ஓட்டினான். எனினும் ஒருமுறை ஒரு வீதியின் வளைவில் திரும்பும்போது, 'சைக்கிள்' வழுக்கி அவன் கீழே விழுந்து விட்டான். அவனுடைய இரு முழங்கைகளிலும், முழங்கால்களிலும் உராய்வு ஏற்பட்டு, தோல்கள் கழன்று, இரத்தம் கசிந்து விட்டது. அதன் பின்னர் அவன் ஒருபோதும் விழவில்லை. வீதித் திருப்பங்களிலும், வளைவுகளிலும் கீழே விழாமல் 'சைக்கிளை' செலுத்துவதற்கு அவன் கற்றுக் கொண்டான்.

ஆனால், கன்சுல் இப்போது தனது 'சைக்கிளில்' செல்லாமல், நடந்து செல்கிறான். மத்தியானம் அவனுடைய வாப்பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'சைக்கிளைப்' பூட்டி திறப்பை எடுத்துக் கொண்டு, கோபத்துடன் அவனிடம் கூறினார்,

"இனி நீ 'சைக்கிளைத்' தொடக் கூடாது"

கன்சுலின் வாப்பா இவ்வாறு செய்ததற்கும் கூறியதற்கும் காரணம் இருக்கிறது. அன்று மத்தியானம் கடையில் இருந்து வந்தபோது, அவர் ஒரு புதிய 'மொபைல் போன்' வாங்கி வந்திருந்தார். அது ஒரு விலை கூடிய 'போன்.' அது பெரிதாக இருந்தது. அதைக் கண்டவுடன் கன்சுலின் கைககள் பரபரக்கத் தொடங்கின. அதை எடுத்து, அதில் என்னென்ன 'கேம்ஸ்' இருக்கின்றன என்று அறிய வேண்டும் என்ற ஆவல் அவனை உந்தித் தள்ளியது. கன்சுலுக்கு 'போனில் கேம்ஸ்' விளையாடத் தெரியும். ஏற்கனவே வாப்பாவிடம் இருந்த 'போனில்' அவன் 'கேம்ஸ்' விளையாடியிருக்கிறான். இப்போது புதுப் 'போனை' பார்த்தவுடன், அதிலுள்ள 'கேம்ஸை' விளையாட வேண்டும் என்று அவன் துடித்தான். ஆனால் அவனுடைய வாப்பா அவனிடம் கண்டிப்பான முறையில் கூறினார்,

"கன்சுல் நீ இந்தப் புதுப் 'போனை' எடுக்க வேணாம். பழைய 'போனில கேம்ஸ்' விளையாடு"

ஆனால் வாப்பாவின் அந்த வார்த்தைகளை கன்சுலின் உள்ளம் ஏற்றுக் கொள்ளவில்லை. அவன் நல்ல பிள்ளையைப் போல பாவனை செய்தவாறு, 'ரீவி'யில் 'கார்டூன்' பார்த்துக் கொண்டிருந்தான். சற்று நேரத்தில் வாப்பா குளிப்பதற்காக 'டவலை' எடுத்துக் கொண்டு கிணற்றடிக்குப் போவதை கன்சுல் பார்த்தான். வாப்பாவின் உருவம் மறைந்ததும், சட்டென்று எழுந்து, 'போனைக்' கையிலெடுத்து, அதை 'ஓபன்' பண்ணினான். பழைய 'போனை' கையாண்ட அனுபவத்தை வைத்து, இந்த புதுப் 'போனை'யும் இயக்கினான். சற்றுக் கடினமாக இருந்தபோதிலும், திரையில் தெரிந்த வெவ்வேறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'அப்ஸ்களை' அழுத்தி, அழுத்தி, 'போனை' இயக்கிக் கொண்டிருந்தான்.

அவன் அவ்வாறு செய்து கொண்டிருக்கும்போது வாப்பா வந்து விட்டார். குளிக்கப்போன வாப்பா அவ்வளவு விரைவாக திரும்பி வருவார் என்று கன்சுல் நினைத்திருக்கவில்லை. வாசலில் வந்தவுடனேயே, கன்சுல் புதிய 'போனை' கையில் வைத்திருப்பதை அவனுடைய வாப்பா பார்த்தார். ஆத்திரம் அவருடைய தலை வரை ஏறியது. அவர் பலத்த சத்தத்துடன் கத்தினார்,

"கன்சுல், 'போனை' வை"

வாப்பாவின் சத்தத்தைக் கேட்டதும், கன்சுல் அதிர்ந்து விட்டான். அவனுடைய கைகள் நடுங்கின. அவனுடைய கைகளை விடவும் பெரிதாக இருந்த அந்த 'போன்' நழுவி, கீழே படீரென்று விழுந்து விட்டது.

"என்ட அல்லா!"வாப்பா அலறிக் கொண்டு ஓடிவந்து 'போனை' எடுத்தார். 'போன்' 'ஓபா'கியிருந்தது. அதன் திரை மெல்லிய கோடாய் வெடித்திருந்தது.

"என்ன வேலை செய்திருக்கிறாய்?"நடந்த சம்பவத்தால் அதிர்ந்து நடுங்கிக் கொண்டிருந்த கன்சுலின் முதுகில், வாப்பா ஓங்கி அடித்தார். கன்சுல் தடுமாறியவாறு, சுவரருகில் போய் விழுந்தான். 'போன்' விழுந்த சத்தம் கேட்டு, சமையலறைக்குள் சமைத்துக் கொண்டிருந்த அவனுடைய உம்மா வெளியே ஓடி வந்தபோது, கன்சுலுக்கு அடிவிழுவதைப் பார்த்தார். வாப்பா அடுத்த அடிக்கு கையை ஓங்கியபோது, உம்மா கன்சுலை அணைத்தவாறு, வாப்பாவைத் தடுத்தார்

"என்ன இது, மாட்டுக்கு அடிக்கிற மாதிரி பிள்ளையப் போட்டு அடிக்கிறீங்க"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாப்பாவின் கோபம் தணியவில்லை. அவர் 'போனை'க் கையில் பிடித்தவாறு அப்படியே கதிரையில் அமர்ந்து விட்டார். அவர் முகம் சிவந்து விட்டது. கோபத்தால் அவருடைய உதடுகளும், கன்னச் சதைகளும் துடித்தன. சற்று நேரம் அவர் அப்படியே இருந்தார். பின்னர் எழுந்து, கன்சுலின் சைக்கிளைப் பூட்டி திறப்பை எடுத்துக் கொண்டு அவனிடம் கூறினார்,

"இனி நீ 'சைக்கிளைத்' தொடக் கூடாது" பின்னர் அவர் தனது 'மோட்டார் சைக்கிளில்' வெளியே சென்று விட்டார்.

வாப்பா வெளியே சென்ற பின்னரும்கூட, கன்சுலின் உடல் நடுங்கிக் கொண்டுதான் இருந்தது. அவன் அழவில்லை. விக்கித்து விறைத்துப் போயிருந்தான். உம்மா அவனை அணைத்தவாறு கூட்டிச் சென்று கதிரையில் அமரச் செய்தார். வாப்பாவின் 'மோட்டார் சைக்கிள்' வெளியே சென்று விட்டதை உறுதிப்படுத்திய பின்னர், கன்சுலின் உம்மம்மாவும், அப்பாவும் (உம்மாவின் வாப்பா) தாங்கள் வசித்து வந்த சிறிய வீட்டில் இருந்து வெளியே வந்தார்கள். உம்மம்மா கன்சுலின் அருகில் அமர்ந்தவாறு அவனுடைய தலையைக் கோதினார். நடந்த விடயம் என்னவென்று அவர்களுக்கு தெரியவில்லை. தங்களுடைய மருமகனின் கோபமான சத்தமும், ஏதோ ஒன்று விழுந்த சத்தமும்தான் அவர்களுக்குக் கேட்டன.

"பிள்ள, என்னம்மா நடந்தது?"
உம்மம்மா கன்சுலின் உம்மாவிடம் கேட்டார்.

"அவங்க புதுசா ஒரு 'போன்' வாங்கி வந்தாங்க. அது சரியான விலை. அதை எடுக்க வேணாம் என்று இவனிடம் சொன்னாங்க. இவன் கேட்காம எடுத்து, கீழே போட்டு உடைச்சிட்டான்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வாப்பா சொன்னா கேட்கத்தானே வேணும். இப்ப என்ன நடந்திருக்குது பாருங்க. நீங்க வாப்பா சொன்னதை கேட்காதத்தால 'போனை' உடைச்சிட்டீங்க"

உம்மம்மா கன்சுலின் தோளைத் தடவியாறு சொன்னார்.

"நான் சும்மாதான் வெச்சிருந்தேன். வாப்பா அதட்டினதால தான் கைதவறி விழுந்திட்டு. அவங்க அதட்டாம இருந்திருக்க லாந்தானே"

கன்சுல் தேம்பியவாறு கூறினான்.

"நீ யார் சொன்னாலும் கேட்கிறதில்ல. இதுவரைக்கும் எத்தனை சாமான்களை நீ உடைச்சிருக்கிறாய்!"

உம்மா கொஞ்சம் சத்தமாகக் கூறினார். அவருடைய குரலிலும் கோபம் தெரிந்தது. கன்சுல் எதுவும் கூறவில்லை. அவன் இதுவரை எத்தனை சாமான்களை உடைத்திருக் கிறான் என்பது அவனுக்கு நன்கு தெரியும்.

"சரி பிள்ள. அவன் தெரியாம செய்திட்டான். இனி இப்படிச் செய்ய மாட்டான். நீ வா. நம்மட வீட்ட போவோம்"

உம்மம்மா கன்சுலைக் கூட்டிக் கொண்டு தாங்கள் இருந்த வீட்டிற்கு சென்றார். அவர்களின் பின்னே அப்பாவும் சென்றார். அவர் எதுவும் பேசவில்லை.

அன்று மத்தியானம் கன்சுல் சாப்பிடவில்லை. உம்மா வந்து கூப்பிட்டும் அவன் சாப்பிடப் போகவில்லை. உம்மம்மா தனது சோற்றைக் கொடுத்தபோதும் அவன் சாப்பிடவில்லை. அவனுக்கு பசிக்கவில்லை. வாப்பாவின் அதட்டலும், தான் 'போனை' உடைத்ததும், பின்னர் தனக்கு வாப்பா அடித்ததும் அவன் நினைவில் தோன்றி, அவனை வேதனைப்படுத்திக் கொண்டிருந்தன. தான் 'போனை' உடைக்கவில்லை, வாப்பா அதட்டினதால்தான் அது கைதவறி விழுந்து உடைந்தது என்பதில் அவன் உறுதியாக இருந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'வாப்பா அதட்டாமல் சொல்லியிருக்கலாந்தானே. நான் சும்மா 'போனை' பார்த்துக் கொண்டுதானே இருந்தேன்'

மீண்டும், மீண்டும் அவனுள் இந்த சிந்தனையே வந்து கொண்டிருந்தது. தான் தவறு செய்திருக்கிறோம் என்ற எண்ணம் அவனுக்கு வரவே இல்லை. கடைசியில், 'இனி இந்த வீட்டில் இருப்பதில்லை. வாப்பும்மாவின் (வாப்பாவின் உம்மா) வீட்டிற்கு போவோம்' என்று அவன் முடிவு செய்தான்.

பிற்பகல் மூன்று மணியளவில், உம்மம்மாவும், அப்பாவும் தூங்கி விட்டார்கள். கன்சுல் தன்னுடைய வீட்டிற்குப் போனான். உம்மாவும் உறங்கிக் கொண்டிருந்தார். உம்மாவுக்கு அருகில் அவனுடைய தம்பியும், தொட்டிலில் தங்கையும் உறங்கிக் கொண்டிருந்தார்கள். கன்சுல் தனது 'ஸ்கூல் பேக்கை' எடுத்துக் கொண்டு அடுத்த அறைக்குள் போனான். 'பேக்கிற்குள்' இருந்த புத்தகங்களையும் கொப்பிகளையும் கட்டிலில் எடுத்து வைத்தான். பின்னர் தனது உடைகளில் சிலவற்றை அந்த 'பேக்கிற்குள்' வைத்தான். அதன் பின்னர் அதைத் தோளில் தொங்க விட்டவாறு, தன்னுடைய 'கிரிக்கட்' மட்டையையும் எடுத்துக் கொண்டு, நான்கு கிலோமீற்றர் தூரத்தில் இருந்த தன்னுடைய வாப்பும்மாவின் வீட்டிற்கு நடக்கத் தொடங்கினான். அவன் முகம் வாடியிருந்தது. அவன் உள்ளம் கவலையோடு இருந்தது.

'வாப்பா அதட்டாமல் சொல்லியிருந்தால், 'போன்' உடைந்திருக்காதே'

இதுதான் அவனது கவலையாக இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# -2-

# கன்சுலின் குடும்பம்

கன்சுலின் குடும்பம் ஒரு அழகான, அளவான குடும்பம். கன்சுல், அவனுடைய வாப்பா, உம்மா, தம்பி, தங்கை மற்றும் உம்மம்மா, அப்பா. தம்பி இப்போது இரண்டாம் வகுப்பு படிக்கிறான். தங்கைக்கு சென்ற வாரம் தான் முதலாவது'பேர்த்டே' கொண்டாடினார்கள். கன்சுல் வித்தியாசமான ஆற்றல்கள் கொண்டவனாக இருந்தான். சிறுவயதில் அவன் வீட்டிற்குள் விளையாடிக் கொண்டிருக்கும் போது, அவனுடைய வாப்பாவின் 'மோட்டார் சைக்கிள்' வீதியின் வளைவில் திரும்பும்போது கன்சுல் கூறுவான்,"உம்மா, வாப்பா வாற"சற்று நேரத்தில் வாப்பா 'மோட்டார் சைக்கிளில்' வந்து இறங்குவார். அவ்வளவு தொலைவில் வருகின்ற வாப்பாவின் 'மோட்டார் சைக்கிள்' சத்தத்தை எப்படி அவன் அடையாளம் காண்கிறான் என்பது யாருக்கும் தெரியவில்லை. உம்மா சமைக்கும் சமையலை அவன் வாசனையைக் கொண்டே சொல்லி விடுவான்.

"உம்மா, பாரை மீன் ஆக்கிற"

"உம்மா, கோழி இறைச்சி ஆக்கிற"

"உம்மா, முருங்கக்காய் ஆக்கிற" இவ்வாறு வீட்டின் 'ஹோலில்' இருந்தவாறே உம்மா அன்று என்ன சமைக்கிறார் என்பதை மட்டுமல்ல, என்ன மீன் சமைக்கிறார், என்ன மரக்கறி சமைக்கிறார் என்பதையும் சொல்லி விடுவான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கன்சுலின் உம்மா அமைதியானவர். பிள்ளைகள் மீதும், கணவர் மீதும் தன்னுடைய உம்மா, வாப்பா மீதும் அன்பும் பாசமும் கொண்டவர். அவர் அதிகாலையில் எழுந்து தொழுது விட்டு, காலை ஒன்பது மணிவரை வீட்டு வேலைகளைச் செய்து முடிப்பார். பிள்ளைகள் பாடசாலைக்கும், கணவர் கடைக்கும் போன பின்னர், அழுக்கான ஆடைகளை கழுவிக் காயப் போடுவார். இடைக்கிடை தங்களது வீட்டுடன் ஒட்டியவாறு இருந்து சிறிய வீட்டிற்குள் வசிக்கும் தன்னுடைய உம்மாவையும், வாப்பாவையும் போய்ப் பார்த்து, அவர்களுக்குத் தேவையான வற்றை செய்து கொடுப்பார். இவற்றோடு தன்னுடைய கடைசிக் குழந்தையை பராமரிப்பது உம்மாவின் முக்கியமான வேலையாக இருந்தது. அவள் இப்போது தத்தித்தத்தி நடக்க ஆரம்பித்திருக்கிறாள். அத்துடன் அவள் கதைக்கவும் தொடங்கி விட்டாள். அவள் விழித்திருக்கும் நேரமெல்லாம், உம்மாவிடம் எதையாவது சொல்லிக் கொண்டும், கேட்டுக் கொண்டுமே இருப்பாள்.

அவளுக்குத் தண்ணீர் குடிக்க வேண்டும்போல் இருந்தால், தனது கைகளை வேகமாக அசைத்தபடி,

"ம்மா, நன்னா, நன்னா"என்று கேட்பாள். பசியெடுத்தால், "ம்மா, பால், ம்மா, பால்"என்று சத்தம் போடுவாள்.

வெளியே ஐஸ்பழம் விற்கும் வாகனமோ அல்லது, வேறு எதையாவது விற்பவர்களோ சத்தமிட்டுச் செல்லும்போது, அவள் தன்னுடைய சிறிய குதிரை வண்டிக்குள் இருந்தவாறு உம்மாவிடம் ஆர்வமாகக் கேட்பாள்,

"ம்மா, ன்ன? ம்மா ன்ன?"உம்மா தனது சின்ன மகளின் கேள்விகளுக்கு பதில் சொல்வதில் ஒருபோதும் சலிப்படை வதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அது! இப்பிடி மரக்கறி விற்கிறார்" என்று தன்னுடைய கையிலுள்ள ஒரு மரக்கறியைக் காட்டிச் சொல்வார். அல்லது,

"அது! இப்பிடி மீன் விற்கிறார்"

என்று சட்டிக்குள் இருக்கும் மீனைக் காட்டிக் கூறுவார். ஆனால் 'ஐஸ்'பழம் விற்கும் வாகனம் போகும்போது மட்டும்,

"அது! அது! இப்பிடி விறகு விற்கிறார்"

என்று அடுப்படியில் இருக்கும் விறகை எடுத்துக் காட்டுவார். உம்மா ஒவ்வொன்றையும் சொல்லும்போது, அவள் கையைத் தட்டி, தலையை ஆட்டி, வாயை விரியத் திறந்து சிரிப்பாள்.

இப்படி அன்பாகவும் அக்கறையாகவும் இருக்கின்ற உம்மா சில வேளைகளில், கோபம் கொண்டு கன்சுலை அடித்தும் இருக்கிறார். கன்சூல் வீட்டில் இருக்கும் வேளைகளில் எதையாவது செய்து கொண்டேயிருப்பான். 'ரிமோட்டை' கழற்றிப் பார்ப்பான். சுவரில் தொங்கும் மணிக்கூட்டை கழற்றுவான். வீட்டின் பின்புறம் நிற்கும் கொய்யா மரத்தில் ஏறுவான். தம்பியுடன் விளையாடிக் கொண்டிருக்கும்போது, தனக்குப் பிடிக்காததை அவன் செய்தால், அவனுக்கு அடித்து விடுவான். ஒரு தடவை அவன் தனது வீட்டின் கிணற்றுச் சுவரில் ஏறி விட்டான். அதைப் பார்த்ததும் அவனுடைய உம்மா விக்கித்து, விறைத்து நின்று விட்டார்.

இவ்வாறு கன்சுலின் செயல்கள் எல்லை மீறும்போது, அவனுடைய உம்மா, அவனது முதுகில் தனது கையால் நாலைந்து அடி போடுவார். உம்மா தனக்கு அடித்தாலும், கன்சுலுக்கு உம்மா மீது பெரும் பாசம். இரவில் உம்மாவின் இடுப்பில் கால்களைப் போடாவிட்டால் அவனுக்கு நித்திரை வராது.

கன்சுலின் வாப்பா கண்டிப்பானவர். அவர் எல்லாவற்றையும், ஒழுங்காகவும், முறையாகவும் செய்வார். காலையில் தொழுது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடித்ததும், வீட்டில் நிற்கும் தென்னை மரங்களுக்கும், மாமரங்களுக்கும், பூமரங்களுக்கும் தண்ணீர் ஊற்றுவார். பின்னர் காலை எட்டு மணிக்கு கடைக்குப் போவார். மத்தியானம் ஒரு மணியளவில் வீட்டிற்கு சாப்பிட வருவார். சாப்பிட்டு முடித்தவுடன், இரண்டு மணிக்கு மீண்டும் கடைக்குச் சென்று விடுவார். பின்னர் பிற்பகல் ஐந்து மணிக்கு வீட்டிற்கு வருவார். வரும்போது ஏதாவது சாப்பாட்டுச் சாமான் வாங்கி வருவார். பின்னர் மாலை ஆறுமணிக்கு கடைக்குப் போனால், இரவு எட்டு மணிக்கு திரும்பி வருவார்.

அவரிடம் ஒரு 'வேனும்', ஒரு 'மோட்டார் சைக்கிளும்' இருக்கின்றன. கடைக்குப் போய் வருவதற்கு அவர் 'மோட்டார் சைக்கிளைத்தான்' பயன்படுத்துவார். ஞாயிற்றுக் கிழமையில் அவர் கடை திறப்பதில்லை. அந்நாளில், மனைவியையும் பிள்ளைகளையும் 'வேனில்' ஏற்றிக் கொண்டு, நான்கு கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள தன்னுடைய உம்மாவின் வீட்டிற்குப் போவார். அங்கு இரவு உணவையும் சாப்பிட்டு விட்டுத்தான் வீடு திரும்புவார்கள். கன்சுலுக்கு வாப்பா மீது பயமும் மரியாதையும் இருக்கின்றன. அடிக்கடி அவனுக்கு விளையாட்டுப் பொருட்களும் சாப்பாட்டுச் சாமான்களும் வாங்கி வருவதால் அவர் மீது பிரியமும் இருக்கிறது.

கன்சுலின் தம்பி சரியான தொட்டாச் சிணுங்கி. அவனுக்கு அடிக்கவே தேவையில்லை. ஏதாவது சொன்னாலே போதும், அழுது விடுவான். அதனால், தம்பியை அழ வைத்ததற்காக கன்சுல் அடிக்கடி உம்மாவின் கையால் அடி வாங்கியிருக்கிறான்.

தம்பி பிறந்ததில் இருந்தே கன்சுலுக்கு அவனைப் பிடிக்கவில்லை. அவன் கன்சுலை விட வெண்மையாக இருந்தான். அவன் பிறந்ததன் பின்னர், குடும்பத்தில் இருந்தவர்களும், அந்த வீட்டிற்கு வந்து போனவர்களும், தம்பியையே கொஞ்சினார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம்பியைப் பற்றியே கதைத்தார்கள். உம்மாவும் தம்பியுடனேயே பெரும்பாலான நேரத்தைச் செலவிட்டார். கன்சுலுடன் கதைப்பதற்கு யாருக்கும் நேரம் கிடைக்கவில்லை. அவனுடன் கதைப்பதற்கு ஒருவருக்கும் விருப்பமும் இல்லை. இவனாகப் போய் அவர்களுடன் கதைத்தாலும், அவர்கள் முன்னர் போன்று அவனுடன் அன்பாகவும், பாசமாகவும் கதைக்கவில்லை. அவன் ஏதாவது கதைத்தாலும், 'ரீவி' பார்த்தாலும், உம்மாவும் மற்றவர்களும் அவனிடம் கூறினார்கள்,

"உஸ் சத்தம் காட்டாதே, தம்பி எழும்பி விடுவான்" எனவே, கன்சுலுக்கு தன் தம்பியை ஆரம்பத்தில் இருந்தே பிடிக்கவில்லை. அவன் மனதில் தம்பி மீது ஆத்திரமும் பகைமையும் தோன்றி வளர்ந்தன. ஒருநிலையில், தம்பிக்கு ஏதாவது செய்ய வேண்டும் என்ற உணர்வு அவனுக்குள் உருவாகி, தீவிரமடைந்தது. யாரும் தம்பிக்கு அருகில் இல்லாதபோது, கன்சுல் ஓடிச் சென்று அவனுடைய காலில் நுள்ளிவிட்டு வந்து விடுவான். அல்லது அவனுடைய தலையில் குட்டுவான். சிலவேளைகளில் அவனின் கன்னத்தைக் கிள்ளுவான். அந்த சந்தர்ப்பங்களில் தம்பி அழுவதைக் கேட்கும்போது, அவனுடைய மனதில் பெரும் மகிழ்ச்சி உண்டாகும். தம்பிக்கு அவன் இவ்வாறு செய்வதை உம்மா காணும்போது, அவனுக்கு அடி விழுந்தது. உம்மாவோ அல்லது வாப்பாவோ தன்னை அடித்தபோது, அவனுக்கு தம்பியின் மீது இன்னும் அதிகமாகக் கோபம் ஏற்பட்டது.

ஒருநாள், உம்மா தம்பியை மடியில் வைத்தவாறு ஊஞ்சலில் அமர்ந்திருந்தார். அப்போது, கன்சுல் உம்மாவிடம் சொன்னான்,

"உம்மா, நமக்கு தம்பி வேணாம். தம்பி வடிவில்ல. யாருக்காவது தம்பியைக் கொடுப்போம்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதைக் கேட்டதும் உம்மாவின் முகம் சட்டென்று மாறியதை கன்சுல் அவதானித்தான். பின்னர் உம்மா சிரித்துக் கொண்டு கூறினார்,

"தம்பி பாவம். அவன் சின்ன ஆள்தானே. கொஞ்சம் பெரிய ஆளா வளர்ந்ததும் கொடுப்போம்"

அந்தப் பதில் கன்சுலுக்கு மகிழ்ச்சியைக் கொடுத்தது. அடுத்த நாளில் இருந்து, எல்லோரும் கன்சுலுடன் முன்பு போன்று பழக ஆரம்பித்தார்கள். வாப்பா அவனுக்கு புதிதாக ஒரு மூன்று சக்கர 'சைக்கிள்' வாங்கி வந்தார். அதன் பின்னர், கன்சுலுக்கு தம்பி மீதான கோபமும், பகைமையும் குறையத் தொடங்கியன. இரண்டு வருடங்களுக்கு முன்னர் நடந்த ஒரு சம்பவம், தம்பி மீது கன்சுல் பாசம் கொள்ளும் நிலையை உருவாக்கியது.

இரண்டு வருடங்களுக்கு முன்னர், கன்சுலுக்கு கடுமையான காய்ச்சல் வந்தது. கூடவே இருமலும் ஏற்பட்டது. வைத்தியரிடம் காட்டி, மருந்துகளும் எடுத்தார்கள். ஆறு மணித்தியாலத்திற்கு ஒரு தடவை எடுக்க வேண்டிய குளிசைகளும், நான்கு மணித்தியாலத்திற்கு ஒருமுறை குடிக்க வேண்டிய திரவ மருந்தும் வாங்கி வந்தார்கள். கன்சுல் மருந்து குடிக்கத் தொடங்கிய அடுத்த நாள், காலையிலும், மத்தியானத்திலும், இரவிலும் கன்சுலின் தம்பி, உம்மாவிடம் சென்று,

"உம்மா, நானாக்கு குளிசை கொடுங்க"

"உம்மா நானாக்கு மருந்து கொடுங்க"

என்று உரிய நேரங்களில் சொல்லி வந்தான்.

அதைப் பார்த்ததும், தம்பிக்கு தன்மீது எவ்வளவு அக்கறையும், பாசமும் உள்ளன என்பதை கன்சுல் அறிந்து கொண்டான். அது அவனுள் ஒரு பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியது. தன் மனதில் இதுவரைக்கும் இல்லாத ஒரு உணர்வு தோன்றுவதை கன்சுல் உணர்ந்தான். அந்த உணர்வு, தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம்பி மீதான பாசமாக அவனுக்குள் மாறியது. அன்றில் இருந்து, கன்சுல் தன் தம்பியுடன் அன்பாகவும், பாசமாகவும் பழகினான். தன்னுடைய பொருட்களை தம்பிக்கு விளையாடக் கொடுத்தான். தம்பி பாடசாலைக்கு போகத் தொடங்கியதும், அவனைக் கன்சுல் தன்னுடன் கவனமாகக் கூட்டிச் சென்றான். தம்பிக்கு வாசிப்பதற்கும் எழுதுவதற்கும் சொல்லிக் கொடுத்தான்.

கன்சுலின் தங்கை பிறந்ததில் இருந்து, அவனுக்கு அந்தக் குட்டித் தங்கை மீது அளவு கடந்த பிடிப்பு உண்டாயிற்று. ரோசாப்பூ போன்று சிவப்பாகவும், பஞ்சு போன்று மென்மையாகவும் இருந்த அவளுடைய பாதங்களையும், கைகளையும் தொட்டுப் பார்ப்பது கன்சுலுக்கு புதிய அனுபவமாக இருந்தது. அவைகளைத் தொடும்போது, தனக்குள் குளிர்மையான ஒரு உணர்வு படர்வதை அவன் அறிந்தான். பாடசாலைக்கும், விளையாடுவதற்கும் செல்கின்ற நேரங்கள் தவிர, ஏனைய நேரம் முழுவதும் அவன் தன்னுடைய சின்னத் தங்கையின் அருகிலேயே இருந்தான். வெளிச்சம் கூடுதலாக இருக்கும்போது அவள் கண்களை இடுக்கிப் பார்ப்பதையும், காரணமின்றி அடிக்கடி சிரிப்பதையும் அவன் ஆவலோடு பார்த்தான். அவளுடைய செயல்கள் அனைத்தும் அவனுக்குப் புதுமையாக இருந்தன. அவளுடைய கைகளில் தன்னுடைய விரலை வைத்ததும், அவள் அதைப் பொத்திப் பிடிப்பாள். அப்போது கன்சுலுக்கு சந்தோசமாக இருக்கும். அவள் மெல்ல மெல்ல வளர்ந்து வந்தபோது அவனைப் பார்த்து சிரிப்பது, உம்மா தாங்கிப் பிடிக்க, அவனுடைய முதுகில் குதூகலத்துடன் குதிரை ஓடுவது, "நாணா நாணா" என்று அவனைக் கூப்பிடுவது, ஒவ்வொன்றையும் காட்டி என்னவென்று மழலை மொழியில் கேட்பது என எல்லாமே அவனுக்கு பிடித்திருந்தன.

கன்சுலின் உம்மம்மா மிகவும் மென்மையானவர். அவருக்கு கன்சுல் மீது அளவு கடந்த பாசம். தனது மகளுக்கு முதலாவதாகப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறந்த ஆண்பிள்ளை என்பதால் அவர் முழுப் பாசத்தையும் கொட்டி அவனை வளர்த்தார். அவனுக்காக அவர் எப்போதும் ஏதாவது உணவுப் பொருளை வைத்திருந்து கொடுப்பார். அடிக்கடி சில்லறைக் காசும் கொடுப்பார். உம்மா அவனை அடிக்கும் போதெல்லாம் ஓடிவந்து, உம்மாவைத் தடுத்து அவனை தன்னுடைய இருப்பிடத்திற்கு கூட்டிப் போய் விடுவார். கன்சுலுக்கும் உம்மம்மா மீது நிறைய பாசம் இருக்கிறது. அவன் வீட்டில் இருக்கும்போது அடிக்கடி "உம்மம்மா... உம்மம்மா" என்று கூப்பிட்டுக் கொண்டேயிருப்பான். இவர்கள் எல்லோரை யும் விட, கன்சுலுக்கு மிகவும் பிடித்தமானவர் அவனுடைய அப்பா. அவர் உயரமானவர். அவருடைய முகத்தில் இருந்த நரைத்த தாடியும் மீசையும் அவருக்கு அழகாய் இருந்தன. அவருக்கு நிறைய விடயங்கள் தெரிந்திருந்தன. அவர் கன்சுலுக்கு களிமண்ணிலும், பலகையிலும் விதம்விதமான உருவங்களையும் பொருட்களையும் செய்து கொடுப்பார். மிருகங்கள், பறவைகள், பழங்கள், காய்கள், வாகனங்கள் என ஏராளமான பொருட்களை அவர் அவனுக்குச் செய்து கொடுத்திருக்கிறார். அவர் செய்வதைப் பார்த்துப் பார்த்து, கன்சுலும் பலவற்றை செய்யப் பழகிக் கொண்டான். பாடசாலையில் ஆக்கவேலைகளில் கன்சுல்தான் எப்போதும் முதன்மையாக இருப்பான். குழுச் செயற்பாடுக ளிலும் கன்சுலின் குழுவில் இருப்பதற்கு சக மாணவர்கள் போட்டி போட்டு வருவார்கள். கன்சுல் கொண்டு வருகின்ற பொருட்க ளைப் பார்த்து, மாணவர்கள் மட்டுமின்றி, ஆசிரியர்க ளும் வியந்து போவார்கள். பாடசாலையில் ஆரம்ப வகுப்பிற்கான கண்காட்சி நடைபெற்றபோது, கன்சுல் கொண்டு வந்த பொருட்கள்தான் கூடுதலாக காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன.

கன்சுலுக்கு அப்பா மீது கூடுதலான பிரியம் ஏற்படுவதற்கு இன்னுமொரு முக்கிய காரணம் இருக்கிறது. அவர் அற்புதமாகக் கதைகள் சொல்வார். இரவில் கன்சுல் தூங்கப் போவதற்கு முன்னர், அப்பாவிடம் ஏதாவது ஒரு கதை கேட்டுவிட்டுத்தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வான். அவருக்கு நிறையக் கதைகள் தெரியும். பழங்காலத்து ராஜா, ராணி கதைகள், மந்திரக் கதைகள், மிருகங்கள், பறவைகள் பற்றிய கதைகள், வேட்டைக் கதைகள் என வியப்பூட்டும் கதை களை அவர் கூறுவார். இவை 'கார்டூனி'ல் வருகின்ற கதைகளை விட இன்பம் தருவனவாக இருக்கும். அவற்றைக் கேட்கும்போது, தானும் அந்தக் கதைகள் நிகழ்கின்ற இடங்களில் இருப்பது போன்று கன்சுல் உணர்வான்.

கன்சுல் தன்னுடைய அப்பாவை தனது 'மொடலாக' கொண்டிருந்தான். தான் பெரிய ஆளாக வந்ததும், அப்பாவைப் போல தாடி, மீசை வைத்திருக்க வேண்டும், துப்பாக்கியை எடுத்துக் கொண்டு காட்டிற்குப் போய் வேட்டையாட வேண்டும் என்றெல்லாம் நினைத்துக் கொள்வான். இப்பொழுது இதோ இவர்கள் அனைவரையும் விட்டு விட்டு, தாங்கள் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் செல்கின்ற தன்னுடைய வாப்பும்மாவின் வீட்டிற்கு கன்சுல் போய்க் கொண்டிருந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# -3-

# கன்சுலின் ஆசிரியர்கள்

கன்சுல் இதுவரை பாடசாலையில் மூன்று வகுப்பாசிரியர் களைப் பெற்றிருக்கிறான். முதலாம் வகுப்பில் இருந்து மூன்றாம் வகுப்புவரை ஒரு வகுப்பாசிரியர், பின்னர் நான்காம் வகுப்பில் இன்னொரு வகுப்பாசிரியர், அதன்பின் தற்போது ஐந்தாம் வகுப்பில் வேறொரு வகுப்பாசிரியர். இந்த ஐந்தாம் வகுப்பு ஆசிரியை, 'ஸ்கொலர்ஷிப்' பரீட்சை மூலம் புகழ்பெற்றவர். தான் கற்பிக்கின்ற மாணவர்களில் பலரை அப்பரீட்சையில் சித்தியடையச் செய்து வருவதால், அவர் நிரந்தரமாகவே ஐந்தாம் வகுப்பிற்கான வகுப்பாசிரியராக நியமிக்கப்பட்டு விட்டார்.

ஆனால், கன்சுலுக்கு இந்தக் 'கிளாஸ் ரீச்சரைப்' பிடிக்க வில்லை. ஏனென்றால், அவருக்கு எப்பொழுதும் படிப்பிப்பது ஒன்றுதான் வேலை. காலையில் பாடசாலைக்குச் சென்றால், பிற்பகல் நான்கு மணிவரை அவர் படிப்பிப்பார். பாடங்களை முறையாகவும் சரியாகவும் செய்யாவிட்டால், நீண்ட பிரம்பினால் அடிப்பார். பாடசாலை முடிந்த பின்னர், அவர் தெரிவு செய்துள்ள மாணவர்களை தனது வீட்டிற்கு அழைத்து, மாலை ஆறு மணியில் இருந்து இரவு ஒன்பது மணி வரை படிப்பிப்பார். அவ்வாறு தெரிவு செய்யப்பட்ட மாணவர்களில் கன்சுலும் ஒருவனாக இருந்தான். அது அவனுக்கு பெரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுமையாக அமைந்தது. கடந்த எட்டு மாதங்களாக அவன் விளையாட்டு மைதானம் பக்கமே போக முடியவில்லை. பாடசாலை முடிந்து வீட்டிற்கு வந்ததும், உடனே இன்னுமொரு 'ரீச்சரி'டம் 'ரியூசனு'க்குப் போக வேண்டும். அது முடிந்த கையோடு, 'கிளாஸ் ரீச்சரின்' வீட்டிற்குப் போக வேண்டும். இப்படி தொடர்ச்சியாகவும், ஓய்வின்றியும் படித்ததால், பரீட்சை நெருங்கும்போது கன்சுல் சோர்ந்து, களைத்து விட்டான்.

கன்சுலுக்கு ஒரு இடத்தில் அதிக நேரம் இருக்க முடியாது. அடிக்கடி எங்கேயாவது எழுந்து போக வேண்டும். அதனால் பாடசாலை நேரத்தில், தண்ணீர் குடிக்க வேண்டும், ஒன்றுக்கு போக வேண்டும், கைகழுவ வேண்டும் என்று ஏதாவது ஒரு காரணத்தை சொல்லி வெளியே வந்து விடுவான். இப்படிப் பழக்கப்பட்டு வந்தவனுக்கு, இப்போது வகுப்பில் மட்டுமின்றி, இரவில் 'கிளாஸ் ரீச்சரின்' வீட்டிலும் மணித்தியாலக் கணக்கில் அமர்ந்திருந்து படிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. இவையெல்லாம் சேர்ந்து அவனுக்கு 'கிளாஸ் ரீச்சரின்' மீது எரிச்சலை உண்டாக்கின. இதனால் அவன் 'கிளாஸ் ரீச்சரிடம்' அடிக்கடி எதையாவது கேட்டுக் கொண்டே இருப்பான்.

கன்சுலின் கேள்விகள் குழப்பமானதாக இருந்தபோதிலும், முட்டாள்தனமானவை அல்ல. ஒருமுறை கணித பாட நேரத்தில் அவன் 'ரீச்சரி'டம் கேட்டான்,

"ஏன் 'ரீச்சர்' எண்பதுக்குப் பிறகு தொன்னூறு என்று சொல்றோம்? இனித்தானே நூறு வரும். "ரீச்சருக்கு அவன் கேட்டது முதலில் புரியவில்லை.

"கன்சுல், நீ என்ன கேட்கிறாய்?"

"இல்ல 'ரீச்சர்'. நூறுக்குப் பிறகுதானே நூறை வைத்து எண்ணுகிறோம். இருநூறு, முன்னூறு என்று. தொன்னூறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூறுக்கு முன்னாலதான வருகுது. அப்படியென்றால் எப்படி தொன்னூறு என்று சொல்லலாம்?"

'ரீச்சரு'க்கு குழப்பம் ஏற்பட்டது. இவ்வளவு காலமாக எல்லோரும் அப்படித்தான் சொல்லி வருகிறார்கள். ரீச்சருக்கு விளக்கம் தெரியிவில்லை. வகுப்பில் இருந்த பிள்ளைகளும் குழப்பத்துடன் ஆளை ஆள் பார்த்துக் கொண்டார்கள். சட்டென்று 'ரீச்சர்' கன்சுலிடம் கேட்டாள்,

"சரி, அது பிழையென்றால் எப்படி சொல்லலாம் என்ற நீ சொல்லு பார்ப்போம்" கன்சுல் உடனே சொன்னான்,

"ஒன்பது"

"ஹேய், அப்ப ஒன்பதை எப்படிச் சொல்வது?" வகுப்பில் இருந்த ஒரு மாணவன் கேட்டான். அவனது கேள்வியால் வகுப்பில் சிரிப்பலை எழுந்தது.

"என்ன 'ரீச்சர்', அறுபது, எழுபது, எண்பது என்று சொல்வதுபோல ஒன்பது என்று சொல்லாம்தானே? ஆறு, ஏழு, எட்டுக்குப் பிறகு ஒன்பது என்று சொல்லாமல் வேறு ஒரு சொல்லைச் சொல்வோம். 'ரீச்சர்', தொன்னூறு மாதிரி, தொளாயிரம் என்று சொல்வதிலும் பிரச்சினை இருக்குது"

'ரீச்சர்' அவனுக்கு பதில் சொல்லவில்லை. உண்மையில் அவருக்கு பதில் தெரிந்திருக்கவில்லை.

இன்னொருமுறை தமிழ் பாடம் படிப்பிக்கும்போது, ரீச்சர் "விகடகவி" என்று கரும்பலகையில் எழுதிவிட்டு,

"பிள்ளைகள், இந்த சொல்லை முன்னால் இருந்து வாசித்தாலும், பின்னால் இருந்து வாசித்தாலும் ஒரே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதிரித்தான் வாசிப்பீர்கள். உங்களுக்கு இந்த மாதிரி சொற்கள் தெரிந்தால், எழுதிக் கொண்டு வந்து காட்டுங்க"என்று கூறினார். மாணவர்கள் எல்லோரும் கடுமையாக யோசித்தார்கள். சிலர் சில சொற்களை எழுதிப் பார்த்தார்கள். அவை சரி வராததால், மீண்டும் எழுதினார்கள்.

கன்சுல் தனது உதட்டில் பேனையால் தட்டியவாறு சற்று நேரம் யோசித்தான். பின்னர் மளமளவென்று எழுதத் தொடங்கினான். சிறிது நேரத்தில் அவன் எழுதி முடித்து விட்டு, முதல் ஆளாக 'ரீச்சரி'டம் கொப்பியைக் கொண்டு போய்க் காட்டினான். மற்ற மாணவர்கள் கன்சுலை ஆச்சரியத்துடன் பார்த்தார்கள். கன்சுல் எழுதியவற்றை வாசிக்க ஆரம்பித்த ரீச்சரின் விழிகள் முதலில் வியப்பால் விரிந்தன. பின்னர் அவரது முகத்தில் புன்னகை தோன்றியது. இதோ, கன்சுல் எழுதிய அந்த சொற்கள்!

| | |
|---|---|
| திகதி | பாப்பா |
| மாமா | தாத்தா |
| காக்கா | சாச்சா |
| டாட்டா | சீச்சீ |
| பீப்பீ | லாலலா |
| கிக்கி | தித்தி |
| மிம்மி | காமுகா |
| திருமுருதி | யாரையா |
| வாழுவா | வாடுவா |
| பூப்பூ | சரிகரிச |
| மாறுமா | கும்கு |
| விபவி | குக்கு |

அவர்களின் வகுப்பில் ஆங்கிலம் கற்பிக்கவென ஒரு ஆங்கில ஆசிரியை ஒவ்வொரு நாளும் வருவார். அவரிடமும் கன்சுல் அடிக்கடி கேள்விகள் கேட்பான். ஒருமுறை அவன் "ரீச்சர், என்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெயரை தமிழில் எழுதினா நாலு எழுத்துகள்தானே இருக்குது. ஆங்கிலத்தில் எழுதினால் ஏன் 'ரீச்சர்' ஆறு எழுத்துகள் வருகுது?"

'ரீச்சர்' அவன் பெயரை கரும்பலகையில், **கன்சுல்** என்று தமிழிலும், **Kansul** என்று ஆங்கிலத்திலும் எழுதினார். அவன் சொன்னதுபோல் ஆங்கிலத்தில் ஆறு எழுத்துகள் இருந்தன. ஆனால் 'ரீச்சரு'க்கு எப்படி இதை விளங்கப்படுத்துவது என்று தெரியவில்லை. இறுதியில் அவர்,

"அது! ஆங்கிலத்தில் அப்படித்தான் எழுத வேண்டும்"
என்று கூறினார். கன்சுல் கரும்பலகைக்கு அருகில் வந்து, **knsl** என்று எழுதிவிட்டு,

"ஏன் 'ரீச்சர்' இப்படி எழுதினால் பிழையா?
எனக் கேட்டான். ரீச்சருக்கு என்ன சொல்வது என்று தெரியவில்லை.

"சரி, வகுப்பை குழப்பாமல் போய் இரு"
என்று அதட்டலாகக் கூறினார்.

இன்னொரு நாள், அங்கில பாட நேரத்தில் கன்சுல் கரும்பலகையில், **ground** என்றும் **gem** என்றும் எழுதி விட்டு,

"ரீச்சர், இந்த இரண்டையும் எப்படி 'ரீச்சர்' வாசிப்பது?"
எனக் கேட்டான். 'ரீச்சர்' அவனை சற்று முறைத்துப் பார்த்தார். பின்னர்,
"கிரௌண்ட், ஜெம்"
என்று வாசித்தார். உடனே கன்சுல்,

"ரீச்சர், இரண்டு சொற்களிலும் முதல் எழுத்து **ஜீ** தானே. அப்படியென்றால், இரண்டு சொற்களிலும் **ஜீ**யை ஒரே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதிரித்தானே உச்சரிக்கணும். நீங்க வேற மாதிரி உச்சரிக்கிறீங்களே ரீச்சர்."

இவ்வாறு வித்தியாசமாக உச்சரிப்பதை எப்படி விளங்கப்படுத்துவது என்று 'ரீச்சரு'க்கு புரியவில்லை.

"அது... ஆங்கிலத்தில் இப்படித்தான் வேற வேற மாதிரி உச்சரிக்க வேண்டும். படித்துக் கொண்டு போகும்போது உனக்கு அது விளங்கும்"

இப்படியெல்லாம் கேள்விகள் கேட்டாலும், கன்சுல் படிப்பில் கெட்டிக்காரனாக இருந்தான். சிக்கலான விடயங்களை அவனால் சுலபமாக புரிந்து கொள்ள முடிந்தது. அதனால் 'ஸ்கொலர்ஷிப்' பாடங்களை அவன் சிறப்பாக செய்தான். ஆசிரியர்களுக்கு அவனது கேள்விகளும், வகுப்பில் இருந்து அடிக்கடி அவன் வெளியே செல்வதும் குழப்பத்தை ஏற்படுத்தினாலும், அவனுடைய கெட்டித்தனத்தின் காரணமாக அவனை எல்லோரும் விரும்பினார்கள்.

கன்சுல் விளையாட்டிலும் கெட்டிக்காரனாக இருந்தான். 75 மீற்றர், 100 மீற்றர் ஓட்டங்களிலும் நீளம் பாய்தலிலும் அவன்தான் முதலாம் இடங்களைப் பெற்று வந்தான். தலையை இருபுறமும் ஆட்டியவாறு அவன் ஓடுவதைப் பார்க்கும்போது சிரிப்பாக இருக்கும். ஆனால், குருவி பறப்பதைப் போன்று மிக விரைவாக அவன் ஓடி முடித்து விடுவான். அவனுடைய ஓட்டத்தையும், பாய்ச்சலையும் பார்த்து, அவனுடைய இல்லத்தை சேர்ந்த ஆசிரியர்களும், உடற்பயிற்சி ஆசிரியரும் அவன் மீது, பெரும் பிரியத்துடன் இருந்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## -4-

# கன்சுலின் நண்பர்கள்

கன்சுலுக்கு நண்பர்கள் அதிகமாக இருந்தார்கள். அவன் யாருடனும் எளிதில் 'பிரெண்டாகி' விடுவான். வகுப்பில் அனைவரும் அவனுக்கு நண்பர்கள்தான். ஒவ்வொரு பாடத்திலும் அவன் வேறுவேறு குழுக்களில் சேர்ந்து விடுவான். அவன் குறுக்குக் கேள்விகள் கேட்டாலும், வகுப்பில் இருந்து அடிக்கடி வெளியே போனாலும் ஒவ்வொரு குழுவிலும் உள்ள ஏனைய மாணவர்களுக்கு அவனைப் பிடித்திருந்தது. அதற்கு மிக முக்கியமான காரணம், அவன் யாருடனும் சண்டை பிடிப்பதில்லை. யாரையும் கிண்டல் செய்வதில்லை. பட்டப் பெயர்கள் சொல்லி அழைப்பதில்லை. இவற்றை விட குழுச் செயற்பாடுகளில் அவன் முதல் ஆளாக முன்நிற்பதால், அவனை எல்லா மாணவர்களுக்கும் பிடித்திருந்தது. கன்சுல் அழகாக ஓவியங்களும் வரைவான். வகுப்பிலுள்ள எல்லா மாணவர்களின் கொப்பிகளிலும் அவன் வரைந்த ஏதாவது ஒரு படம் இருக்கும்.

பாடசாலைக்கு வெளியேயும் அவனுக்கு நிறைய நண்பர்கள் இருந்தார்கள். பின்னேரங்களில் 'கிரிக்கட்' விளையாடும்போது, அவனுடைய 'ரீமில்' இருப்பதற்கு எல்லோரும் விரும்புவார்கள். அவன் சகலதுறை ஆட்டக்காரனாக இருந்தான். அவன் சிறப்பாக 'பெட்' பண்ணுவான், வேகப் பந்து, சுழற்பந்து என இருமுறை களிலும் அவன் பந்து வீசுவான். வேகமாக ஓடி 'ரன்' எடுப்பான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரும்பாலும் அவன் விளையாடுகின்ற 'ரீம்'தான் வெற்றி பெறுவது வழக்கம். அதனால் எல்லோருமே அவனுடைய 'ரீமில்' இருக்க விரும்பினார்கள்.

விடுமுறை நாட்களில், கன்சுல் பிற இடங்களில் உள்ள சிறுவர்களுடன் 'மெட்ச்' விளையாடுவதற்கு ஏற்பாடுகள் செய்வான். இத்தகைய 'மெட்ச்'கள் மிகவும் விறுவிறுப்பான வையாக இருக்கும். பொதுவாக விடுமுறை நாட்களில், விளையாட்டு மைதானத்திற்குள் கன்சுலின் வயதை ஒத்தவர்கள் விளையாட முடியாது. ஏனெனில், பெரிய மாணவர்களும், பெரிய ஆட்களும் மைதானத்தின் வெவ்வேறு இடங்களில் 'மெட்ச்' விளையாடுவார்கள். அதனால், கன்சுலும் நண்பர்களும், மைதானத்தின் ஓரத்திலோ அல்லது வெறுமையாக இருக்கின்ற வேறு இடங்களிலோ 'மெட்ச்' விளையாடுவர்கள். எங்கு விளையாடினாலும் 'மெட்ச்' விறுவிறுப்பாகவே இருக்கும்.

கன்சுல் 'மெட்ச்' விளையாடும்போது அணிவதற்காக தனியான 'சொக்ஸ்'கள் வைத்திருந்தான். அவற்றை அணிந்த வாறும், முழங்கால்களைச் சுற்றி பழைய துணியால் வரிந்து கட்டியவாறும்தான் அவன் கிரிக்கட் விளையாடுவான். 'மெட்ச்' தொடங்கி விட்டால் கூச்சலும், ஏச்சுமாகத்தான் இருக்கும்.

"டேய், நல்லா 'பீல்ட்' பண்ணணும் சரியா?"
" 'போலை' பாத்துப் போடு"
"நல்லா 'பெட்' பண்ணணும்"
"டேய், பிடி... பிடி. சே! விட்டுட்டாண்டா"

இப்படி ஒவ்வொருவரும் சத்தமிட்டுக் கொண்டும், ஏசிக் கொண்டும், கோபித்துக் கொண்டும் இருப்பார்கள். ஆனால் கன்சுல் எதுவும் பேச மாட்டான். அவன் தன்னுடைய காரியத்தில் கவனமாக இருப்பான். அவன் 'பீல்ட்' பண்ணும்போது, அவனைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாண்டி ஒரு பந்தும் போகாது. விளையாடும் இடத்தில் துள்ளிக் கொண்டும், சுறுசுறுப்பாகவும் இருப்பான். அவனுடைய வாயில் இருந்து, "டேய்" என்பது போன்ற சொற்களோ அல்லது கூடாத சொற்களோ வெளிப்படுவதில்லை. அவனுக்கு விளையாட்டில் வெற்றி, தோல்வி முக்கியமில்லை. தான் சிறப்பாக விளையாட வேண்டும், விளையாட்டு சிறப்பாக இருக்க வேண்டும் என்பதுதான் அவனுடைய ஒரே நோக்கமாக இருக்கும்.

அவர்கள் விளையாடும்போது, பத்து 'ஓவர்கள்' மெட்ச்தான் விளையாடுவார்கள். நான்கு 'விக்கட்டுகளைக்' கைப்பற்றியதும், எழுபத்தி இரண்டு 'ரன்'களை எடுத்ததும்தான் கன்சுலின் சிறப்பான பெறுதியாக இருக்கிறது. நூறு 'ரன்'கள் எடுப்பதும், ஐந்து 'விக்கட்டுகளை' வீழ்த்த வேண்டும் என்பதும் அவனுடைய இலட்சியமாக இருந்து வருகிறது. அதற்காக அவன் கடுமையாக முயற்சித்து வருகிறான். இப்போது புது 'பெட்' வாங்கியதில் இருந்து, அதைக் கொண்டு நூறு 'ரன்'களை அடிக்க வேண்டும் என்று அவன் ஒவ்வொரு நாளும் துடித்துக் கொண்டு இருக்கிறான்.

இதோ, ஆள்நடமாட்டமும், வாகனப் போக்குவரத்துகளும் குறைவாக இருந்த அந்த நேரத்தில், பிரதான வீதியின் வலதுபுறமாக, கன்சுல் தனது வாப்பும்மாவின் வீட்டிற்குப் போய்க் கொண்டி ருக்கிறான். இன்று அவன் தனது நண்பர்களுடன் விளையாட மாட்டான். அவர்கள் நிச்சயம் இவனுக்காகக் காத்திருப்பார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*ஹலோ பிள்ளைகள்!*

*அடுத்த அத்தியாயத்தில் கன்சுலுக்கு ஒரு ஆபத்து நிகழ இருக்கிறது. அத்தகைய ஒரு ஆபத்தான நிலை தனக்கு ஏற்படும் என்று கன்சுல் கனவிலும் நினைத்திருக்கவில்லை.*

*நீங்கள் அடுத்த அத்தியாயத்தை வாசிக்கும் முன்னர், கன்சுலுக்கு ஏற்படவுள்ள அந்த ஆபத்து என்னவாக இருக்கும் என்று ஊகித்துப் பாருங்கள். உங்களுடைய ஊகம் எவ்வளவு தூரம் சரியானது என்பதை, இக்கதையை தொடர்ந்து வாசித்து நீங்களே சரிபார்த்துக் கொள்ளுங்கள்!*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## -5-

# கன்சுல் வழிகாட்டுகிறான்

கன்சுல் வீதிவழியே கவலையுடன் போய்க் கொண்டிருந்தான். அவனுக்குப் பசியாக இருந்தது. இன்று சனிக்கிழமை என்பதால், காலையில் உம்மா அவித்த பிட்டை சாப்பிட்டிருந்தான். அதன் பின்னர் அவன் எதுவும் சாப்பிடவில்லை. உம்மாவும், உம்மம்மாவும் எவ்வளவு வற்புறுத்தியும் அவன் மதிய உணவு சாப்பிடவில்லை. அப்போது இருந்த மனநிலையில் அவனுக்கு பசிக்கவும் இல்லை. இப்போது மூன்று மணி தாண்டிவிட்ட நிலையில், அவனுடைய வயிறு கிள்ளியெடுத்தது. இனி வாப்பும்மாவின் வீட்டுக்குப் போய்த்தான் ஏதாவது சாப்பிட வேண்டும் என்று அவன் நினைத்துக் கொண்டான்.

கவலையுடனும், பசியுடனும் போய்க் கொண்டிருந்த கன்சுலுக்கு எதிரே வந்த ஒரு 'வேன்', வேகத்தைக் குறைத்து அவன் அருகில் வந்து நின்றது. கன்சுல் அந்த 'வேனை'ப் பார்த்தான். அது கறுப்பு நிறத்தில், பளபளவென்று மின்னிக்கொண்டிருந்தது. அது அவனுடைய வாப்பா வைத்திருக்கின்ற 'வேனை' விட வித்தியாச மாக இருந்தது. வாப்பாவின் 'வேனின்' முன்புறம் நீட்டிக் கொண்டு இருக்கும். ஆனால் இந்த 'வேனின்' முன்புறம் தட்டையாக இருந்தது. 'டிரைவர்' 'சீட்டுக்கு' அருகில் அமர்ந்திருந்த ஒருவர், ஜன்னல் கண்ணாடியைத் தாழ்த்தி விட்டு, அவனைப் பார்த்துச் சிரித்தார். அவர் சிறிய மீசையும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறுந்தாடியும் வைத்திருந்தார். அவருடைய இடது கன்னத்தில் ஒரு தடித்த மச்சம் இருந்தது. அவர் கன்சுலிடம் ஒரு துண்டு 'பேப்பரை' நீட்டிக் கேட்டார்,

"புதே, மே கடய கொஹ தியனவா கியலா கியன்ட புலுவங்த?"

('மகன், இந்தக் கடை எங்கே இருக்குது என்று சொல்லேலுமா?')

கன்சுலுக்கு அவர் கேட்டது எதுவும் புரியவில்லை. 'புதே' என்ற சொல் மட்டும்தான் அவனுக்குத் தெரிந்திருந்தது. அவன் மழங்க விழித்தபடி எதுவும் கூறாமல் நின்றான்.

"ஆங், தம்பிக்கு சிங்களம் தெரியேல என்ன? இந்த கடை எங்க இருக்குது என்று சொல்லுங்க தம்பி?"

பின் 'சீட்டில்' இருந்த ஒருவர் கதவைத் திறந்தவாறு, அவனிடம் அழகாகவும், மென்மையாகவும் தமிழில் கதைத்தார். அவர் அந்த 'பேப்பரை' அவனிடம் நீட்டினார். அதை கன்சுல் பார்த்தான். 'நியூ லங்கா ஸ்டோர்' என்ற பெயர், சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் எழுதப்பட்டிருந்தது. அவனுக்கு அந்தக் கடை தெரியும். அவன் போகும் வழியில்தான் அது இருந்தது.

"இந்த 'ரோட்டால' நேரப் போய், இடது பக்கம் திரும்பி கொஞ்ச தூரம் போனால் இந்தக் கடை வரும்"

கன்சுல் கையை நீட்டி அக்கடைக்குச் செல்லும் வழியை அவர்களுக்கு கூறினான்.

"தம்பி, எங்களோட வந்து ஒருக்கா கடையைக் காட்டுங்கோ தம்பி"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனுடன் தமிழில் கதைத்தவர் அவனைக் கேட்டார். அவன் போகும் வழியிலேயே கடையும் இருந்ததால், கன்சுல் அந்த 'வேனின்' பின்புறத்தில் ஏறினான். 'வேனிற்குள்' 'ஏசி' போடப்பட்டிருந்ததால் குளுமையாக இருந்தது. அது புத்தம்புதிய 'வேன்'. 'வேனின்' பின்புறம் இன்னும் இருவர் அமர்ந்திருந்தார்கள். தனியாக இருந்த ஒருவருக்கு அருகில் கன்சுல் அமர்ந்து கொண்டான். 'சீட்' மெத்தென்று இருந்தது. அவனுக்கு அருகில் அமர்ந்திருந்தவர் 'சொக்லேட்' சாப்பிட்டுக் கொண்டிருந்தார். கன்சுல் அமர்ந்ததும், அவர் இன்னொரு 'சொக்லேட்டை' எடுத்து அவனிடம் நீட்டினார்.

"ம். சாப்பிடுங்க தம்பி"

'சொக்லேட்டைப்' பார்த்ததும், கன்சுலின் நாவில் உமிழ்நீர் சுரந்தது. கடும் பசியுடன் இருந்த அவன் அதை பரபரவென்று சாப்பிட்டான். அந்த 'சொக்லேட்' இலேசான கசப்புடன், நல்ல சுவையாக இருந்தது.

அவன் சாப்பிட்டுக் கொண்டிருக்கும்போது, 'வேன்' 'ரிவேஸ்' எடுத்து, கன்சுல் போகும் வழியில் திரும்பியது.

"நேரப் போங்க"

என்று கன்சுல் சொல்லிக் கொண்டிருக்கும்போதே, அவன் தலை சுழல்வது போன்றிருந்தது. கண்கள் இருண்டு, மயக்கம் வருவதுபோல் உணர்ந்தான். அதன் பின்னர் அவனுக்கு எதுவும் தெரியவில்லை. 'வேன்' அவன் கூறியதுபோல் இடது பக்கம் திரும்பாமல், வலது பக்கமாக திரும்பி, அந்த ஊரை விட்டு வேகமாக ஓடத் தொடங்கியது.

சிறிது நேரத்தில், 'வேனின்' இடதுபுற ஜன்னல் திறக்கப்பட்டு, கன்சுலின் 'கிரிக்கட்' மட்டை வெளியே வீசப்பட்டது. அந்த மட்டை வீதியோரமாக புற்களுக்குள் போய் விழுந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# -6-

# கன்சுலைக் காணவில்லை

கன்சுலின் உம்மா நித்திரையில் இருந்து எழுந்து, பின்னேரத் தொழுகையை முடித்தார். பின்னர் வீட்டையும், முற்றத்தையும் கூட்டினார். அப்போதுதான் அவருக்கு கன்சுல் இன்னமும் சாப்பிடவில்லை என்ற எண்ணம் மனதில் உறைத்தது. உடனே அவர் தன்னுடைய உம்மா இருந்த இடத்திற்குப் போய், அவரிடம் கேட்டார்,

"உம்மா, கன்சுல் எங்கம்மா?"

"இங்கதான் இருந்தான். நான் படுத்து எழும்பிப் பார்க்கக்குள்ள அவனைக் காணேல."

வெற்றிலை சப்பிக் கொண்டிருந்த அவருடைய உம்மா பதில் கூறினார்.

"வீட்டையும் காணேல. எங்க போயிருப்பான்?" உம்மா கவலையுடனும், யோசனையுடனும் மீண்டும் வீட்டுக்கு வந்தார். கன்சுல் வழக்கமாக தன்னுடைய 'கிரிக்கட்' மட்டையை வைக்கின்ற சுவர் மூலையைப் பார்த்தார். அங்கே அதைக் காண வில்லை.

'சாப்பிடாமலா விளையாடப் போயிட்டான்?'

உம்மாவிற்கு கவலை கூடியது.

'பாவம், அவன் பசியுடன் இருப்பான்'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னர் அவர் தனது கணவருக்கு 'போன்' பண்ணினார்.

"இங்க, கன்சுல் சாப்பிடாமல் விளையாடப் போயிட்டான். ஒருக்கா 'கிரவுன்டு'க்குப் போய் அவனைக் கூட்டி வாங்க"

"சரி"

வாப்பா கூறிவிட்டு, 'போனை' 'ஒப்' பண்ணினார். அவருக்கும் கவலையாகத்தான் இருந்தது. தான் மத்தியானம் கன்சுலுடன் நடந்து கொண்ட முறை சரியல்ல என்பதை அவர் உணர்ந்திருந் தார். தான் சத்தம் போட்டு அதட்டாமல் சொல்லியிருந்தால், கன்சுல் 'போனை' மேசை மேல் வைத்திருப்பான், கீழே போட்டிருக்க மாட்டான் என்று அவர் வேதனைப்பட்டார். இப்போது அந்த 'போனை' அவர் திருத்தி விட்டார். அதன் திரையில்தான் மெல்லிய வெடிப்பு சிறு கோடாக தெரிகிறது. எனினும் அது வேலை செய்கிறது. கடையில் இருந்தவர்களிடம் கடையைப் பார்த்துக் கொள்ளும்படி சொல்லி விட்டு, அவர் 'மோட்டார் சைக்கிளை' எடுத்துக் கொண்டு பொது விளையாட்டு மைதானத்திற்குச் சென்றார்.

கன்சுலின் உம்மா தூங்கி எழுந்த இரண்டாவது மகனை 'ரீவி' பார்க்கும்படி சொல்லிட்டு, இன்னமும் உறங்கிக் கொண்டிருந்த மகளுக்குக் கொடுப்பதற்கு 'செரிலக்' கரைத்தார். பின்னர் மாலை நேர தேனீருக்காக 'கப்'களை கழுவி வைத்து விட்டு, அடுப்பில் தண்ணீரைக் கொதிக்க வைத்தார். அது கொதிப்பதற்கு இடையில், காலையில் கழுவிப் போட்ட ஆடைகளை கொடியில் இருந்து எடுத்து, உள் அறைக்குள் கொண்டு போய் கட்டிலில் போட்டார்.

அப்போதுதான், கன்சுலின் புத்தகங்கள் கட்டிலில் கிடப்பதைப் பார்த்தார். அவனுடைய 'ஸ்கூல் பேக்'கைக் காண வில்லை. நிமிர்ந்து, அவனுடைய உடுப்புகள் வைக்கும் 'அலுமா ரி'யைப் பார்த்தார். அது திறந்து கிடந்தது. அதன் அருகில் போய்ப் பார்த்தபோது, அதற்குள் இருந்த கன்சுலின் உடைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலவற்றைக் காணவில்லை. கன்சுல் உடுப்புகளை எடுத்துக் கொண்டு எங்கோ போய் விட்டான் என்பதை உம்மா உணர்ந்து கொண்டார். அவருக்கு சற்று பதற்றமாக இருந்தது. இந்த விடயத்தை கணவரிடம் சொல்ல வேண்டும் என்ற எண்ணத்துடன் அவர் அறையை விட்டு வெளியே வந்தார். அப்போது அவருடைய கணவர் வாசலில் 'மோட்டார் சைக்கிளை' நிறுத்தி விட்டு கீழே இறங்கியவாறு,

"கன்சுல் 'கிரவுன்டில்' இல்லை. அவன் இன்றைக்கு விளையாட வரவில்லையாம்"

என்று கூறினார்.

"நானும் இப்பதான் பார்த்தேன். அவன் கொஞ்ச உடுப்புகளை எடுத்துக் கொண்டு எங்கேயோ போய்த்தான்"

என்று கன்சுலின் உம்மா கூறியபோது, வாப்பாவும் சற்றுப் பதற்றமடைந்தார்.

"எங்கே போயிருப்பான்?"

வாய்க்குள் முணுமுணுத்தவாறு அவர் சிறிது நேரம் யோசனையில் இருந்தார். பின்னர் தன்னுடைய உம்மாவின் வீட்டிற்கு 'கோல்' பண்ணினார். அவருடைய மூத்த தங்கை அவருக்குப் பதிலளித்தாள்.

"கன்சுல் அங்கே வந்தானா?"

நானாவின் குரலில் தெரிந்த பரபரப்பை அவருடைய தங்கை அவதானித்தாள்.

"இல்ல நானா, இங்க வரேல. ஏன், என்ன விசயம்?"

கன்சுலில் வாப்பா நடந்தவற்றை சுருக்கமாகக் கூறினார்.

"கன்சுல் வந்தால் உடனே 'போன்' பண்றேன்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கை கூறியதும் அவர் 'போனை' நிறுத்தினார். அவர் மீண்டும் யோசனையில் ஆழ்ந்தார். பின்னர் நேரத்தைப் பார்த்தார். பிற்பகல் 4.47 என 'போன்' காட்டியது.

'இவ்வளவு நேரத்திற்கு எங்கே போயிருப்பான்?'

தனது மனைவி கொண்டு வந்து வைத்த தேனீரை குடித்தவாறு, மனைவியைப் பார்த்தார். மனைவியின் முகத்திலும் கவலையும், யோசனையும் நிறைந்திருந்தன.

"ஏங்க, எங்கேயாவது போய்ப் பாருங்களேன்"

"சரி பார்க்கிறேன். கொஞ்சம் பொறு"

கூறிவிட்டு, அவர் தன்னுடைய நெருங்கிய நண்பர்களில் ஒருவருக்கு 'போன்' பண்ணினார். நடந்த விடயத்தை அவரிடம் கூறிவிட்டு,

"அந்தப் பக்கம் கன்சுல் வந்தால், ஒருக்கா எனக்குச் சொல்லு" என்று கேட்டுக் கொண்டார். இதேபோன்று இன்னும் இரண்டு நண்பர்களுக்கும் 'போன்' பண்ணி, விடயத்தைக் கூறிவிட்டு, தனது 'மோட்டார் சைக்கிளில்' கன்சுலைத் தேடி அவர் புறப்பட்டார். அவர் போகும்போது, உறக்கத்தில் இருந்து எழும்பி விட்ட தன்னுடைய மகளை இடுப்பில் வைத்தவாறு, கன்சுலின் உம்மா வாசல் வரை வந்தார். அவர் முகம் கவலையால் நிரம்பியிருந்தது.

மாலை ஆறு மணியாகி விட்டது. கன்சுலின் வாப்பா அந்த ஊரின் சகல இடங்களிலும் கன்சுலைத் தேடிப் பார்த்தார். அவனைக் காணவில்லை. யாராவது அவனைப் பார்த்தார்களா என்று விசாரித்துப் பார்த்தார். நான்கு பேர் அவனைக் கண்டதாகக் கூறினார்கள். பிற்பகல் மூன்று மணியளவில், முதுகில் 'பேக்கும்' கையில் 'பெட்டுமாக' அவன் நடந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போவதை அவர்கள் பார்த்திருந்தார்கள். அவன் போய் மூன்று மணித்தியாலங்களாகியும், அவனைப் பற்றிய வேறு ஒரு தகவலும் இதுவரை கிடைக்கவில்லை. கன்சுலின் வாப்பாவிடம் இதுவரை நிறைந்திருந்த கவலை மறைந்து, அவர் மெல்ல மெல்ல அச்சமடைந்தார்.

'கன்சுலுக்கு என்ன நடந்தது?'

அவர் தொண்டை கட்டிக் கொண்டது. உள்ளத்தில் நடுக்கம் ஏற்பட்டது. அவருடைய நண்பர்கள் சிலர் அவருடன் சேர்ந்து கொண்டார்கள். அவர்கள் அவருக்கு ஆறுதல் கூறினார்கள்.

"பயப்படாதே மச்சான். அவன் எங்கும் போயிருக்க மாட்டான். எங்கேயாவது மரத்திற்குக் கீழ இருந்து திரும்பி வருவான்"

"அவன் உன்னை பயம் காட்ட நினைத்திருக்கிறான். அதுதான் எங்கேயோ ஒளிந்து கொண்டிருக்கிறான்"

"இன்னும் கொஞ்ச நேரம் பார்ப்போம். எல்லாம் சரியா வரும்"

ஒவ்வொவரும் ஒவ்வொரு விதமாக ஆறுதல் கூறியபோதிலும், கன்சுலின் வாப்பாவின் உள்ளம் அமைதியடையவில்லை. நேரம் செல்லச் செல்ல அவரின் அச்சம் அதிகரித்தது. அவர் தன்து நண்பர்களுடன் தன்னுடைய வீட்டிற்குத் திரும்பினார். அவருடைய 'மோட்டார் சைக்கிள்' சத்தம் கேட்டதும், வீட்டில் இருந்த அனைவரும் வெளியே வந்து விட்டார்கள். கன்சுலின் உம்மா இடுப்பில் பிள்ளையுடன் கடப்படிக்கு வந்து விட்டார்.

"கன்சுலைக் கண்டீங்களா?"

தனது கணவரின் முகத்தைப் பார்த்ததும் அவருக்கு நிலைமை விளங்கி விட்டது. அவர் அங்கேயே அழத் தொடங்கி விட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஏங்க, கன்சுல் எங்கே? அவனுக்கு என்ன நடந்தது?"

"அழாதே, அழாதே. ஒன்னும் நடந்திருக்காது. அவன் எங்கேயோ ஒளிந்து கொண்டிருக்கிறான்"

கன்சுலின் வாப்பா ஆறுதல் சொன்னார். எனினும் அவருடைய குரல் தைரியமாகவும் நம்பிக்கையாகவும் ஒலிக்கவில்லை. தன்னுடைய உம்மா அழுவதைப் பார்த்து இடுப்பில் இருந்த குழந்தையும் அழத் தொடங்கி விட்டது.

"பிள்ளை அழாதம்மா. கன்சுல் இப்ப வந்திடுவான். பார், சின்னக் குழந்தையும் அழுது. அழாதே, அழாதே" கன்சுலின் உம்மம்மா தன்னுடைய மகளைத் தேற்றினாள்.

இப்பொழுது இருள் கவியத் தொடங்கி விட்டது. நேரம் ஆறு நாற்பதாகி விட்டது.

"எதற்கும் நாம 'பொலீஸில்' சொன்னால் என்ன?"கன்சுலின் வாப்பாவின் நண்பர்களில் ஒருவர் ஆலோசனை சொன்னார். அவரும் அதைப் பற்றித்தான் யோசித்துக் கொண்டிருந்தார்.

"சரி, 'பொலீசு'க்குப் போவோம்"

அவர்கள் 'பொலீஸ் ஸ்டேசனை' அடைந்தபோது மாலை ஆறு ஐம்பதாகி விட்டது. அந்த 'பொலீஸ் ஸ்டேசனில்' பொறுப்பதிகாரியாக இருந்தவர், கன்சுலின் வாப்பாவிற்கு நன்கு தெரிந்தவர். அவருடைய கடையில் அடிக்கடி பொருட்கள் வாங்குபவர். அவர் தமிழில் நன்கு கதைப்பார். அவர்கள் 'ஸ்டேசனை' அடைந்தபோது, அந்த 'இன்ஸ்பெக்டர்' 'போனில்' பேசிக் கொண்டிருந்தார். இவர்களைக் கண்டதும், உட்காரும்படி சைகை செய்தார். பின்னர், பேசி முடித்தவுடன், கன்சுலின் வாப்பாவைப் பார்த்து புன்னகையுடன் கூறினார்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"குட் ஈவினிங் முதலாளி. என்ன விசயங்"

"குட் ஈவினிங் சேர்."

என்று சொல்லிட்டு நடந்த விடயங்கள் அனைத்தையும் அவர் அந்த 'இன்ஸ்பெக்டரிடம்' கூறினார். 'இன்ஸ்பெக்டர்' தனது வலது காலை இடதுகாலின் மேல் போட்டு அதை மெல்ல ஆட்டியவாறு, கன்சுலின் வாப்பா கூறிய அனைத்தையும் அவர் கவனமாகக் கேட்டார். அவர் முகத்தில் ஆழ்ந்த யோசனை தெரிந்தது. பின்னர்,

"இதுக்கு முந்தி அவன் இப்பிடி செய்திருக்குதா?"

என்று கன்சுலின் வாப்பாவிடம் கேட்டார்.

"இல்ல சேர்."

"ஆங் அப்பிடியா?"

அவர் யோசனையுடன் தலையை ஆட்டினார்.

"சரி, நீங்க பயப்பிட வாணாம். நாங்க எல்லாத்தயும் பாக்கிறது. ஒன்னும் நடந்திருக்காது. உங்கட மகன்ட 'போட்டோ' இருந்தா கொண்டு வந்து தாங்க. நான் இப்பவே 'அக்சன்ல' இறங்கிறது. உங்கட 'போன் நம்பர' தந்திட்டுப் போங்க"

கன்சுலின் வாப்பா தன்னுடைய 'போன்' நம்பரை எழுதிக் கொடுத்தார். கன்சுலின் 'போட்டோ'வை உடனடியாக கொண்டு வந்து தருவதாக கூறிவிட்டு, அனைவரும் அங்கிருந்து வெளியேறினார்கள்.

அவர்கள் சென்றதும், காவல் நிலைய பொறுப்பதிகாரி சகல காவல் நிலையங்களுக்கும் இந்த விடயம் பற்றிய சிறிய அறிவிப்பு ஒன்றை அனுப்பினார். பின்னர், தன்னுடைய உதவியாளர்களில் ஒருவரை அழைத்து, பின்னேரம் மூன்று மணிக்குப் பின்னர், இந்தப் பிரதேசத்தில் இருந்து வெளியேறிய சகல வாகனங்க ளையும் பற்றிய தகவல்களை பெறுமாறு கட்டளையிட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# -7-

# காவல்துறையினரின் நடவடிக்கைகள்

கன்சுலின் வாப்பா, அவனுடைய புகைப்படத்தைக் கொண்டு வந்து கொடுத்ததும், 'இன்ஸ்பெக்டர்' உடனடியாக அதை அனைத்து காவல் நிலையங்களுக்கும் தொலைநகல் மூலம் அனுப்பி வைத்தார். பின்னர் தனது கட்டுப்பாட்டின் கீழ் இருந்த சோதனைச் சாவடிகளில் இருந்த பொலீசாருடன் தொடர்பு கொண்டு, கன்சுல் பற்றிய விடயத்தைக் கூறி, அத்தகைய ஒரு பையனைக் கண்டால் உடனடியாக தகவல் கொடுக்கும்படி கூறினார். அத்துடன், அவர்கள் இருந்த வழியாக சென்ற வாகனங்களில் வழமைக்கு மாறான, புதிய வாகனங்கள் ஏதும் சென்றிருந்தால் அது பற்றிய தகவல்களையும் தனக்கு தெரியப்படுத்தும்படி கூறினார்.

இரவு 8.15 மணியளவில் அவருக்கு ஒரு தகவல் வந்தது. அது, ஊரில் இருந்து வெளியே செல்லும் ஒரு பாதையில் அமைந்திருந்த சோதனைச் சாவடியில் கடமையில் இருந்த பொலீசாரிடம் இருந்து வந்தது. பிற்பகல் 4.15 மணியளவில், ஒரு புதிய, 'டோயோட்டா' ரக கறுத்த 'வேன்' அந்த வழியால் போனதாக அவர்கள் கூறினார்கள். எனினும் அந்த வேனின் இலக்கங்களை அவர்கள் அவதானிக்கவில்லை. ஆங்கில எழுத்துகளில் முன் எழுத்துகள் WP என நினைவிருப்பதாக மட்டும் கூறினார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடனே, பொறுப்பதிகாரி, அந்தப் பாதையில் உள்ள அனைத்துப் பொலீஸ் நிலையங்களுக்கும் அந்தத் தகவலை வழங்கி, அவ்வாறான WP என்ற ஆங்கில எழுத்துக்களையுடைய ஒரு கறுப்புநிற வேன் பற்றிய தகவல்களை சேகரிக்குமாறு வேண்டுகோள் விடுத்தார்.

இதற்கிடையில், கன்சுலின் வாப்பா அவருடன் தொலை பேசியில் தொடர்பு கொண்டு, ஏதாவது தகவல் கிடைத்ததா என விசாரித்தார்.

"சில தகவல்கள் கிடைச்சிருக்கு. உறுதியா எதுவுங் சொல்லேலா. ஆனா நீங்க பயப்பிட வாணாம். நாங்க எப்பிடியுங் கண்டு புடிக்கிறது"

என்று அவர் பதில் கூறினார்.

அதற்கு கன்சுலின் வாப்பா,

"சேர், இதைப் பற்றி 'மீடியா'க்களுக்கு சொல்லலாமா?"

என்று கேட்டார்.

"இல்ல, இப்ப வாணாங். நாங்களுங் அதுப்பத்தி யோசிக்கிறதாங். காலயில பாப்பங்"

என்று பொறுப்பதிகாரி கூறினார்.

இரவு 9.40 மணிக்கு, ஒரு பொலீஸ் நிலையத்தில் இருந்து அவருக்கு தொலைபேசி அழைப்பு வந்தது. அந்த நிலையத்தின் பொறுப்பதிகாரி இவருடன் கதைத்தார். தனது காவல் நிலையத்திற்குட்பட்ட ஒரு பிரதான சந்தியில் பொருத்தப் பட்டுள்ள **CCTV** 'கெமரா'வில், இரவு 7.42 மணிக்கு ஒரு கறுப்பு நிற 'வேன்' பதியப்பட்டிருப்பதாகவும், பின்னர் விசாரித்ததில் அந்த 'வேன்' சற்றுத் தூரத்தில் இருந்த ஒரு 'ஹோட்டலின்' அருகில் நிறுத்தப்பட்டு, அதில் இருந்தவர்கள் அங்கு சாப்பிட்டதாகவும் தெரிய வந்துள்ளது. ஐந்து பேர் வந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாப்பிட்டதாகவும், ஆனால் அவர்களில் சிறுவன் யாரும் இருக்கவில்லை என்று 'ஹோட்டலில்' வேலை செய்பவர்கள் கூறியதாகவும் அவர் சொன்னார். CCTV 'கெமரா'வில் வாகனத்தின் இலக்கம் தெரிவதாகக் கூறினார். ஆனால் அது CP என்ற ஆங்கில எழுத்துக்களுடன் இருப்பதாக கூறி அதன் இலக்கங்களையும் அவர் கூறினார்.

இது ஒரு குழப்பத்தைத் தருகின்ற தகவலாக இருந்தது. பொறுப்பதிகாரி உடனடியாக குற்றப் புலனாய்வு திணைக்க ளத்துடன் தொடர்பு கொண்டு, கன்சுல் காணாமல் போயுள்ள விடயத்தைக் கூறினார். பின்னர் கறுப்புநிற 'வேன்' பற்றி தனக்கு கிடைத்த தகவல்களைக் குறிப்பிட்டு, உடனடியாக அந்த 'வேனை'யோ அல்லது அதன் உரிமையாளரையோ கண்டுபிடிக்கு மாறு கேட்டுக் கொண்டார்

காலை ஆறு மணியளவில், பொறுப்பதிகாரிக்கு குற்றப் புலனாய்வு திணைக்களத்தில் இருந்து தொலைபேசி அழைப்பு வந்தது.

"சேர், நீங்க குறிப்பிட்ட 'வேனை'ப் பற்றி விசாரித்தோம். ஆனால் அந்த இலக்கத்தில் ஒரு வேனும் பதியப்படவில்லை. இது போலி இலக்கங்களாக இருக்க வேண்டும். இந்த வாகனம் பற்றி விசாரிக்கும்படி சகல பொலீஸ் நிலையங்களுக்கும் அறிவித் திருக்கிறோம். விரைவில் தகவல் கிடைக்கும். கிடைத்தவுடன் உங்களுக்குத் தெரியப்படுத்துகிறோம்."

சிங்கள மொழியில் சொல்லப்பட்ட இந்தத் தகவல் பொறுப்பதிகாரியின் சிந்தனையைத் தூண்டுவதாக இருந்தது. அந்த வாகனத்தின் இலக்கங்கள் போலியானதாக இருப்பதால், அந்த வாகனம்தான் இங்கிருந்து சென்றிருக்க வேண்டும், அதில் இருந்தவர்கள்தான் அந்தப் பையனைக் கடத்தியிருக்க வேண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று அவர் முடிவு செய்தார். இந்த எண்ணம் ஏற்பட்டதும் அவர் சுறுசுறுப்படைந்தார். உடனடியாகவே படுக்கையில் இருந்து எழுந்து, 'யூனிபோர்மை' அணிந்து கொண்டு, காவல் நிலையத்திற்குப் புறப்பட்டார். அவர் அங்கு போனபோது, வாசலில் கன்சுலின் வாப்பா நிற்பதைக் கண்டார். அவரின் கண்கள் தூக்கமின்மையால் சிவந்திருந்தன. சோகம் அவர் முகத்தை முழுமையாக நிறைத்திருந்தது. பொறுப்பதிகாரி அவரைப் பார்த்து,

"குட்மோர்னிங். வாங்க உள்ள போய் பேசுவம்"

என்று சொல்லி விட்டு உள்ளே நுழைந்தார். கன்சுலின் வாப்பா அவரைப் பின்தொடர்ந்து சென்றார். பொறுப்பதிகாரி தனது கதிரையில் அமர்ந்தவாறு, முன்னால் இருந்த கதிரையில் கன்சுலின் வாப்பாவை அமருமாறு கூறினார். பின்னர் அவர் இதுவரை கிடைத்த தகவல்களை கூறிவிட்டு,

"பயப்பிடக் கூடியமாதிரி எந்தத் தகவலுங் இல்ல. இன்னுங் கொஞ்ச நேரத்தில நல்ல தகவல் வருங். நாங்க எப்படியுங் அந்த வானத்தையுங் ஆக்களையுங் கண்டுபுடிக்கிறது. நீங்க பயப்பிடாம போங்க"

என்று அவரிடம் கூறினார். கன்சுலின் வாப்பா சற்று தயக்கத்துடன் பொறுப்பதிகாரியிடம் கூறினார்,

"நான் வெளியில கொஞ்ச நேரம் இருக்கிறேன். ஏதாவது தகவல் வந்தால் கேட்டு விட்டுப் போகிறேன்"

"சரி, இருங்க"

என்று பொறுப்பதிகாரி அனுமதி அளித்தார்.

கன்சுலின் வாப்பா வெளியே வந்து காவல் நிலைய வாசலில் போடப்பட்டிருந்த ஒரு வாங்கில் அமர்ந்தார். ஒரு நல்ல செய்தி கிடைக்காமல் அவர் வீட்டிற்குப் போக விரும்பவில்லை. அவரது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீடு ஒரு மரண வீடு போன்று இருந்தது. ஊரில் இருந்த அனைவரும் அவரின் வீட்டிற்கு வந்து விசாரித்து விட்டு சென்றிருக்கிறார்கள். அவருடைய உம்மாவும், வாப்பாவும் ஏனைய உறவினர்கள் சிலரும் அவரது வீட்டிலேயே நிற்கிறார்கள். அவருடைய மனைவியும் தூங்கவில்லை. விடியவிடிய அவர் அழுதுகொண்டே இருந்தார்.

கன்சுலின் வாப்பா சோகத்தினாலும், குற்ற உணர்வினாலும் துவண்டு போனார். தன்னால்தானே கன்சுலுக்கு இந்த நிலைமை ஏற்பட்டது என்பதை நினைக்க, நினைக்க அவருடைய உள்ளம் உடைந்து சுக்குநூறாகியது. விடியும்வரை உறங்காமலேயே இருந்த அவர், அதிகாலையில் தொழுது விட்டு, இறைவனிடம் மனமுருக பிரார்த்தனை செய்து விட்டு, காவல் நிலையத்திற்கு வந்து விட்டார். காவல் நிலைய பொறுப்பதிகாரி சொன்ன தகவல்கள் அவருக்கு ஓரளவுக்கு நிம்மதி அளித்தாலும், கன்சுல் பற்றிய எந்தத் தகவலும் இல்லாததால் அவரது கவலை சிறிதும் குறையவில்லை.

காலை ஏழு மணிக்கு பொறுப்பதிகாரிக்கு மீண்டும் குற்றப் புலனாய்வு திணைக்களத்தில் இருந்து சிங்கள மொழியில் தொலைபேசி அழைப்பு வந்தது.

“சேர், நீங்கள் குறிப்பிட்ட அந்த வாகனம் போலி இலக்கத் தகடுகளுடன் இருப்பதால் அதைக் கண்டுபிடிப்பது சற்று சிரமமாக இருக்கும். இது குறித்து இப்போதைக்கு வெளியில் சொல்ல வேண்டாம். இதைப் பற்றி மீடியாவுக்கும் சொல்ல வேண்டாம். சொன்னால் அவர்கள் ‘அலேர்டாகி’ விடுவார்கள். நாங்கள் உங்களுடன் தொடர்பில் இருப்போம். அந்தப் பையனின் வீட்டாருடனும், இதைப் பற்றி இப்போது வெளியில் சொல்ல வேண்டாம் என்ற கூறுங்க”



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொறுப்பதிகாரி தொலைபேசியை வைத்துவிட்டு, கன்சுலின் வாப்பாவை அழைத்து வரும்படி, ஒரு 'பொலீஸ்' உத்தியோகத்தரை அனுப்பினார். அவர் வந்து சொன்னதும், கன்சுலின் வாப்பா பரபரப்புடன் பொறுப்பதிகாரியிடம் சென்றார். அவரை அமரும்படி கூறிய பொறுப்பதிகாரி தனக்கு சற்று முன்னர் கிடைத்த தகவல்களை அவரிடம் கூறினார். பின்னர்,

"பயப்பிட வாணாம். நாங்க எப்பிடியுங் அவனக் கண்டுபிடிக்கிறது. நீங்க இப்ப இந்த விடயத்த யாருக்கிட்டயுங் சொல்ல வாணாங். உங்க நோனாக்கிட்டயுங் சொல்ல வாணாங். தகவல் கிடைச்சதுங் நா உங்களுக்கு 'போன்' பண்றது. சரி"

பொறுப்பதிகாரி கூறிய விடயங்கள், கன்சுலின் வாப்பாவுக்கு மேலும் கவலையை ஏற்படுத்துவனவாக இருந்தன. அவர் தனது வீட்டை நோக்கி சென்றார். வீட்டில் ஆட்கள் கூடியிருந்தார்கள். வீட்டு வாசலில் ஒரு 'கிரிக்கட்' மட்டை வைக்கப்பட்டிருப்பதைக் கண்டார். அவர் பரபரப்புடன் அதை எடுத்தார். அது கன்சுலின் மட்டை என்பது உடனேயே தெரிந்தது. காலையில் அந்த வீதியால் சென்ற ஒருவர், வீதியோரமாக கிடந்த அந்த மட்டையை கண்டெடுத்திருந்தார். அந்த மட்டையைப் பார்த்ததும் கன்சுலின் உம்மா சத்தமாக அழத் தொடங்கி விட்டார்.

"என்ட அல்லா. என்ட பிள்ளைக்கு என்னவோ நடந்திட்டு. என்ட பிள்ளையைக் கொண்டு வந்து தாங்க"

என்று கூறிக்கூறி அவர் அழுதார். கன்சுலின் உம்மம்மாவும் சில உறவுக்காரப் பெண்களும் அவரைத் தேற்றிக் கொண்டிருந்தார் கள். கன்சுலின் வாப்பா உடைந்து போனார். அவர் உடனடியாக பொலீஸ் பொறுப்பதிகாரிக்கு 'போன்' பண்ணி, கன்சுலின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'கிரிக்கட்' மட்டை கண்டெடுக்கப்பட்டுள்ள விடயத்தைக் கூறினார். அவர் தான் அவர்களின் வீட்டிற்கு வருவதாகக் கூறி, அம்மட்டையைக் கண்டெடுத்தவரை தாங்கள் வரும்வரை அங்கேயே நிற்கும்படி கூறினார்.

*ஹலோ பிள்ளைகளே!*

***மீண்டும் உங்கள் ஊகத்திற்கு ஒரு சவால்!***

***இப்பொழுது, அடுத்த அத்தியாயத்திற்கு செல்லும் முன்னர், உங்கள் கற்பனையை பறக்க விடுங்கள்!***

*கன்சுலுக்கு என்ன நடந்திருக்கும்?*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## -8-

# கன்சுலுக்கு நடந்தது என்ன?

தனக்கு அருகில் அமர்ந்திருந்தவர் கொடுத்த 'சொக்லேட்டை' சாப்பிட்டதும் கன்சுல் தலை சுழன்று, கண்கள் இருண்டு மயக்கமடைந்து விட்டான். அவன் மயக்கமடைந்ததும், அவனுக்கு 'சொக்லேட்' கொடுத்தவன் அவனுடைய 'பேக்கை' கழற்றி விட்டு, அந்த 'சீட்டில்' அவனை படுக்க வைத்தான். பின்னர் ஜன்னலைத் திறந்து முதலில் கன்சுலின் 'பெட்டை' வெளியே வீசினான். பின்னர் 'பேக்'கையும் வீச முயன்றபோது, கன்சுலிடம் தமிழில் கதைத்தவன் அவனைத் தடுத்தான்.

"அதை எறிய வேணாம். அது பிறகு உதவும்"

ஆகவே அவன் அந்த 'பேக்'கை வெளியே எறியாமல், கன்சுலைப் படுக்க வைத்த 'சீட்'டின்' அடியில் போட்டான். பின்னர் அவன் பின் 'சீட்டுக்கு' சென்று அமர்ந்தான்.

அந்த வாகனம் 'கார்பெட்' வீதியில் எந்த குலுக்கலும் இன்றி சீராகப் போய்க் கொண்டிருந்தது. அவர்கள் நீண்ட தூரம் பயணம் செய்த பின்னர் சனநாடமாட்டம் குறைவாக இருந்த ஒரு இடத்தில் ஓரமாக வண்டியை நிறுத்தினார்கள். பின்னர் அதை பழுது பார்ப்பது போன்று பாவனை செய்து, அதன் இலக்கத் தகடுகளை கழற்றி விட்டு புதிய இலக்கத் தகடுகளை பொருத்தினார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன் பின்னர் அது எந்த இடத்திலும் நிற்கவில்லை. இரவு 7.20 மணியாகியபோது, கன்சுலுக்கு மெல்ல மெல்ல நினைவு திரும்பத் தொடங்கியது. அவன் ஒரு கனவு கண்டான். கனவில் அவன் அவனுடைய நண்பர்களுடன் ஊஞ்சல் ஆடிக் கொண்டிருக்கிறான். அவனுடைய நண்பர்கள் ஊஞ்சலை ஆட்டி விடுவதால் அவன் மேலும், கீழும் போய் வருகிறான். பின்னர் அவனுக்குத் தூக்கம் வருகிறது. அவன் தூங்கி விடுகிறான். எனினும், ஊஞ்சலில் தூங்குவதை நினைத்தவுடன் அவன் விழிக்க விரும்புகிறான் ஆனால் அவனுடைய விழிகள் திறக்க மறுக்கின்றன. அவன் விழிகளை திறக்க கடுமையாக முயற்சி செய்கிறான். அப்போது யாரோ அவனுக்கு அருகில் இருந்து கதைப்பதுபோல் இருந்தது.

"மொனஹரி கமு"
("ஏதாவது சாப்பிடுவோம்")
"ஒவ் கமு"
("ஓம், சாப்பிடுவோம்")

வாகனத்தின் முன்னால் குறுந்தாடியுடன் இருந்தவன் சொன்னதும், சாரதி 'வேனை' ஒரு 'ஹோட்டலின்' எதிரே, இடப்பக்கமாக, ஒரு வேலியோரமாக நிறுத்தினான்.

"லமாய பொட்ட பலன்ன"
("பையனக் கொஞ்சம் பாருங்க")

தாடி வைத்திருந்தவன் பின்னால் இருந்தவர்களிடம் கேட்டான். பின் 'சீட்டில்' இருந்தவன் கன்சுலைப் பார்த்து விட்டு,

"எயா நிதி"
("அவன் நித்திர")
"ஹரி, இக்மன்ட கேவாங் எமு"
("சரி, விரைவா சாப்பிட்டிட்டு வருவோம்")

அனைவரும் இறங்கி 'ஹோட்டலு'க்குள் செல்லும்போது, கன்சுலுக்கு நினைவு திரும்பியது. அவன் கண்களைத் திறந்தபோது அவனுக்கு முதலில் எதுவும் புரியவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நான் எங்க இருக்கிறேன்'

அவனுக்கு மீண்டும் தலை சுழன்றது. எனினும் அவன் மயக்கமடையவில்லை. தான் படுத்திருந்த இடத்தை தொட்டுப் பார்த்தான். அது மெத்தென்று இருந்தது. அப்போதுதான் அவனுக்கு என்ன நடந்தது என்பது விளங்கத் தொடங்கியது. தான் அந்த 'வேனு'க்குள் ஏறியதும், 'சொக்லேட்' சாப்பிட்டதும் மயக்கமடைந்ததும் அவனுக்கு நினைவுக்கு வந்தன. அவனுக்கு பயம் ஏற்பட்டது. அவனுடைய நெஞ்சு பலமாக துடித்தது. அவனுடைய உடல் நடுங்கியது. தனது கண்களை மெல்ல திறந்து பார்த்தான். அந்த 'வேனி'ற்குள் யாரையும் காணவில்லை. அவன் மட்டுமே இருந்தான்.

சட்டென்று அவனுக்குத் துணிச்சல் வந்தது. தான் இங்கிருந்து ஓடிவிட வேண்டும் என்று அவனுடைய உள்ளுணர்வு அவனைத் தூண்டியது. அவன் மெல்ல தலையை உயர்த்திப் பார்த்தான். தனக்கு எதிரே இருந்த 'ஹோட்டலில்' இருந்து வந்த வெளிச்சம் அவனுக்குத் தெரிந்தது. அவன் தலையைக் குனிந்து கொண்டான். தனது தலை வலிப்பதுபோல அவன் உணர்ந்தான். அவனுக்கு வாந்தி வருவதுபோலவும் இருந்தது. ஆனால் 'இங்கிருந்து ஓடு' என்று அவனது உள்ளுணர்வு அவனை துரிதப்படுத்தியது.

கன்சுல் உடலை உயர்த்தாமல் 'சீட்டில்' முதுகால் வழுகிக் கொண்டு 'வேனின்' வாயிலை அடைந்தான். அதன் படியில் இருந்தவாறு கதவைத் திறக்கின்ற இடத்தில் கையை வைத்து அழுத்தித் தள்ளினான். கதவு திறந்தது. அவனுடைய நெஞ்சு படக்படக்கென்று துடித்தது. கால்கள் நடுங்கின. எனினும் அவன் தன்னைத் திடப்படுத்திக் கொண்டான். மெல்ல, மெல்ல கால்களை வெளியே வைத்தான். 'ஹோட்டலின்' வெளிச்சத்தில் தான் ஒரு வேலிக்கு அருகில் நிற்பது அவனுக்குத் தெரிந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலிக்கு அப்பால், இருண்ட பெரிய மரங்கள் அடர்த்தியாக நின்றன.

வீதியால் செல்வது ஆபத்தானது என்பதை கன்சுல் உணர்ந்தான் அதனால் அவன் உடலை குனிந்தவாறு வேலிக்கருகில் சென்றான். வெளிச்சத்தை 'வேன்' மறைத்ததால் அவன் நின்ற பகுதி இருட்டாக இருந்தது. அவன் முழுத் துணிச்சலையும் வரவழைத்துக் கொண்டு, வேலிக் கம்பிகளுக்கிடையே புகுந்து, அருகில் நின்ற ஒரு மரத்தின் நிழலில் மறைந்து கொண்டான். பின்னர் தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டு, அந்த மரத்தில் இருந்து அடுத்த மரத்திற்கு உடலை வளைத்துக் குனிந்தவாறு ஓடினான். பின்னர் அங்கிருந்து அடுத்த மரத்திற்கு ஓடினான். இவ்வாறு அவன் ஒவ்வொரு மரமாக ஓடஓட, அந்த இடத்தின் வெளிச்சம் குறைந்து வந்தது. பின்னர் அந்த இடம் காரிருளாகி விட்டது.

கன்சுல் ஒரு மரத்தின் பின்னால் நின்றவாறு, பின்னால் திரும்பிப் பார்த்தான். அந்த 'வேனோ' அல்லது 'ஹோட்டலோ' இப்போது அவனுக்குத் தெரியவில்லை. அவனுக்கு நிம்மதியாக இருந்தது. தான் நீண்ட தூரம் ஓடிவந்து விட்டோம் என்பதை அவன் உணர்ந்தான். எனினும் அவன் அங்கு நிற்க விரும்பவில்லை. அவர்கள் தன்னை தேடி வரலாம் என்று அவன் பயந்தான். அவனுக்கு இருட்டு பயமாக இருக்கவில்லை. அந்த இருட்டு தனக்கு பாதுகாப்பாக இருப்பதாக அவன் உணர்ந்தான். எனவே இருட்டுக்குள் அவன் ஓடினான். தன்னால் முடிந்த அளவுக்கு அவன் வேகமாக ஓடினான்.

ஓரிடத்தில் அவன் ஒரு வேலியில் முட்டுப்பட்டான். அந்த இடத்தில் நின்று, வேலிக்குள்ளால் புகுந்து மீண்டும் ஓடினான். ஓட, ஓட அவனுக்கு மூச்சு வாங்கியது. அவனுடைய நாக்கு வரண்டு போனது. அவனுக்கு களைத்தது. ஆனால் அவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிற்கவில்லை. தொடர்ந்தும் ஓடினான். இருட்டில் அவன் மரங்களில் மோதினான். சில இடங்களில் கால்கள் தடுக்கி, விழுந்தான். இருந்தும், அவன் எழுந்து மீண்டும் ஓடினான். அவனுடைய வெறும் கால்களில் முற்களும், கற்களும் குத்தின. அவன் எதையும் பொருட்படுத்தவில்லை. எவ்வளவு முடியுமோ அவ்வளவு தூரம் ஓட வேண்டும் என்பதே அவனுடைய நோக்கமாக இருந்தது. அவன் ஓடிய இடங்களில் வெளிச்சம் எதுவும் இருக்கவில்லை. இருட்டு அவனுக்கு பழக்கப்பட்டு விட்டது போன்று இருந்தது

கன்சுல் தொடர்ந்து ஓடிக் கொண்டிருந்தான். அவன் சென்ற இடங்களில் வாகன வெளிச்சத்தையோ அல்லது சத்தத்தையோ அவன் காணவுமில்லை, கேட்கவுமில்லை. எனவே தான் வீதியில் இருந்து வெகு தொலைவிற்கு வந்து விட்டோம் என்பது அவனுக்குப் புரிந்தது. இப்போது 'வேனில்' வந்தவர்கள் தன்னைத் தேடி வருவார்கள் என்ற அச்சம் அவனிடம் இருந்து மறைந்து விட்டது. அந்த அச்சம் மறைந்ததும் அவனுக்கு களைப்பும், சோர்வும் ஏற்பட்டன. அவன் கால்கள் வலியெடுத்தன. கடுமையாக மூச்சு வாங்கியது. அவன் ஒரு மரத்தின் வேரில் அமர்ந்தான்.

கன்சுல் சிறிது நேரம் அந்த வேரிலேயே அமர்ந்திருந்தான். ஓடிவந்த களைப்பும், வியர்வையும் அடங்கின. திடீரென்று அந்த இடத்தில் குளிர்காற்று வீசியது. வானத்தில் ஆங்காங்கே மின்னல் வெட்டத் தொடங்கியது. மழை வரப்போகிறது என்பதை அவன் உணர்ந்தான். எனவே மழை வருவதற்கு முன்னால் எங்கேயாவது ஒரு இடத்திற்கு சென்று தங்க முடியுமா என்று பார்த்தான். வேரில் இருந்து எழுந்து அவன் நடக்கத் தொடங்கினான். இனி தன்னால் ஓட முடியாது என்பது அவனுக்கு விளங்கியது. கால்கள் சுள்சுள்ளென்று வலித்தன. அவன் நொண்டிக் கொண்டு நடந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் அதிக தூரம் செல்வதற்கு முன்னரே மழை பொழியத் தொடங்கியது. அது கடுமையான மழை. பெரிய இரைச்சலுடனும், முழக்கத்துடனும் பலத்த மழை பெய்யத் தொடங்கியது. இதற்கு மேல் மழைக்குள் நடக்க முடியாது என்பதை உணர்ந்த கன்சுல் ஒரு மரத்தின் கீழ் ஒதுங்கினான். அது அடர்ந்த, பாரிய மரமாக இருக்க வேண்டும். ஏனெனில் அதன் அடியில் நின்றபோது, அவன் உடலில் மழை நீர் அதிகம் படவில்லை. கன்சுல் கொஞ்ச தூரம் வெளியே வந்து, தலையை மேலே உயர்த்தி வாயைத் திறந்தான். மழைத்துளிகள் அவன் வாய்க்குள் சென்றன. தாகம் தீரும்வரை அவன் மழைநீரைக் குடித்தான். பின்னர் மீண்டும் தான் முன்னர் நின்ற அந்த அடர்த்தியான மரத்தின் கீழ் வந்து அதன் அகன்ற வேருக்குள் தன்னை முடக்கிக் கொண்டான். அவனுடைய உடல் முற்றாக சோர்ந்து விட்டது.

கன்சுல் அந்த வேருக்குள் இருந்தவாறு அன்று நடந்த சம்பவங்களை நினைத்துப் பார்த்தான். அவை அனைத்தும் ஒரு கனவுபோல இருந்தன. 'வேனில்' வந்தவர்கள் ஏன் தனக்கு மயக்கமடையக் கூடிய 'சொக்லேட்டை' தந்தார்கள் என்று அவனுக்குத் தெரியவில்லை. ஆனால் அவர்கள் தன்னை கடத்தி வந்திருக்கிறார்கள் என்பது அவனுக்கு விளங்கியது. அவர்களிடம் இருந்து இறைவன் தன்னை காப்பாற்றியிருக்கிறான் என்பதை நினைக்க அவனுக்கு மகிழ்ச்சியாக இருந்தது. என்றாலும் தான் தவறுகள் செய்து விட்டோம் என்பது கன்சுலுக்கு புரியத் தொடங்கியது.

கன்சுல் தான் செய்த தவறுகளை ஒவ்வொன்றாக நினைத்துப் பார்த்தான். முதலாவது தவறு, வாப்பா அவ்வளவு சொல்லியும் கேட்காமல் அந்த புதுப் 'போனை' எடுத்தது. வாப்பாவுக்கு அருகில் போயிருந்து அதைக் கேட்டிருந்தால், அவர் நிச்சயம் தனக்கு 'போனை' தந்திருப்பார். தான் வாப்பாவின் சொல்லை மீறி போனை எடுத்தது பெரிய தவறு. யாரிடமும் சொல்லாமல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டை விட்டு தனியே வெளியேறியது இரண்டாவது தவறு. நான்கு கிலோ மீற்றர் தூரத்திலுள்ள தன்னுடைய வாப்பும்மாவின் வீட்டிற்கு தான் தனியே சென்றிருக்க கூடாது. மூன்றாவது தவறு, முன்பின் தெரியாத, அந்நியர்களின் வாகனத்தில் தான் ஏறியது. தெரியாதவர்கள் கூப்பிட்டால் வாகனத்தில் ஏறக் கூடாது என்று பாடசாலையில் அதிபரும், வகுப்பாசிரியர்களும், வீட்டில் உம்மாவும் அடிக்கடி சொல்லி வந்திருக்கிறார்கள். எனினும் அதையெல்லாம் மறந்து அந்த 'வேனில்' ஏறியது மிகப் பெரிய தவறு. நான்காவது தவறு, 'வேனில்' இருந்தவன் கொடுத்த 'சொக்லேட்டை' சாப்பிட்டது.

இன்று ஒரே நாளில் ஒன்றன் பின் ஒன்றாக இவ்வளவு தவறுகளையும் தான் செய்ததால்தான் தனக்கு இத்தகைய ஆபத்தான நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்பதை கன்சுல் புரிந்து கொண்டான். அவன் தன்னைத் தானே நொந்து கொண்டான். இனி தான் ஒருநாளும் இவ்வாறு நடந்து கொள்ள மாட்டேன் என்று அவன் தனக்குள் சத்தியம் செய்து கொண்டான். அவன் மனத்தில் அவனுடைய உம்மா, வாப்பா, தம்பி, தங்கை, உம்மம்மா, அப்பா என எல்லோரும் வந்து போனார்கள். இவ்வாறு அவன் கவலையுடன் யோசித்துக் கொண்டிருக்கும் போதே, அசதி மேலோங்க அந்த மரத்தின் வேரில் அவன் உறங்கி விட்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# -9-

# புதிய இடத்தில் கன்சுல்

கன்சுல் தனது தம்பியுடனும், தங்கையுடனும் விளையாடிக் கொண்டிருக்கிறான். அவர்கள் இங்கும் அங்கும் ஓடிஓடி விளையாடுகிறார்கள். அவனுடைய சிறிய தங்கை கால்களை தூக்கித் தூக்கி வைத்து, மெல்ல மெல்ல நடக்கிறாள். அவள் கன்சுலைப் பார்த்து, கைகளைத் தட்டி சிரிக்கிறாள். அப்போது அவனுடைய தம்பி, கன்சுலின் உடம்பில் தண்ணீரை ஊற்றுகிறான். கன்சுலின் உடையெல்லாம் நனைந்து ஈரமாகி விட்டது.

திடீரென்று கன்சுல் வேறொரு இடத்தில் நிற்கிறான். அவனுடைய தம்பியையம், தங்கையையும் காணவில்லை. அவன் தனியாக நிற்கிறான். அவனுக்கு முன்னால் சற்றுத் தூரத்தில், கரிய நிறத்தில் ஒரு நாய் நிற்கிறது. அது கன்சுலைப் பார்த்து குரைக்கிறது. கன்சுல் ஓட நினைக்கிறான். ஆனால் அவனால் ஓட முடியவில்லை. அவனுடைய கால்களை அவனால் தூக்க முடியவில்லை. நாய் அவனுக்கு அருகில் நெருங்கி விட்டது. அவன் கால்களை தூக்கி ஓட முயற்சிக்கிறான். முடியவில்லை. நாய் அவனை நெருங்கி விட்டது. அது உறுமிக் கொண்டே வந்தது. அது அவனைக் கடித்து விடும்போல் இருந்தது.

“என்ட அல்லா”



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கன்சுல் வாய்விட்டு அலறினான்.
"புதே, புதே! பயவென்ட எபா?"
("மகன், மகன்! பயப்பட வேணாம்.")

யாரோ கதைப்பதைக் கேட்டு, கன்சுல் கண்களைத் திறந்தான். அவனுக்கு முன்னே, தலையில் தலைப்பாகையும், உடலில் மஞ்சளாகிப்போன 'பெனியனும்', உயர்த்திக் கட்டிய சாரனும் அணிந்தவாறு ஒருவர் நின்று கொண்டிருந்தார். அவருடைய வலது கையில் ஒரு மண்வெட்டி இருந்தது. அதை அவர் தரையில் ஊன்றியிருந்தார். கால்களில் சேறு அப்பியிருந்தது.

கன்சுலுக்கு முதலில் எதுவும் புரியவில்லை. அவன் தான் இருந்த இடத்தைப் பார்த்தான். ஒரு பாரிய புளியமரத்தின் வேரின் அடியில் தான் இருப்பது அவனுக்குத் தெரிந்தது. தனது உடலில் இருந்த உடைகள் ஈரமாகி, உடலோடு ஒட்டியிருந்தன. பாதங்கள் கடுமையாக வலித்தன. முழங்கால்கள் வரை ஆங்காங்கே பல கீறல் காயங்கள் இருந்தன. அவனுடைய உடல் நடுங்கிக் கொண்டிருந்தது. ஈர உடைகளையும் தாண்டி தனது உடல் கடுமையாக சுடுவதை அவன் உணர்ந்தான். அவனுக்கு காய்ச்சல் ஏற்பட்டிருந்தது. இரவு நடந்தவைகள் அவனுக்கு நினைவுக்கு வந்தன. அவன் தனக்கு முன்னே நின்றவரை அச்சத்துடன் பார்த்தான். அவனது அச்சத்தை அவர் உணர்ந்தவர்போல்,

"புதே, பயவென்ட எபா. என்ட. அபே கெதரங் யமு."
("மகன், பயப்பட வேணாம் வாங்க. எங்க வீட்டுக்கும் போவம்")
என்று சொல்லி விட்டு அவனை நோக்கி தன்னுடைய இடது கையை நீட்டினார்.

இரக்கமும் அனுதாபமும் நிறைந்த அவருடைய முகத்தைப் பார்த்ததும், கன்சுலுக்கு பயம் நீங்கியது. அவன் தன்னுடைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலது கரத்தால் அவருடைய இடது கரத்தைப் பற்றி, மெல்ல எழும்பினான். அவன் உடல் கடுமையாக வலித்தது. கால்கள் தடுமாறின. அவர் அவனுடைய கரத்தை உறுதியாகப் பற்றி அவன் எழுந்து நிற்பதற்கு உதவினார்.

"புதாட உண, கெதரட கிஹிங் மொனஹரி கரமு"

("மகனுக்குக் காய்ச்சல். வீட்டுக்குப் போய் ஏதாவது செய்வோம்")

அவர் கதைத்தது கன்சுலுக்கு விளங்காதபோதிலும், 'புதா', 'கெதர' போன்ற சொற்கள் அவனுக்கு விளங்கின. புலமைப் பரிசில் பரீட்சைக்காக அவன் அவற்றைப் படித்திருந்தான்.

அவர் மண்வெட்டியைத் தன்னுடைய வலது தோளில் வைத்தவாறு, இடது கரத்தால் கன்சுலின் வலது கரத்தைப் பிடித்துக் கொண்டு, நீர் தேங்கியிருந்த ஒற்றையடிப் பாதையில் நடந்தார். கன்சுல் அந்த இடத்தைப் பார்த்தான். அது ஒரு பரந்த, விசாலமான இடமாக இருந்தது. ஆங்காங்கே பெரிய மரங்கள் சில தெரிந்தன. மேடான இடங்களில் குடிசைகள் காணப் பட்டன. நிலத்தைப் பிரித்து, வேலிகள் அடைக்கப்பட்டிருந்தன. ஒவ்வொரு காணிக்குள்ளும் கொடிகளும், செடிகளும் காணப்பட்டன.

இப்போது மழை நின்றிருந்தது. ஆயினும், வானம் கருமேகங்களால் அடர்ந்திருந்தது. மீண்டும் மழை பெய்யப் போவதற்கான அறிகுறிகள் தென்பட்டன. அவர் கம்புகளினால் செய்யப்பட்ட சிறிய கடப்பை திறந்து கொண்டு, கன்சுலைப் பிடித்தவாறு நடந்தார். கன்சுல் தனக்கருகே இருந்த கொடிகளில் பாவற்காய்களும், புடலங்காய்களும் தொங்கிக் கொண்டிருப் பதைக் கண்டான். அவற்றுக்கருகே மழைநீரில் அமிழ்ந்தவாறு காணப்பட்ட செடிகளில் கத்தரிக்காய்களும், வெண்டிக் காய்களும் தெரிந்தன. அந்த முழு இடமும் காய்கறித் தோட்டங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள் என்பது கன்சுலுக்குத் தெரிந்தது. அந்தத் தோட்டத்திற்குள் இருந்த குடிசையை நெருங்கும்போது, அவர் சத்தமாகக் கூப்பிட்டார்,

"மெனிக்க, மெனிக்க! பொட்டக் எலியட்ட என்டகோ"

("மெனிக்க, மெனிக்க! கொஞ்சம் வெளிய வாங்களேன்")

அவருடைய குரலைக் கேட்டு ஒரு பெண் அந்தக் குடிசைக்குள் இருந்து வெளியே வந்தார். அவர் தனது கணவருடன் வருகின்ற கன்சுலைப் பார்த்ததும் வியப்புடன் விழிகளை உயர்த்தினார்.

"மெனிக்க, மே லமயா அர சியங் ஹஸக்கிங் நிதி மெருவா. மம அபே வத்தயங் இந்தலா வதுற எலிய தானகொட மெயாவ பெலுவா. மெயா காட்டத் தன்னே. மெயாட சிங்களத் தன்னே. பவ் மே. மெயாட அபி உதவுகரன்ட ஓன. மெயாட்ட உன எவில்லா"

("மெனிக்க, இந்த பையன் அந்தப் புளிய மரத்தடியில நித்திரயில இருந்தான். நான் நம்ம தோட்டத்தில இருந்து தண்ணிய வெளியில அகற்றும்போது இவனைப் பார்த்தேன். இவன் யாரென்று தெரியேல. இவனுக்கு சிங்களம் தெரியாது. பாவம். நாம இவனுக்கு உதவி செய்யணும். இவனுக்கு காய்ச்சல் வந்திருக்குது")

அந்தப் பெண் கன்சுலைப் பார்த்து புன்னகைத்தவாறு, அன்புடன் உள்ளே கூப்பிட்டார்.

"புதே அதுலட என்ட"

("மகன் உள்ள வாங்க")

குடிசைக்கு வெளியே மழைநீர் தேங்கி நின்றது. கன்சுல் கவனமாகக் கால்களை வைத்து குடிசைக்குள் சென்றான். அது ஒரு சிறிய குடிசை. அதன் தரையும், சுவர்களும் களிமண்ணினால் பூசப்பட்டிருந்தன. கூரை தென்னை ஓலைகளினால் வேயப்பட்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ருந்தது. அந்த குடிசை இரண்டு அறைகளைக் கொண்டிருந்தது. ஒரு அறை பெரிதாக இருந்தது. அந்த அறைக்குள் சிறிய விளக்கு எரிந்து கொண்டிருந்தது. அதன் வெளிச்சத்தில் அங்கிருந்த பொருட்களை கன்சுலால் பார்க்க முடிந்தது.

கன்சுல் உள்ளே வந்ததும், அந்தப் பெண் ஒரு சாக்கை தரையில் விரித்து, அதன்மேல் ஒரு பன்பாயை விரித்தார். பின்னர் ஒரு தலையணையையும் அதில் வைத்தார்.

"புதே, மெதன வாடிவென்ட"

("மகன், இதில உட்காருங்க")

அவர் கையைக் காட்டிக் கதைத்ததால், அவர் என்ன சொல்கிறார் என்பது கன்சுலுக்கு விளங்கியது. அவன் அதில் அமர்ந்ததும், அப்பெண் ஒரு துவாயை எடுத்து கன்சுலின் தலையை துவட்டினாள். பின்னர், ஒரு ஓரத்தில் வைக்கப்பட்டிருந்த ஒரு தகரப் பெட்டிக்குள் இருந்து ஒரு சட்டையையும், சாரனையும் எடுத்து வந்து அவனிடம் நீட்டினார்.

"புதே, மே அந்துங் தான்ட"

("மகன், இந்த உடுப்பப் போடுங்க")

கன்சுல் தனது உடைகளைக் களைந்து விட்டு, அவர் தந்த உடைகளை அணிந்து கொண்டான். அந்த சட்டை அவனுக்குப் பொருத்தமானதாக இருந்தது. உலர்ந்த ஆடைகளை அணிந்ததும் கன்சுலின் உடலில் சற்று சூடு ஏறத் தொடங்கியது. இருந்தும் அவன் உடல் காய்ச்சலினால் நடுங்கிக் கொண்டேயிருந்தது. அந்தப் பெண் அடுத்த அறைக்குள் சென்றாள்.

அந்த அறை சிறிதாக இருந்தது. அந்த அறைக்குள் இருந்த அடுப்பில் நெருப்பு எரிந்து கொண்டிருந்தது. அடுப்பில் மேல் வைக்கப்பட்டிருந்த சிறிய மண்பானையில் தண்ணீர் கொதிக்கும் சத்தம் கன்சுலுக்குக் கேட்டது. அந்தப் பெண் அடுப்பின் முன்னால் போடப்பட்டிருந்த சிறிய பலகைக் குற்றியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமர்ந்தவாறு கோப்பி தயாரித்தார். பின்னர், தும்புகள் அகற்றப்பட்டு, நன்கு சீவி, மழமழப்பாக்கப்பட்டிருந்த ஒரு தென்னஞ் சிரட்டையில் அவர் கன்சுலுக்கு கோப்பி கொண்டு வைத்தார். கோப்பிச் சிரட்டைக்கு அருகே இன்னொரு சிரட்டையில் சிறிதாக வெட்டப்பட்டிருந்த கித்துள் துண்டுகளையும் கொண்டு வந்து வைத்தார். அவர் கன்சுலைப் பார்த்து புன்னகைத்தவாறு அதை அருந்தும்படி சைகையுடன் கூறினார்,

"புதே பொன்ட"

("மகன் குடிங்க")

சொல்லி விட்டு, அவர் வெளியே ஒரு மரக்குற்றியில் அமர்ந்திருந்த தனது கணவருக்கு, இன்னொரு சிரட்டையில் கோப்பியினை எடுத்துப் போனார். கன்சுல் ஒரு துண்டு கித்துளை எடுத்துக் கடித்தான். அது இனிப்பாகவும், சுவையாகவும் இருந்தது. பின்னர் ஆவி பறந்து கொண்டிருந்த கோப்பிச் சிரட்டையை வாயில் வைத்து மெல்ல உறிஞ்சினான். அளவான சூட்டுடன், கித்துளின் இனிப்பும் சேர்ந்து அந்தக் கோப்பி அமுதம் போன்று சுவையாக இருந்தது. நேற்றுக் காலையில் இருந்து எதுவுமே சாப்பிடாமல் இருந்த கன்சுலுக்கு அந்த கோப்பி பெரும் உற்சாகத்தை தருவதாக இருந்தது. இரண்டு கித்துள் துண்டுகளுடன் அந்த கோப்பி முழுவதையும் அவன் குடித்து முடித்தபோது உடம்பில் சிறிது தெம்பு வந்ததுபோல் இருந்தது.

கோப்பியை குடித்ததும் அவனுடைய உடலில் வியர்வை உண்டாகியது. அந்த வியர்வையுடன் அவனுக்கு களைப்பும் ஏற்பட்டது. அவன் கண்கள் சொருகின. அவனுக்கு உறங்க வேண்டும்போல இருந்தது. உள்ளே வந்த அந்தப் பெண், அவனது நிலையைப் பார்த்ததும்,

"புதே, மெதன நிதி கரன்ன. மம கெந்த உயலா தென்னங்"

("மகன், இதில நித்திர கொள்ளுங்க. நான் கஞ்சி காய்ச்சித் தாறேன்")



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரது சைகையைப் புரிந்து கொண்ட கன்சுல் தனது கால்களை நீட்டி, அந்தப் பாயில் படுத்தான். கீழே சாக்கு விரிக்கப்பட்டிருந்ததால் பாய் இதமான கதகதப்புடன் இருந்தது. இரவு கல்லிலும், முள்ளிலும் நீண்ட தூரம் ஓடியதாலும், கால்களை மடக்கியவாறு உறங்கியதாலும், வலியெடுத்துக் கொண்டிருந்த அவனுடைய கால்கள், இப்போது நீட்டி, நிமிர்ந்து படுத்தபோது சுகமாக இருந்தன. அவனுடைய கண்கள் தாமாகவே மூடின. கன்சுல் உறக்கத்தில் ஆழ்ந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# -10-

# கன்சுலும் காமினியும்

கன்சுல் கண்களைத் திறந்தபோது, வெளியே பலத்த மழை பெய்து கொண்டிருக்கின்றது என்பதை உணர்ந்து கொண்டான். குடிசையின் கூரையில், மழைநீர் தொப்புதொப்பென்று விழும் சத்தம் கேட்டது. வானத்தில் இடிமுழக்கங்கள் கேட்டவண்ணம் இருந்தன. இடைக்கிடை மின்னல் வெட்டியது.

கன்சுல் கையை ஊன்றி எழுந்து பாயில் அமர்ந்தான். மெல்லிய விளக்கு வெளிச்சத்தில் அங்கிருந்தவர்களை அவனால் பார்க்க முடிந்தது. அவனை அழைத்து வந்தவர் அவனுடைய பாயின் ஓரத்தில் அமர்ந்திருந்தார். அதற்கு சற்றுத் தள்ளி இன்னொரு பாயில் அந்தப் பெண் அமர்ந்திருந்தாள். அவருக்கு அருகே, காலையில் அவன் அங்கு வந்தபோது இருந்திராத ஒரு பையன் அமர்ந்திருந்தான். கன்சுல் தன்னைப் பார்ப்பதைக் கண்டதும் அவன் கன்சுலைப் பார்த்து, நட்புடன் சிரித்தான். கன்சுலும் பதிலுக்கு சிரித்தான்.

அவனுக்கு கன்சுலின் வயதுதான் இருக்கும். கன்சுலைப் போன்று அதே உயரமுள்ளவனாக அவனும் இருந்தான். ஆனால் கன்சுலை விட கொஞ்சம் மெல்லிதாக இருந்தான். அந்தப் பெண் கன்சுலைப் பார்த்துக் கூறினாள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மெயா காமினி. அபே புதா"

("இது காமினி. எங்க மகன்")

அவர் கூறியபோது அந்தப் பையன் வெட்கத்துடன் சிரித்தான்.

"புதே இன்ட. மங் ஓயாட கெந்த தென்னங்"

("மகன் இருங்க. நான் உங்களுக்கு கஞ்சி தாறேன்")

அந்தப் பெண் கூறிவிட்டு, அடுப்படிக்கு சென்று ஒரு அலுமினியப் பாத்திரத்தில் கஞ்சி ஊற்றிக் கொண்டு வந்தார். அந்தப் பாத்திரத்தை கன்சுலின் முன்னால் வைத்துவிட்டு,

"பொன்ட புதே"

("குடிங்க மகன்")

என்று பரிவுடன் கூறினாள். கன்சுலுக்கு காய்ச்சல் குறையாத போதிலும், பசி கடுமையாக இருந்தது. அவன் அந்தப் பாத்திரத்தை இரு கைகளாலும் தூக்கினான். அவனது கைகள் நடுங்கின.

"பலளா, பலளா...."

("பார்த்து, பார்த்து....")

அந்தப் பெண் அவனிடம் கூறினார். கன்சுல் கஞ்சை உறிஞ்சிக் குடித்தான். அளவான சூட்டுடன், கீரையும் கலந்திருந்த அந்தக் கஞ்சி அவனுக்கு மிகவும் சுவையாக இருந்தது. கொஞ்சம் கொஞ்சமாக முழுக் கஞ்சியையும் அவன் குடித்து முடித்தான். குடித்து முடித்ததும் அவனுக்கு வியர்த்தது, சிறிது களைப்பாகவும் இருந்தது. காய்ச்சல் காய்ந்து கொண்டிருந்தபோதும், உடலில் வலி சிறிது குறைந்திருந்தது.

"புதே இந்த கன்ட. மங் ஓயாட உனட பெஹத் தென்னங்"

("மகன் இருந்து கொள்ளுங்க. நான் உங்க காய்ச்சலுக்கு மருந்து தாறேன்.")



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று கூறிவிட்டு, அந்தப் பெண் மீண்டும் அடுப்படிக்குச் சென்றாள். சிறிது நேரத்தின் பின்னர், அவர் காலையில் கோப்பி கொண்டு வந்த அதே தேங்காய்ச் சிரட்டையில் மருந்தும் கித்துள் துண்டுகளும் கொண்டு வந்து கன்சுலின் முன்னே வைத்தார்.

"புதே பொன்ட"

("மகன் குடிங்க")

கன்சுல் சிரட்டையை எடுத்துப் பார்த்தான். அதற்குள் தேனீரைப் போன்ற ஒரு மருந்து இருந்தது. ஒரு கித்துள் துண்டை எடுத்து கடித்தவாறு அந்த மருந்தை கொஞ்சம் குடித்தான். அது கசப்பாக இருந்தது. எனினும் கித்துள் துண்டைக் கடித்துச் சப்பியவாறு, அவன் முழு மருந்தையும் குடித்தான்.

அவன் குடித்து முடித்ததும், அந்தப் பையன் எழுந்து வந்து, கன்சுலுக்கு அருகில் அமர்ந்தான். கன்சுலைப் பார்த்து புன்னகைத்தவாறு அவன் கூறினான்.

"மகே நம காமினி. ஒயாகே நம மொகத்த?"

("என்னுடைய பெயர் காமினி. உன்னுடைய பெயர் என்ன?")

கன்சுல் இந்த வார்த்தைகளை வகுப்பில் படித்திருக்கிறான். எனவே அவன் மெல்ல மெல்ல பதில் சொன்னான்,

"மகே... நம... கன்சுல்"

("என்னுடைய.... பெயர்..... கன்சுல்")

அவன் சிங்களத்தில் இவ்வாறு திக்கித் திக்கிக் கூறியதும் அவர்கள் மூவரும் அவனை வியப்புடன் பார்த்தார்கள்.

"புதாட சிங்கள தன்னவாத?"

("மகனுக்கு சிங்களம் தெரியுமா?")

என்று காமினியின் தந்தை கன்சுலிடம் கேட்டார்.

"நே. மம.... பாச..ல்.. இகன..வா"

("இல்ல. நான்.... பாட....சாலை.... படித்த.....")



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கன்சுல் திக்கித் திக்கி கூறினான். கன்சுல் கூறியதைக் கேட்டு அவர்களுக்கு மிகவும் சந்தோசமாக இருந்தது.

"ஹொந்தய் புதே. காமினித் தெக்க கதாகரலா இன்ன"

("நல்லது மகன். காமினியுடன் கதைத்துக் கொண்டு இருங்க")

காமினியின் தந்தை கன்சுலிடம் கூறிவிட்டு, காமினியின் தாயுடன் சமையலறைக்குள் போனார். அங்கே ஒரு மண்சட்டிக்குள் இருந்த தண்ணீருக்குள் மீன்கள் சில துடித்துக் கொண்டிருந்தன. அவர் அந்தப் பானையை தூக்கிக் கொண்டு வந்து கன்சுலிடம் காட்டினார்.

"புதே, மே மாலு ஒக்கம காமினி தமாய் அள்ள கன்னவா. ஏயா உதய கிஹில்லா அர பொகுணங் அள்ள கத்தா"

("மகன், இந்த எல்லா மீன்களையும் காமினிதான் பிடித்து வந்தான். அவன் காலயில போய் அந்த குளத்தில பிடித்தான்")

அவர் காமினியைக் காட்டி கூறினார். அவர் குரலில் மகிழ்ச்சியும், பெருமையும் நிறைந்திருந்தன. அவர் கூறியதைக் கேட்டு காமினி வெட்கப்பட்டான். அவன் முகத்தைக் குனிந்து கொண்டான்.

கன்சுல் துடித்துக் கொண்டிருந்த அந்த மீன்களைப் பார்த்தான். அவன் இன்றுதான் முதன் முதலாக உயிருள்ள பெரிய மீன்களைப் பார்க்கிறான். அவனுக்கு அவற்றைப் பார்க்க வியப்பாக இருந்தது. அவை வழுவழுப்புடன் நீருக்குள் நெளிந்து கொண்டிருந்தன. தன்னைப் போன்ற ஒரு சிறுவன் அவற்றைப் பிடித்திருக்கிறான் என்பதை அவனால் நம்ப முடியவில்லை. காமினியின் தந்தை அவற்றை எடுத்துக் கொண்டு மீண்டும் சமையலறைக்குள் சென்றார்.

அவர் சென்றதும் காமினி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஔயா பாசல யனவாத? மம ஹதறவெனி பந்தியங் இகனகன்னவா. ஔயா?"

("நீ பாடசாலைக்குப் போகிறாயா? நான் நாலாம் வகுப்பு படிக்கிறேன். நீ?")

என்று கன்சுலிடம் கேட்டான். கன்சுலுக்கு 'பாசல' என்றால் பாடசாலை என்று தெரியும். காமினி 'ஹதறவெனி' என்று சொன்னபோது அது நான்கு எனப் புரிந்தது. அதேபோன்று 'பந்திய' என்றால் வகுப்பு என்பதும் அவனுக்கும் தெரியும். அதனால் தன்னிடம் பாடசாலையைப் பற்றியும், தான் என்ன வகுப்பு படிக்கிறேன் என்பது பற்றியும் அவன் கேட்கிறான் என்பதை கன்சுல் ஊகித்தான். அவன் தனது கைவிரல்களால் 'எகய்', 'தெகய்'.. என்று எண்ணி,

"மம.... பாசல... பந்தி பகய்"

("நான்.... பாடசாலை .... ஐந்து வகுப்பு")

எனக் கூறினான். அதைக் கேட்டு காமினி,

"பஸ்வென பந்தித?"

("ஐந்தாம் வகுப்பா?")

என்று கேட்டான். கன்சுல் 'ஆம்' எனத் தலையை ஆட்டினான்.

கஞ்சியும் மருந்தும் குடித்ததால் கன்சுலுக்கு களைப்பாக இருந்தது. அவனுக்கு மீண்டும் உறங்க வேண்டும்போல் இருந்தது. அப்படியே அவன் சாய்ந்து படுத்தான். உடனடி யாகவே கண்கள் சொருக, அவன் உறங்கி விட்டான்.

கன்சுல் இம்முறை கண்விழித்தபோது, அவனுடைய உடல் வியர்த்திருந்தது. அவனுக்கு ஏற்பட்டிருந்த காய்ச்சல் அகன்று விட்டது. தனது உடல் தெம்புடன் இருப்பதை அவன் உணர்ந் தான். அவன் கைகளை ஊன்றி எழுந்து, பாயில் அமர்ந்தான்.

வெளியே மழை பலமாக பெய்து கொண்டிருந்தது. அவன் படுத்திருந்த பாயின் ஓரத்தில் காமினி அமர்ந்திருந்தான். பக்கத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போடப்பட்டிருந்த பாயில் காமினியின் தந்தையும், தாயும் அமர்ந்திருந்தார்கள். அவர்களின் முகங்களில் கவலை தெரிந்தது.

காமினியின் தந்தை குடிசையின் ஓலைக் கதவைத் திறந்து வெளியே பார்த்தார். கன்சுலுக்கும் அதனூடாக வெளியே பார்க்க முடிந்தது. அடர்த்தியான மழைத்துளிகள் வீழ்ந்து கொண்டிருந்தன. காலையில் தோட்டத்தில் அவன் பார்த்த செடிகள் இப்போது தெரியவில்லை. எங்கும் மழைநீர் நிறைந்து வெள்ளக் காடாகக் காட்சியளித்தது. அந்தக் குடிசையின் வாசல் வரை நீர் தளும்பிக் கொண்டு நின்றது. மழை விடுவதற்கான எந்த அறிகுறியும் தென்படவில்லை. திறந்திருந்த கதவினூடாக குளிர்காற்று உள்ளே நுழைந்தது. கன்சுலின் உடல் நடுங்கியது. காமினியின் தந்தை கதவை அடைத்து விட்டு மீண்டும் பாயில் வந்து அமர்ந்தார்.

"இதிங்... ஈட்டபஸ்ஸே... கங்வதுற தமாய்"

("இனி.... இதுக்குப் பிறகு வெள்ளம்தான்)

அவர் யோசனையுடன் கூறினார். அவர் குரலில் கவலை நிறைந்திருந்தது.

"அபி.... கொய்ஹரி யன்ட ஓன"

("நாங்க.... எங்கேயாவது போக வேணும்")

அவர் மெல்லிய குரலில் சொன்னபோது, காமினியின் தாய் எதுவும் கூறவில்லை. அவர் முகம் கவலையில் தோய்ந்திருந்தது.

காமினி கன்சுலைப் பார்த்து சிரித்தான். கன்சுலும் சிரித்தான். காமினி எழுந்து போய், ஒரு மூலையில் வைக்கப்பட்டிருந்த பெட்டியின் மேல் இருந்த தன்னுடைய 'ஸ்கூல் பேக்கை' எடுத்து வந்தான்.

அதைத் திறந்து அதற்குள் இருந்த புத்தகங்களையும், கொப்பிகளையும் எடுத்தான். புத்தகங்கள் எல்லாவற்றிலும் 4 என்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கம் அச்சிடப்பட்டிருந்தது. கன்சுல் அவற்றுள் இருந்த ஆங்கில புத்தகத்தை எடுத்தான். அதை அவன் சென்ற வருடம் படித்திருக்கிறான். பின்னர் நீளமாக இருந்த சித்திரக் கொப்பியை எடுத்து, விரித்துப் பார்த்தான். அதில் காமினி வரைந்த சித்திரங்கள் இருந்தன. அவற்றில் பெரும்பாலானவை மரங்களாகவும், மிருகங்களாகவும் இருந்தன. அவன் அவற்றை அழகாக வரைந்திருந்தான்.

கன்சுல் அந்த சித்திரக் கொப்பியை வாங்கினான். காமினியின் பென்சிலை எடுத்து, அதில் அவன் வரையத் தொடங்கினான். அவன் வரைவதை காமினி விழிகள் உயர்ந்திருக்க, ஆர்வத்துடன் பார்த்துக் கொண்டிருந்தான். கன்சுல் தன்னுடைய வாப்பாவின் பெரிய, கருநிற 'மோட்டார் சைக்கிளை' கற்பனையில் கொண்டு வந்து, அதேபோன்ற ஒரு 'மோட்டார் சைக்கிளை' கொப்பியில் வரைய ஆரம்பித்தான்.

அவன் என்ன வரைகிறான் என்பது முதலில் காமினிக்கு புரியவில்லை. ஆனால் அவன் வரைய, வரைய கம்பீரமான, அழகான மோட்டார் சைக்கிள் உருவாகி வருவதை காமினி வியப்புடன் பார்த்தான். கன்சுல் வரைந்து முடிந்ததும், அவன் அதை காமினியிடம் நீட்டினான். காமினியால் தனது கண்களை நம்ப முடியவில்லை. அந்த 'மோட்டார் சைக்கிள்' நிஜமான 'மோட்டார் சைக்கிள்' போன்றே இருந்தது.

சற்று நேரம் அதைப் பார்த்து விட்டு,

"அம்மே, மே பலன்ன"

("அம்மா, இதப் பாருங்க")

என்று கூறியவாறு சமையலறைக்குள் இருந்த தனது தாயிடம் ஓடிப் போய் அந்தப் படத்தைக் காட்டினான். தாயுடன் சேர்ந்து அவனுடைய தந்தையும் அப்படத்தைப் பார்த்தார். அதைப் பார்த்ததும், அந்த இக்கட்டான நிலையிலும் அவர்கள் இருவரின் முகங்களிலும் மகிழ்ச்சி தோன்றியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"புதே, ஹரீ ஹொந்தாய்"

("மகன், மிச்சம் நல்லம்")

என்று தாயும்,

"ஹரிம லஸ்ஸனய்"

("மிகவும் அழகு")

என்று தந்தையும் மனநிறைவுடன் அவனைப் பாராட்டினார்கள். பின்னர், காமினியின் தாய்,

"ஹரி, அபி பத் கமு"

("சரி, நாம சோறு சாப்பிடுவோம்")

என்று கூறியபடி, நான்கு அலுமினிய பீங்கான்களில் சோற்றைப் போட்டு, அதற்குள் கறியையும் எடுத்து வைத்தார்.

அவற்றில் ஒரு பீங்கானை அவர் கன்சுலிடம் கொண்டு வந்து கொடுத்தார். காமினியும் தன்னுடைய பீங்கானை எடுத்துக் கொண்டு, கன்சுலுக்கு அருகில் வந்து உட்கார்ந்தான்.

கன்சுல் அந்தப் பாத்திரத்தை பார்த்தான். அதற்குள் சோறும் மீன்கறியும் இருந்தன.

"புதே, மே மாலு உதய காமினி அல்ல கத்தா"

("மகன், இந்த மீன் காலயில் காமினி பிடித்து வந்தது")

என்று காமினியின் தாய் கூறினார். அவர் கூறியது அவனுக்கு விளங்கா விட்டாலும், 'உதய' என்ற சொல்லும் 'காமினி' என்ற சொல்லும் அவர் என்ன சொல்கிறார் என்பதை அவனுக்குப் புரிய வைத்தன. காலையில் தான் பார்த்த அந்த உயிருள்ள மீன்கள்தான் இப்போது சமைக்கப்பட்டு கறியாக இருக்கிறது என்பதை அவன் உணர்ந்து கொண்டான்.

அவன் அந்த மீனில் ஒரு துண்டை பிய்த்து சாப்பிட்டான். அது மிகவும் சுவையாக இருந்தது. அத்தகைய சுவையை அவன் இதற்கு முன்னர் ஒருபோதும் உணர்ந்ததில்லை. அது வாய்க்குள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்றதும் அவனுக்கு கடுமையான பசி எடுத்தது. இரண்டு நாட்களுக்குப் பின்னர் அவன் இப்போதுதான் சோறு சாப்பிடுகிறான். அவன் மிகவும் ஆவலுடன் சாப்பிட்டான். அவன் அவ்வாறு சாப்பிடுவதைப் பார்த்த காமினியின் தாய், இன்னும் கொஞ்சம், சோறும் கறியும் அவனுக்கு வைத்தார். கன்சுல் அவ்வளவையும் சாப்பிட்டு முடித்தான். இதற்கு முன்னர் அவன் இவ்வளவு அதிகமாக சாப்பிட்டதில்லை. பசியும், ருசியும் அவனை அதிக அளவு சாப்பிட வைத்தன.

சாப்பிட்டு முடித்ததும், தனக்கு பழைய தெம்பு வந்ததுபோல கன்சுல் உணர்ந்தான். காய்ச்சலும் அகன்று, சாப்பாடும் வயிற்றுக்குள் சென்றதால் அவனுக்கு உற்சாகமாக இருந்தது. அவர்கள் எல்லோரும் சாப்பிட்டு முடித்து, மீண்டும் பாய்களில் அமர்ந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# -11-

# ஓர் இயற்கை அனர்த்தம்

வெளியே மழை தொடர்ந்தும் பெய்து கொண்டிருந்தது. காமினியின் தந்தையும் தாயும் எதுவும் பேசவில்லை. அப்போது தூரத்தில் இருந்து,

*"சில்வா, சில்வா"*

என்று யாரோ உரக்க அழைப்பது கேட்டது. உடனே கன்சுலின் தந்தை கதவை திறந்து வெளியே எட்டிப் பார்த்து,

*"ஒவ் பெரேரா, மொனவத?"*

*("ஓம் பெரேரா, என்ன?")*

என்று சத்தமாகக் கேட்டார்.

*"அர வேவ கெடில்லாலு. மினிசு ஒக்கொம கெதரிங் இந்தலா பாசலட யன்டலு"*

*("அந்தக் குளம் உடைஞ்சிட்டாம். ஆக்கள் எல்லோரையும் வீட்டில் இருந்து பாடசாலைக்குப் போகட்டாம்")*

அவர் கூறியதைக் கேட்டதும் காமினியின் தாய் பதைபதைப்புடன் எழுந்து விட்டார்.

*"அனே தெய்யனே! தெங் மொனவத கரன்ன?"*

*("ஐயோ கடவுளே! இனி என்ன செய்யிற?")*

அவர் தனது கணவரைக் கேட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அபி இக்மன்ட லேஸ்தி கரமு. படு ஒக்கொம காலா பாஸலட யமு"

("நாங்க விரைவா வெளிக்கிடுவோம். எல்லா சாமான்களயும் எடுத்துக் கொண்டு பாடசாலைக்குப் போவோம்")

காமினியின் தந்தை வேகமாகக் கூறினார். பின்னர் அவர் காமினியைப் பார்த்து,

"புதே, ஒயாகே படு ஒக்கம கண்ட"

(மகன், உன்ட எல்லா சாமான்களயும் எடு")

என்று கூறினார். பின்னர் அவர் மூலையில் இருந்த தகரப் பெட்டியை எடுத்துத் திறந்தார். கொடியில் கிடந்த துணிகளை எடுத்து அதற்குள் வைத்தார். காமினியும் தனது புத்தகங்களை எடுத்து, 'ஸ்கூல் பேக்'கிற்குள் வைத்தான். பின்னர் கொடியில் கிடந்த அவனுடைய உடுப்புகளையும், கன்சுலின் உடைகளையும் எடுத்து, அந்தப் பேக்கிற்குள் வைத்தான். காமினியின் தாய், சமையலறைக்குள் இருந்த சட்டி, பானைகளை இரண்டு சாக்குகளுக்குள் போட்டு, அவற்றை கயிற்றுத் துண்டுகளினால் கட்டினார்.

அவர்கள் கதைத்த விடயம் கன்சுலுக்கு புரியவில்லை. எனினும், அவர்களின் முகங்களில் தென்பட்ட பரபரப்பையும், அவர்கள் சாமான்களை அவசர அவசரமாக கட்டுவதையும் பார்த்து, ஏதோ ஒரு ஆபத்து வரப் போகின்றது என்பதை உணர்ந்து கொண்டான்.

அத்தகைய ஒரு நிலை ஏற்படுவதற்கு முன்னர் அவர்கள் இங்கிருந்து போய்விட முடிவு செய்திருக்கிறார்கள். கன்சுல் பாயில் இருந்து எழுந்து கொண்டான். காமினியின் தாய் பாய்களைச் சுற்றி எடுத்தார்.

"அனே எலிய குகுள் தியனவா நே"

(ஐயோ, வெளியில் கோழி இருக்கல்லவா")



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காமினியின் தாய் கூறியதும், அவனுடைய தந்தை ஒரு சாக்கை எடுத்து தலையில் போட்டுக் கொண்டு வெளியே போனார்.

சிறிது நேரத்தின் பின் அவர் உள்ளே வந்தபோது அவரது கைகளில் ஒரு சேவலும், இரண்டு கோழிகளும் இருந்தன. அவர் அவற்றின் கால்களை கயிற்றுத் துண்டுகளினால் கட்டினார். அவற்றை ஒரு பிரம்புக் கூடைக்குள் வைத்தார். காமினியின் தாய் இன்னொரு பிரம்புக் கூடைக்குள் 'டோர்ச் லைட்', விளக்குகள், மண்ணெண்ணைப் போத்தல், கத்திகள் போன்றவற்றை எடுத்து வைத்தார்.

எல்லாம் தயாராகியதும், அவர் கன்சுலைப் பார்த்து,

"புதே, அபி பாசலட யமு"

("மகன், நாங்க பாடசாலைக்குப் போவோம்.")

என்று கூறினார். பின்னர் ஒரு சாக்கை எடுத்து, அதன் மூலையை மடித்து, கன்சுலின் தலைக்கு மேலால் அதைப் போர்த்தினார். அது 'ரெய்ன் கோட்' போன்று, அவனுடைய உடலை மூடியது. அதேபோன்று ஒவ்வொரு சாக்கை காமினியின் மீதும், அவனுடைய தாயின் மீதும் போர்த்தினார்.

"ஹரி அபி யமு. தெய்யனே அபிட உதவுகரன்ன"

("சரி, நாங்க போவோம். கடவுளே எங்களுக்கு உதவி செய்")

என்று கடவுளைப் பிரார்த்தித்து விட்டு, காமினியின் தந்தை சட்டி, பானைகள் வைத்துக் கட்டப்பட்டிருந்த ஒரு சாக்கை தூக்கி தனது வலது தோளில் வைத்தார். மண்வெட்டியை இடது தோளில் வைத்தார். பின்னர் காமினியின் தாயைப் பார்த்து,

"அர குகுள் கூடயங் மே பெத்த தாண்ட"

("அந்த கோழிக் கூடையை இந்தப் பக்கம் வையுங்க")

என்று தனது இடது கரத்தை தலையால் காட்டினார். காமினியின் தாய், கோழிகள் இருந்த கூடையை அவரது இடது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரத்தில் தூக்கி கொடுத்தார். பின்னர் காமினியின் தாய் சட்டி, பானைகள் இருந்த மற்ற சாக்கை தன்னுடைய தலையில் வைத்துக் கொண்டார். அத்துடன் தனது வலது கையில் ஒரு கோடலியையும் எடுத்துக் கொண்டார். காமினி தனது 'ஸ்கூல் பேக்கை' முதுகின் பின்னால் போட்டுக் கொண்டு, உடுப்புகள் இருந்த தகரப் பெட்டியை தனது தலையில் வைத்துக் கொண்டான். கன்சுல் விளக்குகளும், கத்திகளும் இருந்த கூடையைத் தூக்கி தன்னுடைய இடது தோளில் வைத்தான். அத்துடன் பாய்களை தனது வலது தோளில் வைக்குமாறு அவன் சைகை செய்தான். அதைப் பார்த்து, காமினியின் தந்தையும், தாயும் மெல்லச் சிரித்தார்கள். பின்னர் தாய் அவனுடைய வலது தோளில் பாய்களை வைத்தார்.

அவர்கள் அனைவரும் வெளியே வந்தார்கள். வெளியே மழை கொட்டிக் கொண்டிருந்தது. தோட்டம் முழுவதும் வெள்ளம் நிறைந்து இருந்தது. அனேகமான செடிகள் தண்ணீருக்குள் அமிழ்ந்து விட்டன. கன்சுலின் முழங்கால்கள் வரை தண்ணீர் உயர்ந்து விட்டது.

"இக்மனட்ட யன்ட ஒன"
("விரைவாகப் போக வேணும்")
காமினியின் தந்தை அவசரப்படுத்தினார். அவருடைய குரலில் கலவரமும், கவலையும் தெரிந்தன. எல்லோரும் விரைவாக நடக்க ஆரம்பித்தார்கள். கன்சுல்தான் எல்லோருக்கும் பின்னால் சென்றான். அவனுக்கு முன்னால் சென்று கொண்டிருந்த காமினியின் தாய் ஒரு முறை திரும்பி தங்களுடைய வீட்டைப் பார்த்தார். அவருடைய முகம் வாடியிருந்தது.

அவர்கள் மூன்று பேரும் வேகமாக நடந்தார்கள். ஆனால் கன்சுலினால் கூடையையும் பாய்களையும் தூக்கிக் கொண்டு, கொட்டும் மழையில் வேகமாக நடக்க முடியவில்லை. இருந்தும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் தன்னுடைய முழு சக்தியையும் பயன்படுத்தி, அவர்களுடன் நடந்து கொண்டிருந்தான்.

ஒரு நாளுக்குள் தனக்கு ஏற்பட்ட நிகழ்வுகளால் கன்சுல் குழம்பிப் போனான். நேற்று கிட்டத்தட்ட இந்நேரம் அவன் தன்னுடைய வீட்டை விட்டுப் புறப்பட்டான். இன்று அவன் முன்பின் தெரியாத ஒரு இடத்தில், முன்பின் தெரியாதவர்களுடன் இந்தப் பெருமழையில் நடந்து கொண்டிருக்கிறான். அவர்க ளிடம் தான் யாரென்று அவனால் சொல்ல முடியவில்லை. அவர்களும் அதுபற்றி அவனிடம் கேட்கக் கூடிய நிலையில் இல்லை. நேற்று அவன் மட்டும் ஆபத்தில் இருந்தான். இன்று அவர்கள் அனைவரும் ஆபத்தில் இருக்கிறார்கள். இக்கட்டான நிலைமைகள் வரும்போது, அவனுடைய உம்மம்மா சொல்வது போன்று, 'வல்ல நாயனே எங்களை காப்பாத்து' என்று அவன் இப்போது தனக்குள் சொல்லிக் கொண்டான்.

அவர்கள் எதுவும் பேசாமல் நடந்து கொண்டிருந்தார்கள். வழியெங்கும் தண்ணீர் நிரம்பி வழிந்தது. காமினியின் தந்தை மட்டும் சில இடங்களில்,

"பலலா..பலலா.. பரிசம எண்ட"

("பார்த்து.. பார்த்து.. கவனமாக வாங்க")

என்று சொல்லிக் கொண்டு வந்தார்.

கன்சுலைப் போர்த்தியிருந்த சாக்கு மழையில் நனைந்து ஊறிவிட்டது. அது இப்போது அவனுக்குப் பாரமாகவும் இருந்தது. இருந்தாலும் அவன் எதுவும் சொல்லாமல் நடந்தான். நேற்று தனக்கு ஏற்பட்ட பெரும் ஆபத்தான நிலைமையுடன் ஒப்பிட்டுப் பார்த்தால், இது சாதாரணமானது என்று அவன் நினைத்துக் கொண்டான். நேற்று இரவு யாருமற்ற நிலையில் தான் பதைபதைக்க நீண்ட தூரம் ஓடியதை அவன் நினைவுபடுத்தி னான், இப்போது, தனக்கு ஆதரவாக இருக்கின்ற ஒரு அன்பான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடும்பத்தினருடன் தான் நடந்து செல்வது எவ்வளவு ஆறுதலான விடயம் என்று எண்ணி அவன் தன்னை திடப்படுத்திக் கொண்டான்.

ஒரு அரைமணித்தியாலம் வரை நடந்த பின்னர், தூரத்தே ஒரு மேட்டுப் பகுதியில் ஒரு பாடசாலை இருப்பதை கன்சுல் கண்டான். தாங்கள் செல்ல வேண்டிய இடம் வந்து விட்டது என்பதை நினைக்க அவனுக்கு நிம்மதியாக இருந்தது. சற்று நேரத்தில் அவர்கள் அந்தப் பாடசாலையை அடைந்தார்கள்.

அப்பாடசாலை மேட்டு நிலத்தில் அமைந்திருந்ததால் அதன் சுற்றுப் புறத்தில் மழைநீர் அதிகளவில் தேங்கி நிற்கவில்லை. பெய்கின்ற மழை, வெவ்வேறு இடங்களுக்கு ஊடாக கீழ்நோக்கி வேகமாக ஓடிக் கொண்டிருந்தது. பாடசாலையைச் சுற்றி, ஏராள மான ஆடுகளும் மாடுகளும் நின்று கொண்டிருந்தன. அவை ஓயாமல் கத்திக் கொண்டிருந்தன. சில மாடுகளின் கழுத்துகளில் தொங்க விடப்பட்டிருந்த மணிகளின் சத்தமும் அங்கு கேட்டுக் கொண்டிருந்தது. ஆங்காங்கே சில நாய்களும் குரைத்த வண்ணம் நின்றன. பாடசாலையின் முன்புற கட்டிடத்திற்குள் ஏற்கனவே ஆட்கள் நிறைந்திருந்தார்கள்.

காமினியின் தந்தை, அவர்களை பாடசாலையில் பின்னால் இருந்த ஒரு கட்டிடத்திற்குள் கூட்டிச் சென்றார். அதற்குள் இன்னமும் ஆட்கள் நிறையவில்லை. அவர் வெறுமையாக இருந்த, அக்கட்டிடத்தின் மூலைக்கு அவர்களைக் கூட்டிச் சென்று, தனது தோள்களில் இருந்த சாமான்களை மெல்ல இறக்கி வைத்தார். ஏனையோரும் அவ்வாறே தத்தமது பொருட்களை இறக்கினார்கள். மழையில் நனைந்து ஊறியிருந்த சாக்குகளில் இருந்து நீர் வடியத் தொடங்கியதால், உடனடியாக அவற்றைக் களைந்து கட்டிடச் சுவரில் தொங்க விட்டார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கன்சுலின் சட்டை ஈரமாகியிருந்ததால் அவனுடைய உடலில் குளிர் ஏறியது. காமினியின் தந்தை தன்னுடைய சட்டையைக் கழற்றி அதைப் பிழிந்து, சுவரில் தொங்கப் போட்டார். அதேபோன்று காமினியும் தன்னுடைய சட்டையைக் கழற்றி பிழிவதைப் பார்த்த கன்சுல் தான் அணிந்திருந்த சட்டையையும் கழற்றிப் பிழிந்து, சுவரில் தொங்க விட்டான். ஈரச் சட்டை உடலில் இருந்து அகன்றதால், குளிர் குறைந்து விட்டது.

நேரம் செல்லச் செல்ல அந்த கட்டிடத்திற்குள்ளும் ஆட்கள் நிறைந்து விட்டார்கள். அது பகல் பொழுதாக இருந்த போதிலும், வானம் முற்றாக இருண்டு, கனத்த மழை பெய்து கொண்டிருந்த தால், அக்கட்டிடத்தில் வெளிச்சம் குறைவாக இருந்தது. மழையின் காரணமாக மரங்கள் சரிந்து விழுந்ததால், மின்சாரத் தடை ஏற்பட்டிருந்தது. அதனால் அங்கு மின்விளக்குகள் எரியவில்லை. எனவே காமினியின் தந்தை தாங்கள் கொண்டு வந்திருந்த மண்ணெண்ணெய் விளக்குகளில் ஒன்றை எரிய விட்டார். அதேபோன்று வேறு சிலரும் விளக்குகளை எரிய விட்டார்கள்.

கன்சுல் முற்றிலும் அந்நியமான ஒரு இடத்தில் இருந்தான். அவனுக்கு அங்கிருந்த யாரையும் தெரியவில்லை. தனக்கு உதவு கின்ற காமினியின் குடும்பத்தினர் மட்டுமே அவனுக்கு பழக்கமானவர்களாக இருந்தார்கள்.

இந்த இடம் எதுவென்றோ, தனது குடும்பத்தினருடன் தொடர்பு கொள்வது எப்படியென்றோ அவனுக்கு விளங்க வில்லை. இப்போதுள்ள நிலையில் தன்னைப் பற்றி காமினியின் தந்தையிடம் கூறவும் முடியாது. எனவே கொஞ்சம் பொறுப் போம் என்று அவன் முடிவு செய்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த பாடசாலை ஒரு அகதி முகாமாக மாறி விட்டது. குழந்தைகளின் அழுகைச் சத்தமும், பெரியவர்களின் அதட்டல்க ளும், ஒருவரோடு ஒருவர் பலத்த குரலில் கதைப்பதும் எங்கும் நிறைந்திருந்திருந்தன. வெளியே மழைக்குள் நனைந்தவாறு, ஆடுகளும் மாடுகளும் கனைத்துக் கொண்டிருந்தன. நாய்களும் குரைத்தன.

ஒரு கிராம சேவையாளரும், அவருடைய உதவியாளர் ஒருவரும் அங்கிருந்தவர்களின் விபரங்களை பதிந்து கொண்டி ருந்தார்கள். அதற்குள் ஊடகத்துறையைச் சேர்ந்தவர்கள் அங்கிருந்தவர்களை புகைப்படங்களும், 'வீடியோ'க்களும் எடுத் தார்கள். சிலரிடம் பேட்டியும் கண்டார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# -12-

# கன்சுலின் புதிய நண்பன்

கன்சுலும் காமினியின் குடும்பத்தினரும் தங்கியிருந்த கட்டிட மூலைக்கு அருகில் ஒரு தமிழ்க் குடும்பத்தினர் வந்து சேர்ந்தார்கள். அவர்கள் அங்கு வந்து சேர்ந்தபோது, அவர்கள் தமிழ் குடும்பத்தினர் என்பதை கன்சுல் அறியவில்லை. ஏனெனில் அவர்கள் மற்றவர்களுடன் சிங்கள மொழியில் உரையாடினார்கள். கணிசமான நேரம் சென்றதன் பின்னர், அவர்கள் தமக்குள் தமிழில் உரையாடியபோதுதான் அவர்கள் தமிழ்க் குடும்பத்தினர் என்பது கன்சுலுக்கு தெரிய வந்தது. அவன் மிகவும் மகிழ்ச்சியடைந்தான். தான் கதைத்துப் பழகக் கூடிய ஒரு குடும்பம் தனக்கு அருகில் இருக்கின்றது என்பது அவனுக்கு மனநிம்மதியையும் மகிழ்ச்சியையும் அளித்தது.

இருந்தபோதிலும் அவன் அக்குடும்பத்தினருடன் உடனடியாக கதைக்க முடியவில்லை. அவர்கள் மொத்தமாக ஏழுபேர் இருந்தார்கள். தாய், தந்தையுடன், ஒரு மூத்த மகளும், கன்சுலின் வயதை ஒத்த ஒரு பையனும், அவனுடைய தங்கையும், வயோதிப தாத்தாவும் பாட்டியுமாக ஏழு பேர் இருந்தார்கள். அந்த தாத்தாவும் பாட்டியும் மிகவும் பலவீனமான நிலையில் இருந்தார்கள். அவர்கள் முற்றாக நனைந்திருந்தார்கள். தாயும், தந்தையும் அவர்களின் தலைகளையும், உடல்களையும் துவட்டி, வேறு ஆடைகளை அவர்களுக்கு அணிவிப்பதில் அதிக நேரத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செலவிட்டார்கள். அதன் பின்னர் அவர்கள் தங்கள் ஆடைகளை யும் களைந்து, வேறு ஆடைகளை அணிந்து கொண்டார்கள்.

மாலை மறைந்து இரவாகியது. மழை பெய்து கொண்டேயிருந்தது.

அந்த தமிழ்க் குடும்பத்தில் இருந்த, தன்னுடைய வயதை ஒத்த சிறுவன் அந்தக் கட்டிடத்தின் வாசலுக்கு அருகில் நின்றவாறு வெளியே பார்த்துக் கொண்டிருந்தான். கன்சுல் காமினியையும் கூட்டிக் கொண்டு அவனிடம் சென்றான். அவனைப் பார்த்து,

"என்னுடைய பெயர் கன்சுல். உங்க பெயர் என்ன?"

என்று கன்சுல் கேட்டான். தனக்கருகில் ஒரு புதிய சிறுவன் வந்து நின்று தமிழில் கதைத்ததைக் கேட்டவுடன் அந்தச் சிறுவன் முதலில் திகைத்து விட்டான்.

பின்னர் அவன் சிரித்துக் கொண்டு,

"என்னுடைய பெயர் குமார்"

என்று கூறினான். பின்னர் அவன் கன்சுலைப் பார்த்து,

"நான் உங்கள இதற்கு முன்னர் பார்த்ததில்ல. நீங்க எங்க இருந்து வந்தீங்க?"

என்று கேட்டான். கன்சுல் தன்னைப் பற்றி இப்போதைக்கு எதுவும் கூறக் கூடாது என்று ஏற்கனவே முடிவு செய்திருந்தான். அதனால் அவன்,

"நான் இந்த ஊர் இல்ல. இவனுடைய பெயர் காமினி. இவங்க வீட்டிலதான் நான் இப்ப தங்கியிருக்கிறேன்."

என்று சொன்னான். குமார் காமினியைப் பார்த்து,

"மகே நம குமார்."

என்று சிங்களத்தில் தன்னை அறிமுகப்படுத்தினான். குமார் சிங்களத்தில் கதைத்ததைக் கேட்டு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உங்களுக்கு சிங்களம் தெரியுமா?"

என்று கன்சுல் அவனிடம் கேட்டான்.

"ஓம் எனக்குத் தெரியும்."

என்று குமார் கூறினான்.

"நீங்க ஏன் இங்க வந்தீங்க?"

என்று கன்சுல் குமாரிடம் கேட்டான். அதற்கு அவன்,

"நாங்க இங்க பக்கத்திலதான் இருக்கிறோம். இன்றைக்கு மத்தியானம் எங்க வீட்டுச் சுவரில பெரிய வெடிப்பு ஏற்பட்டது. அதனால் வீடு விழுந்து விடும் என்று நாங்க பயந்து போனோம். அதுதான் இங்க வந்தோம்"

"நீங்க என்ன வகுப்பு படிக்கிறீங்க"

என்று கன்சுல் குமாரிடம் மீண்டும் கேட்டான்.

"நான் ஆறாம் வகுப்பு படிக்கிறேன். நீங்க?"

என்று அவன் கன்சுலிடம் கேட்டான்.

"நான் ஐந்தாம் வகுப்பு. காமினி நாலாம் வகுப்பு"

என்று காமினியைக் காட்டி கூறினான்.

அதன் பின்னர் அவர்களுக்கு அதிகமாகக் கதைக்க முடியவில்லை. ஏனெனில், சிலர் முச்சக்கர வண்டிகளில் சமைத்த உணவுப் பொதிகளைக் கொண்டு வந்து, அந்தப் பாடசாலையில் இருந்தவர்களுக்கு விநியோகிக்கத் தொடங்கினார்கள். அவற்றைப் பெறுவதற்கு எல்லோரும் முண்டியடிக்கத் தொடங்கினார்கள். காமினியும் தந்தையும், தாயும் வந்து

"புதே ஓயாத் கன்ட"

("மகன் நீங்களும் எடுங்க")

என்று காமினியிடமும், கன்சுலிடமும் கூறினார்கள். அதேபோன்று குமாரின் அப்பாவும், அம்மாவும் வந்து தங்களுக்கென உணவுப் பொட்டலங்களை வாங்குவதற்காக நின்றார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அய்யே மடத் தென்ட"

("அண்ணா எனக்குந் தாங்க")

"அய்யே, மகே பவுலங் ஹறதறதெனிக் இன்னவா. மட 'பார்சல்' ஹறதறக் தென்ட"

("அண்ணா, என்ட குடும்பத்தில நாலு பேர் இருக்கிறாங்க. எனக்கு நாலு 'பார்சல்' தாங்க)

என்று ஒவ்வொருவரும் சத்தமிட்டுக் கூறியவாறு அவற்றைப் பெறுவதற்கு முயன்று கொண்டிருந்தார்கள். கன்சுலும் காமினியும், குமாரும் அவர்களுடன் நின்று உணவைப் பெற முயற்சித்தார்கள். கடைசியில் அவர்களுக்கும் உணவுப் பொட்டலங்கள் கிடைத்தன. அவற்றை எடுத்துக் கொண்டு அவர்கள் தமது குடும்பத்தினரிடம் சென்றார்கள்.

எல்லோரும் சாப்பிட்டு முடித்ததும், காமினியின் தந்தை கட்டிடத்தின் மூலையில் இருந்த ஒரு குப்பைக் கூடைக்குள் எஞ்சிய தாள்களையும் உணவு மீதிகளையும் போட்டார்.

"ஒக்கோம மெதனிங் தாண்ட"

("எல்லாரும் இதற்குள்ள போடுங்க")

என்று அவர் அங்கிருந்தவர்களிடம் கூறினார். எல்லோரும் அந்தக் கூடைக்குள் தத்தமது மீதிகளைப் போட்டார்கள். வெளியே ஒரு பெரிய நீர்த்தாங்கியில் குடிநீர் வைத்திருந்தார்கள். அதில் இருந்து நீரை எடுத்து அனைவரும் பருகினார்கள்.அதன் பின்னர் அனைவரும் உறங்குவதற்கு ஆயத்தம் செய்தார்கள். தாங்கள் கொண்டு வந்திருந்த சாக்குகளையும் பாய்களையும் விரித்தார்கள். அவை இல்லாதவர் களுக்கு, மற்றவர்கள் தம்மிடம் இருந்தவற்றைக் கொடுத்தார்கள். கன்சுலும், குமாரும், காமினியும் அருகருகே படுக்கும் வகையில், தமக்குரிய இடங்களை ஒழுங்கு செய்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குமாரை சந்தித்தது, கன்சுலுக்கு பெரிய ஆறுதலாக இருந்தது. காலையில் இருந்து அவன் மொழி புரியாத புதிய இடத்தில் சங்கடப்பட்டுக் கொண்டிருந்தான். இந்நிலையில், குமாரின் தாய், தந்தையருடன் தன்னைப் பற்றி சொல்லி, தான் வீடு திரும்புவதற்கு அவர்களின் உதவியைப் பெற முடியும் என்று அவன் நம்பினான். ஆனால், இப்போதுள்ள சூழலில், இன்று இரவு இதுபற்றி அவர்களுடன் கதைக்காமல், விடிந்ததும் கதைப்பதுதான் நல்லது என்று அவன் முடிவு செய்தான்.

தமது படுக்கைகளில் படுத்தவாறு கன்சுலும், காமினியும், குமாரும் மெல்லக் கதைத்துக் கொண்டார்கள். கன்சுல் சொன்னதை குமார் சிங்களத்தில் காமினியிடம் கூறினான். அதேபோன்று காமினி சிங்களத்தில் கூறியதை, அவன் கன்சுலிடம் தமிழில் கூறினான். இவ்வாறு சிறிது நேரம் கதைத்த பின்னர், தம்மையறியாமலே ஒவ்வொருவராக அவர்கள் உறங்கிப் போனார்கள். புது இடமாக இருந்தும், உடல் உபாதையின் காரணமாக கன்சுலும் நன்கு உறங்கினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# -13-

# கன்சுலின் தங்கை

கன்சுலின் வீடு சோகத்தில் மூழ்கியிருந்தது. அவர்களின் வீட்டில் சமைக்கவில்லை. கன்சுலின் உறவினர்களும் நண்பர்களும் அந்தக் குடும்பத்தினருக்கான உணவைக் கொண்டு வந்து கொடுத்தார்கள். எனினும் சாப்பிடும் மனநிலையில் கன்சுலின் உம்மாவும் வாப்பாவும் இருக்கவில்லை.

ஒருநாள் கழிந்து விட்ட போதிலும், கன்சுல் பற்றிய எந்தத் தகவலும் கிடைக்காததால் அவனுடைய குடும்பத்தினர் மத்தியில் அச்ச உணர்வுகள் தோன்றத் தொடங்கின. காலையில் அவனுடைய 'கிரிக்கட்' மட்டை கிடைத்ததால் அவர்களின் அச்சம் மேலும் கூடியது.

'கிரிக்கட்' மட்டை கிடைத்த தகவலைச் சொன்னவுடன் பொலீஸ் நிலைய பொறுப்பதிகாரி 'ஜீப்'பில் அவர்களின் வீட்டிற்கு வந்து விட்டார். அந்த மட்டையைக் கண்டெடுத்த வரையும் கன்சுலின் தந்தையையும் ஏற்றிக் கொண்டு அவர், மட்டை கிடந்த இடத்திற்கு சென்றார்.

அந்த இடம் பிரதான வீதியில் அமைந்திருந்தது. வீதியின் இடது பக்கத்தில் மட்டை கிடந்ததால், வாகனத்தில் சென்றவர்கள் அந்த மட்டையை எறிந்திருக்க வேண்டும் என்று அவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிவு செய்தார். அப்படியாயின் கன்சுலின் 'பேக்'கிற்கு என்ன நடந்தது? என்ற கேள்வி அவருள் எழுந்தது. அவர் அந்த இடத்தை மேலும் சுற்றிப் பார்த்தார். 'பேக்' எதுவும் தென்படவில்லை. 'ஜீப்'பில் ஏறி, அந்த வாகனம் சென்றிருக்கக் கூடிய பக்கமாக, மெல்ல மெல்ல சிறிது தூரம் சென்றார். அப்போதும் 'பேக்' எதுவும் தென்படவில்லை.

பின்னர் அவர் கன்சுலின் வீட்டிற்குத் திரும்பி வந்து, அவர்களை இறக்கி விட்டார். அவர் கன்சுலின் 'கிரிக்கட்' மட்டையை தன்னுடன் எடுத்துக் கொண்டார். போகும்போது அவர் கன்சுலின் தந்தையின் தோளில் தட்டிவிட்டு,

"பயப்பிட வாணாம். நாங்க எப்படி சரி உங்க மகன கண்டு பிடிக்கிற"

என்று சொல்லி விட்டுச் சென்றார்.

இதற்கிடையில் கன்சுல் காணாமல் போன விடயம் அவனுடைய புகைப்படத்துடன் சமூக வலைத்தளங்களில் பரவி விட்டது. கன்சுலின் வாப்பாவிற்கு தெரியாமல், பாடசாலையில் இருந்த கன்சுலின் புகைப்படத்தையும், அவனுடைய நண்பர்க ளின் பிறந்த நாள் நிகழ்வுகளின்போது எடுக்கப்பட்ட புகைப் படங்களில் இருந்த அவனுடைய உருவத்தையும் பிரதி எடுத்து சமூக வலைத்தளங்களில் சிலர் பதிவிட்டு விட்டார்கள்.

ஒரு வயது நிறைவடைந்த கன்சுலின் தங்கைக்கு தனது வீட்டின் நிலைமை எதுவும் விளங்கவில்லை. ஆனால் துன்பகரமான ஏதோ நிகழ்ந்திருக்கின்றது என்பது மட்டும் அவளுக்குப் புரிந்தது. தன்னுடைய உம்மா அழுவதும், உம்மம்மா சோகத்துடன் இருப்பதும் அவளை சங்கடத்திற்குள் ளாக்கின. அவளை வைத்துக் கொண்டு உம்மா அழும்போது அவளும் அழத் தொடங்கி விடுவாள். அதனால் அவளுடைய உம்மா, அவளை அவளுடைய சிறிய கதிரையில் இடைக்கிடை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உட்கார வைத்து தொலைக்காட்சிப் பெட்டியை இயக்கி விடுவார். அவளும் தொலைக்காட்சியில் வருகின்ற நிகழ்ச்சிகளை ஆர்வத்துடனும் கைகளைத் தட்டியவாறும் பார்த்துக் கொண்டிருந்தாள்.

கன்சுல் காணாமல்போன நாளுக்கு அடுத்த நாள் மாலை நேரத்திலும், கன்சுலின் உம்மா தனது மகளை கதிரையில் அமர வைத்து தொலைக்காட்சிப் பெட்டியை இயக்கி விட்டார். பின்னர் அவர் அடுத்த அறைக்குள் சென்று விட்டார். கன்சுலின் வாப்பா, தனது மகளுக்கு சற்றுத் தொலைவில் அமர்ந்திருந்தார். அவர் தொலைக்காட்சி பார்க்கின்ற மனநிலையில் இருக்க வில்லை. என்ன செய்வது, எங்கே போவது என்று தெரியாது அவர் குழம்பியிருந்தார்.

தொலைக்காட்சியைப் பார்த்துக் கொண்டிருந்த அவரின் மகள் சட்டென்று,

"நானா, நானா.."

என்று தனது கைகளைத் தட்டிச் சொன்னாள். கன்சுலின் வாப்பா தனது மகள் கூறுவதைக் கேட்டார். ஆனால் அது குறித்து அவர் அக்கறை கொள்ளவில்லை. சற்று நேரத்தில் அவருடைய மகள் மீண்டும்,

"நானா.. நானா...."

என்று கைகளைத் தட்டி, தட்டிக் கூறினாள். அவர் எந்த உணர்வுமின்றி முகட்டைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

"இதுவரை நீங்கள், நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் ஏற்பட்டுள்ள வெள்ளம் மற்றும் மண்சரிவு போன்ற இயற்கை அனர்த்தங்கள் பற்றிய எமது விசேட அறிக்கையைப் பார்த்தீர்கள். இந்நிகழ்ச்சியை எமது இரவு செய்தி அறிக்கையின் பின்னர் நீங்கள் மீண்டும் பார்க்கலாம்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொலைக்காட்சி அறிவிப்பாளரின் குரல் அவரின் காதுகளில் பட்டும் படாமலும் சென்றது. அவருடைய மகள் தொடர்ந்தும் தொலைக்காட்சி பார்த்துக் கொண்டிருந்தாள்.

சிறிது நேரத்தில், அவளுடைய உம்மா அவளுக்கு உணவூட்டுவதற்கு வந்தார். அவள் தொலைக்காட்சியைக் காட்டி,

"ம்மா.. நானா.. நானா.."

என்று துள்ளியவாறு கூறினாள். உம்மா தொலைக்காட்சி பெட்டியைப் பார்த்தார். அதில் ஒரு விளம்பர நிகழ்ச்சி போய்க் கொண்டிருந்தது. அவர் தனது மகளைத் தூக்கி இடுப்பில் வைத்தபோது, அவள் மீண்டும் தொலைக்காட்சியைக் காட்டி,

"நானா.. நானா..."

என்று சத்தமாகக் கூறினாள். மகனைக் காணாத துயரத்தில் உணர்வுகள் மரத்துப் போயிருந்த உம்மாவுக்கு, தனது மகள் திரும்பத் திரும்ப 'நானா..நானா' என்று கூறுவது எரிச்சலூட்டுவ தாக இருந்தது.

"சும்மா சத்தம் போடாமல் இரு"

என்று அவர் மகளை அதட்டினார். உம்மாவின் அதட்டல் அந்தக் குழந்தையைக் கடுமையாகப் பாதித்து விட்டது. அவள் அழத் தொடங்கி விட்டாள். அவளுடைய அழுகை உம்மாவிற்கு மேலும் எரிச்சலூட்டுவதாக இருந்தது.

"சும்மா, கத்தாம இரு"

என்று அதட்டி விட்டு, அவளுடைய தோளில் ஒரு அடியும் கொடுத்தாள். உம்மா அடித்ததும் குழந்தையின் அழுகை மேலும் அதிகரித்தது. தனது மனைவியின் அதட்டலையும் குழந்தையின் அழுகையையும் கேட்டதும், கன்சுலின் வாப்பா எழுந்து வந்து மகளை, மனைவியின் கையில் இருந்து வாங்கினார். குழந்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழுது கொண்டு, மீண்டும் தொலைக்காட்சிப் பெட்டியைக் காட்டி,

"பாப்பா.. நானா.. நானா"

என்று கூறினாள்.

அவர் தொலைக்காட்சியைப் பார்த்தபோது, அதில் இன்னு மொரு விளம்பரம் காட்டப்பட்டுக் கொண்டிருந்தது. ஆயினும், அக்குழந்தை தொலைக்காட்சிப் பெட்டியைக் காட்டி

"நானா.. நானா.."

என்று கூறிக் கொண்டே இருந்தாள்.

குழந்தையின் அழுகை நின்றதும், உம்மா வந்து அவளை தூக்கிக் கொண்டு போனார்.

கன்சுலின் வாப்பா கதிரையில் இருந்தவாறு, தனது மகள் மீண்டும் மீண்டும் கூறியதை யோசித்துப் பார்த்தார். அவருக்கு எதுவும் புரியவில்லை. தனது மகள் அடிவாங்கிய பின்னரும் அவ்வாறு கூறியதற்கு ஏதாவது காரணம் இருக்குமா என்று யோசித்தார். சட்டென்று அவருக்கு விசேட அறிக்கை பற்றி தொலைக்காட்சி நிருபர் கூறியது நினைவிற்கு வந்தது. அந்த நிகழ்ச்சியைப் பார்த்துக் கொண்டிருந்த போதுதான் தனது மகள், 'நானா.. நானா' என்று கூறினாள் என்பது அவருக்கு நினைவிற்கு வந்தது. இரவு நேர செய்திக்குப் பின்னர், அந்த விசேட அறிக்கை மீண்டும் ஒளிபரப்பப்படும் என்று அறிவிப்பாளர் சொன்னதும் அவருக்கு நினைவிற்கு வந்தது. எனவே அவர் செய்தியையும், விசேட அறிக்கையையும் பார்ப்பது என்று முடிவு செய்தார்.

இரவு நேர செய்தியில், நாட்டில் பல இடங்களில் பலத்த மழை பெய்து வருவதன் காரணமாக குளங்களும், நீரேந்து பகுதி களும் உடைப்பெடுத்து பல இடங்களில் வெள்ளம் ஏற்பட்டிருப் பதாக அறிவிக்கப்பட்டது. அத்துடன் பல இடங்களில் மண்சரிவு ஏற்படும் அபாயம் இருப்பதாகவும் எச்சரிக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தியின் பின்னர், நாட்டின் தற்போதைய அனர்த்த நிலைமை பற்றிய விசேட அறிக்கை என்ற தலைப்பில் வெவ்வேறு இடங்களில் எடுக்கப்பட்ட காணொளிகள் காட்டப்பட்டன. கன்சுலின் வாப்பா அந்த நிகழ்ச்சியை மிக கவனமாக அவதானித்தார். அப்போது ஒரு காணொளியில், கன்சுல், இன்னொரு பையனுடனும், வேறு சிலருடனும் ஒரு கட்டிடத்திற்குள் நிற்பது காட்டப்பட்டது.

கன்சுலைக் கண்டதும் வாப்பாவின் சுவாசம் ஒரு கணம் நின்று விட்டது. பின்னர் தன்னை மறந்தவராக,

"இங்க வாங்க... இங்க வாங்க. நம்ம கன்சுல்"

என்று சத்தமிட்டார். அவருடைய சத்தத்தைக் கேட்ட கன்சுலின் உம்மா,

"என்ன... என்ன?"

என்று பரபரப்புடன் கேட்டவாறு அவரிடம் வந்தார்.

"ரீவியில நம்ம கன்சுலைக் காட்டினாங்க. அவன் எங்கேயோ வெள்ளத்தில் அகப்பட்டவர்களுடன் நிற்கிறான்"

என்று அவர் கூறியதைக் கேட்டு,

"உண்மையாகவா... உண்மையாகவா?!"

என்று கன்சுலின் உம்மா நம்ப முடியாமல் கேட்டார். அவருடைய குரலில் மகிழ்ச்சி பொங்கி வழிந்தது.

"உண்மையாகத்தான்"

என்று கன்சுலின் வாப்பா கூறிவிட்டு, உடனடியாக காவல் நிலைய பொறுப்பதிகாரிக்கு 'போன்' பண்ணி, தான் தொலைக் காட்சியில் பார்த்ததைக் கூறினார். அவர் கன்சுலின் வாப்பாவை உடனடியாக காவல் நிலையத்திற்கு வரும்படி சொன்னார்.

அவர் தனது 'மோட்டார் சைக்கிளில்' ஏறும்போது, கன்சுலின் உம்மா இறைவனிடம் பிரார்த்தனை செய்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"யா அல்லாஹ்! என்ட பிள்ளையை எங்களிடம் எந்த ஆபத்தும் இல்லாமல் சேர்த்து விடு யா அல்லாஹ்! நான் ஒரு ஆடு அறுத்து ஏழைகளுக்கு கொடுப்பேன்"

கன்சுலின் வாப்பா, காவல் நிலையத்திற்கு சென்றபோது, பொறுப்பதிகாரி அவரை எதிர்பார்த்துக் காத்திருந்தார். அவரிடம் நடந்த விடயங்களை தெளிவாக கூறி, அந்த நிகழ்ச்சி இடம்பெற்ற தொலைக்காட்சி நிலையத்தையும் குறிப்பிட்டார். அவற்றைக் கேட்ட பின்னர், பொறுப்பதிகாரி அந்நிலையத்துடன் தொடர்பு கொண்டு, அந்நிகழ்ச்சியில் இடம்பெற்ற காணொளி காட்சிகள் எந்த இடத்தில் ஒளிப்பதிவு செய்யப்பட்டன என்ற விடயத்தை தெரியப்படுத்துமாறு கேட்டுக் கொண்டார்.

பத்து நிமிடங்கள் கழிந்த பின்னர், அத்தொலைக்காட்சி நிலையத்தில் இருந்து தொலைபேசி அழைப்பு வந்தது. அங்கிருந்து பேசியவர், அந்த காட்சி ஒளிப்பதிவு செய்யப்பட்ட இடத்தைக் குறிப்பிட்டு, அது எத்தனை மணிக்கு ஒளிப்பதிவு செய்யப்பட்டது என்ற விடயத்தையும் தெரிவித்தார். அவருக்கு பொறுப்பதிகாரி நன்றி தெரிவித்தார்.

பின்னர் அவர், தொலைக்காட்சியில் ஒளிபரப்புச் செய்யப்பட்ட இடத்திற்குப் பொறுப்பான காவல் நிலையத்து டன் தொடர்பு கொண்டார். அங்கு பேசியவரிடம், கன்சுல் காணாமல் போனது, தொலைக்காட்சி நிகழ்ச்சியில் அவன் காட்டப்பட்டது போன்ற விடயங்களைக் குறிப்பிட்டு, அந்த இடத்திற்கு சென்று இது பற்றி விசாரிக்க முடியுமா எனக் கேட்டார்.

எனினும், அவருடன் பேசியவர், தங்களுடைய காவல் நிலையத்தின் பொறுப்பதிகாரி வேறொரு கடமையாக வெளியே சென்றிருப்பதாலும், கடுமையான மழை பெய்து கொண்டிருப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதாலும், இப்போது இரவு பத்து மணியை நெருங்குவதாலும், இப்போதைக்கு அங்கு செல்வது சாத்தியமாகாது என்று கூறினார். நாளைக் காலையில், அந்த இடத்தை தாங்கள் சென்று பார்க்க முடியும் என்றும், முடியுமாயின் கன்சுலின் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் தங்களுடன் இணைந்து கொள்வது நல்லது என்றும் அவர் கூறினார்.

இந்த விடயங்களை கன்சுலின் தந்தையிடம் கூறிய பொறுப்பதிகாரி,

"நீங்க இப்பவே புறப்பட்டு இந்த 'பொலீஸ் ஸ்டேசனுக்குப்' போங்க. நான் அவங்களுக்கு 'மெசேஜ்' சொல்றது"

என்று சொன்னார்.

கன்சுலின் வாப்பா அவருக்கு நன்றி சொல்லி விட்டு, தன்னுடைய வீட்டிற்குச் சென்றார். வீட்டில் ஒரு பரபரப்பான சூழ்நிலை நிலவியது. எல்லோர் முகங்களிலும், பெருமகிழ்ச்சி நிறைந்திருந்தது.

"அல்லா! எல்லாவற்றையும் நல்லபடியாக முடித்து விடு!"

"யா அல்லாஹ்! எங்க பிள்ளையைக் காப்பாத்து"

என்பது போன்ற வார்த்தைகள் எல்லோரது வாய்களில் இருந்தும் வெளிப்பட்டுக் கொண்டிருந்தன.

கன்சுலின் வாப்பா அங்கிருந்தவர்களிடம் பொறுப்பதிகாரி கூறிய ஆலோசனையைச் சொல்லி விட்டு, உடனடியாகவே தன்னுடைய 'வேனில்' புறப்படுவதற்கு தயாரானார். அவருடன் செல்வதற்கு கன்சுலின் உம்மாவும் விரும்பிய போதிலும், அவர் தடுத்து விட்டார்.

"அங்கு சரியான மழை பெய்கிறதாம். குழந்தைப் பிள்ளை யையும் கூட்டிக் கொண்டு போவது சரியில்ல. நீங்க இங்கேயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருங்க. இன்ஷா அல்லாஹ்! இறைவன் நாடினால், எல்லாம் நாளைக்கு சரி வந்து விடும்"

என்று கூறி விட்டு தன் நண்பர்கள் இருவருடனும், கன்சுலின் மாமாவுடனும் புறப்பட்டார். அவர்கள் அந்தப் பொலீஸ் நிலையத்தை அடையும்போது அதிகாலை ஐந்து மணியாகி விட்டது. அவர்கள் வருவது பற்றி, பொறுப்பதிகாரி ஏற்கனவே தகவல் சொல்லியிருந்ததால், கடமையில் இருந்த 'பொலீசார்' அவர்களை உள்ளே இருக்கும்படி கூறினார்கள்.

அவர்கள் போய்ச் சேரும்போது மழை விட்டிருந்தது. கன்சுலின் வாப்பாவின் இதயம் வேகமாக துடித்துக் கொண்டிருந்தது. உடனடியாக அந்த பாடசாலைக்குச் சென்று கன்சுலைப் பார்க்க வேண்டும் என்று அவருடைய மனம் துடித்தது. ஆனால் அங்கிருந்த ஒரு 'பொலீஸ்' உத்தியோகத்தர்,

"இரவு நேரம் சென்ற பின்னர்தான் 'இன்ஸ்பெக்டர் சேர்' திரும்பி வந்தார். அவரிடம் உங்கள் மகனைப் பற்றிய விடயத்தையும், நீங்கள் வருவதைப் பற்றியும் கூறினோம். அவர் காலையில் எட்டு மணிக்கு போவதாகக் கூறும்படி சொன்னார்"

என்று சிங்களத்தில் கூறினார். பொலிசார் இல்லாமல் அந்த இடத்திற்கு செல்வது பொருத்தமற்றது என்பதால், அந்நிலைய பொறுப்பதிகாரி வரும்வரை அவர்கள் காத்திருந்தார்கள்.

சரியாக காலை எட்டு மணிக்கு அவர் வந்தார். அவர் இவர்களைப் பார்த்து,

"குட்மோர்னிங்"

என்று சொல்லி விட்டு, அங்கிருந்த சில 'பொலீஸ்' உத்தியோகத்தர்களுக்கு சில வேலைகளை ஒப்படைத்தார். பின்னர் அவர் கன்சுலின் வாப்பா மற்றும் அவருடன் சென்றவர்களிடம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உங்கள் மகன் அங்கு யாருடன், எந்த நிலையில் இருக்கிறான் என்பது தெரியவில்லை. ஒருவேளை அவனைக் கடத்தியவர்களும் அங்கு இருக்கலாம். எங்களைக் கண்டால் அவர்கள் தப்பிச் செல்ல முயற்சிக்கலாம். அதனால், நாங்கள் உங்கள் மகனைத் தேடிச் செல்பவர்களாக இல்லாமல் வெள்ள நிலைமையை அவதானிக்க செல்பவர்களாகவே அங்கு போவோம். அங்கு சென்றவுடன் நீங்கள் உங்கள் வாகனத்திலேயே இருந்து கொள்ளுங்கள். நாங்கள் உள்ளே சென்று விசாரிக்கிறோம். அதன் பின்னர் நீங்கள் வரலாம்."

என்று சிங்களத்தில் கூறிவிட்டு,

"உங்கள் மகனின் 'போட்டோ' இருந்தால் கொடுங்கள்"

என்று கேட்டார். கன்சுலின் வாப்பா, அவனுடைய இரண்டு புகைப்படங்களை அவரிடம் கொடுத்தார்.

அதன் பின்னர் அவர்கள் கன்சுல் அகதியாக தங்கியிருந்த அந்தப் பாடசாலையை நோக்கி புறப்பட்டார்கள். அவர்கள் அங்கு சென்றடையும்போது, காலை 8.30 மணியாகி விட்டது. கிராம சேவையாளரும் அவர்களின் உதவியாளர்களும் அங்கு தங்கியிருந்தவர்களுக்கு காலை உணவு வழங்கிக் கொண்டிருந்தார்கள்.

பொறுப்பதிகாரி சொன்னதுபோல், கன்சுலின் வாப்பாவும் ஏனையோரும் 'வேனி'லேயே இருந்தார்கள். பொறுப்பதிகாரியும் அவருடன் சென்ற இரண்டு 'பொலீசாரும்' அந்தப் பாடசாலைக் குள் சென்றார்கள்.

பொறுப்பதிகாரி கிராம சேவையாளரை அழைத்து, "இந்த பாடசாலைக்குள் இந்த 'ஏரியாவை'ச் சேராத யாராவது தங்கியிருக்கிறார்களா?" என்று கேட்டார். அதற்கு அவர் சற்று யோசித்து விட்டு, "ஓம், ஒரு பையன் இருக்கிறான். அவன்.. அவன்.... அவர் கொஞ்சம் யோசித்தார். பின்னர், "அவன் சில்வா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடும்பத்தினருடன் இருக்கிறான். ஆனால் அவன் யாரென்று நான் கேட்கவில்லை" என்று கூறினார். அதைக் கேட்ட பொறுப்பதிகாரி, "சில்வாவைக் கொஞ்சம் கூப்பிடுவீங்களா?" என்று கேட்டார். உடனே கிராம சேவையாளர் எழுந்து, காமினியின் குடும்பத்தினர் தங்கியிருந்த கட்டிடத்திற்குச் சென்றார். சிறிது நேரத்தில் அவர் காமினியையும், அவன் தாயாரையும் அழைத்துக் கொண்டு வந்தார்.

"சேர், சில்வா வீட்டைப் பார்க்க போயிருக்கிறார். இது அவருடைய மனைவி. இது மகன்" என்று அவர்களை பொறுப்பதிகாரிக்கு அறிமுகப்படுத்தினார்,காமினியின் தாய் குழப்பத்துடன் இருந்தார். கிராம சேவையாளர் தன்னுடன் வரும்படி அழைத்தபோது அவருக்கு எதுவும் புரியவில்லை. அதனால் அவர் காமினியையும் கூட்டிக் கொண்டு அவருடன் சென்றார். இப்போது 'பொலீசார்' அங்கு இருப்பதைப் பார்த்ததும் அவர் அச்சமடைந்து விட்டார்.

பொறுப்பதிகாரி காமினியின் தாயைப் பார்த்து புன்னகைத்து விட்டு,"நோனா, பயப்பட வேண்டாம் உங்களுடன் வேறு யாராவது தங்கியிருக்கிறார்களா?"என்று சிங்களத்தில் கேட்டார். உடனே காமினியின் தாய்,

"ஓம், ஒரு பையன் இருக்கிறான். அவனுடைய பெயர்."

என்று சொல்லி வரும்போது, அவருக்கு கன்சுலின் பெயர் நினைவுக்கு வரவில்லை. உடனே அருகில் இருந்த காமினி, "கன்சுல்"என்று கூறினான். பொறுப்பதிகாரி, "அவன் யார்? எப்படி அவன் உங்களிடம் வந்தான்?"என்று கேட்டார். காமினியின் தாய் நேற்று காலையில் தனது கணவர் அவனைக் கண்டது முதல், நடந்த விடயங்கள் அனைத்தையும் கூறினார். அவற்றை கவனமாகக் கேட்ட பொறுப்பதிகாரி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சரி, இப்போது அவன் எங்கே இருக்கிறான்?"எனக் கேட்டார். "இங்குதான் இருக்கிறான்."என்று சொல்லி விட்டு, காமினியைப் பார்த்து,"மகன், அந்தப் பையனை இங்கே கூட்டி வா"என்று காமினியை அனுப்பினார். சிறிது நேரத்தில் காமினி மட்டும் அங்கு வந்தான். "அம்மா, கன்சுலைக் காணவில்லை"அவன் கூறியதும், அவனுடைய தாய் பதற்றத்துடன்,"என்ன காணேலியா?" என்று கேட்டார். இவர்களை அவதானித்த பொறுப்பதிகாரி, "சரி, பதற்றப்பட வேண்டாம். அவன் இங்குதான் எங்காவது இருப்பான். போய்ப் பார்ப்போம்"என்று கூறி விட்டு எழுந்தார். அவருடன் கிராம சேவையாளர் உட்பட அனைவரும் எழுந்து சென்றனர். அவர்கள் மற்றவர்களுக்கு சந்தேகம் ஏற்படாதவண்ணம், ஒவ்வொரு இடமாக கன்சுலைத் தேடினர். ஆனால் கன்சுல் எங்குமே இருக்கவில்லை.

*ஹாய், பிள்ளைகள்!*

*உங்கள் ஊகத்தை சோதிப்பதற்கான இறுதி வாய்ப்பு.*

*கன்சுல் அந்த அகதி முகாமில் இல்லை என்பதை வாசித்திருப்பீர்கள்.*

*அவ்வாறாயின் அவனுக்கு என்ன நடந்தது?*

*உங்கள் அறிவையும் சிந்தனையையும் கிளறி விடுங்கள்!*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# -14-

# கன்சுலின் சாதுரியம்

அடுத்த நாள் அதிகாலையிலேயே குழந்தைகளின் அழுகைச் சத்தங்களும், ஆட்கள் உரத்துக் கதைத்த சத்தங்களும் அந்த அகதி முகாமில் கேட்கத் தொடங்கி விட்டன. அந்த சத்தத்தில் கன்சுல் எழும்பி விட்டான். விடிந்து விட்டது. வெளியே மழை பெய்யும் சத்தம் கேட்கவில்லை.

"வெஸ்ஸ நவத்தெலா"

("மழை நின்றிட்டு")

"ஒவ், நவத்தெலா"

("ஓம், நின்றிட்டு")

பெரியவர்களின் குரல்களில் மகிழ்ச்சியும் நிம்மதியும் தெரிந்தன. காமினியும், குமாரும் எழுந்து விட்டார்கள். காமினியின் அப்பா தன்னுடைய மண்வெட்டியை எடுத்துக் கொண்டு தன்னுடைய வீட்டையும், தோட்டத்தையும் பார்க்க புறப்பட்டார். அவர் காமினியின் தாயிடம்,

"ஒயா மெதனிங் இந்த கண்ட. மங் கிஹிங் பளளா என்னங். மொனஹரி துன்னுத் கண்ட"

("நீங்க இங்க இருந்து கொள்ளுங்க. நான் போய் பார்த்திட்டு வாறேன். எதாவது தந்தால் வாங்குங்க")



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதேபோன்று குமாரின் அப்பாவும்,

"நான் போய் நமது வீட்டைப் பார்த்து விட்டு வாறேன். நீங்க இங்கே இருந்து கொள்ளுங்க. சாப்பாடு தந்தால் வாங்குங்க"என்று தனது குடும்பத்தினரிடம் சொல்லி விட்டுப் புறப்பட்டார்.

அங்கிருந்த ஆண்களில் பெரும்பாலானோர் இவ்வாறு தமது குடும்பத்தினரிடம் கூறிவிட்டு, தமது வீடுகளைப் பார்க்க புறப்பட்டனர்.

கன்சுல் எழுந்து வெளியே வந்தான். மழை முற்றாக நின்று விட்டது. கட்டிடத்திற்கு வெளியே ஈரமாகவும், சில இடங்களில் சேறாகவும் இருந்தது. அங்கு நின்ற மரங்களில் இருந்த இலைகளில் நீர்த்துளிகள் தொங்கிக் கொண்டிருந்தன.

இன்று எப்படியாவது தன்னுடைய குடும்பத்தினருடன் தொடர்பு கொள்ள வேண்டும் என்று கன்சுல் முடிவு செய்தான். அந்த முகாமில் இருந்தவர்களிடம் 'ஹேண்ட் போன்' இருப்பதாகத் தெரியவில்லை. கிராம சேவையாளர், 'ஹேண்ட் போனில்' கதைத்ததை அவன் இரவு அவதானித்திருந்தான். அவர் வந்ததும், குமாரிடம் சொல்லி, அவருடைய 'ஹேண்ட் போனில்' கதைக்க வேண்டும் என்று நினைத்தான். அவன் மெல்ல, மெல்ல அந்தக் கட்டிடத்தைச் சுற்றி வந்தான். எல்லா இடங்களிலும் ஆட்கள் காணப்பட்டார்கள். ஆண்கள், பெண்கள், சிறுவர்கள், குழந்தைகள் என பலதரப்பட்டோர் வெளியே நின்றார்கள். அவர்கள் உரத்த குரலில் கதைத்துக் கொண்டிருந்தார்கள். சிலர் அங்கும் இங்கும் போய் வந்து கொண்டிருந்தார்கள்.

மேகங்கள் படர்ந்திருந்த வானத்தில் இருந்து சோம்பலுடன் வெளிப்பட்ட சூரியனின் மங்கலான கதிர்கள் கன்சுலின் உடம்பைத் தொட்டன. அவற்றின் கதகதப்பு கன்சுலுக்கு இதமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தது. அதனால் அவன் சூரியன் நன்கு படக் கூடிய விதமாக, மரங்கள் குறைவாக இருந்த வீதியின் பக்கமாக சென்றான்.

சிறிது நேரம் அங்கே நின்று வெயில் காய்ந்து கொண்டிருந்த போது, தூரத்தே வீதியில் ஒரு கறுப்பு நிற 'வேன்' வருவதை அவன் கண்டான். சட்டென்று அவனுடைய உடல் அச்சத்தில் சிலிர்த்தது.

அந்த 'வேன்' அவனைக் கடத்தி வந்த 'வேனை'ப் போன்றே இருந்தது. அவன் பின்னால் நகர்ந்து, ஒரு மரத்தின் பின்னே மறைந்து கொண்டான்.

அந்த 'வேன்' அவனைக் கடந்து சென்று, அந்தப் பாடசாலைக்கு அருகே நின்றது. அதன் முன்புற ஜன்னல் திறக்கப்பட்டு, ஒருவர் வெளியே எட்டிப் பார்த்தார். கன்சுலின் உடல் நடுங்கி விட்டது. நாடியில் இருந்த சிறிய தாடியும் கன்னத்தில் இருந்த மச்சமும் அவனுக்குத் தெரிந்தன. அதே ஆள், அதே 'வேன்'!

கன்சுல் கடுமையாக அச்சமடைந்தான்.

'அவர்கள் ஏன் இங்கு வந்திருக்கிறார்கள்? என்னைத் தேடியா?'

கன்சுலின கால்கள் நடுங்கின. அவன் பாடசாலைக்குள் ஓடிவிட நினைத்தான். ஆனால் அங்கிருந்து பாடசாலைக்குள் ஓடினால், அவர்கள் அவனைக் கண்டு விடுவார்கள். அதனால் அவன் அந்த மரத்தின் பின்னால் அசையாமல் நின்றான். பின்னர் அங்கிருந்து வீதியின் ஓரமாக இருந்த இன்னொரு மரத்திற்கு அவன் சென்றான். அங்கிருந்தவாறு அவன் அந்த 'வேனி'ன் இலக்கத் தகட்டில் இருந்த இலக்கங்களை மனனம் செய்தான்.

பின்னர், திரும்பிப் பார்க்காமல் அந்த வீதியோரமாக அவன் நடக்கத் தொடங்கினான். முதலில் மெதுவாக நடந்தவன், பின்னர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேகமாக நடந்தான். அவன் இப்போது அந்த வீதியின் வளைவிற்கு வந்து விட்டான். அந்த வளைவின் வழியே சென்ற போது, அருகருகே கடைகள் இருப்பது அவனுக்குத் தெரிந்தது. வீதியின் குழிகளில் மழைநீர் தேங்கி நின்றது. அவன் அந்த வீதிவழியே நடந்தான். தனக்கு உதவக் கூடிய யாரையாவது காண முடியுமா என்று அவன் அங்கும் இங்கும் பார்த்துக் கொண்டு சென்றான்.

உண்மையில் அவர்கள் கன்சுலைக் கடத்தியவர்கள்தான். ஆனால் அவர்கள் அவனைத் தேடி வரவில்லை. நேற்று முன்தினம் இரவு அவர்கள் 'ஹோட்டலி'ல் சாப்பிட்டு விட்டு வந்தபோது, 'வேனின்' பின்கதவு திறந்திருப்பதைக் கண்டார்கள். அதைப் பார்த்ததும் அவர்களுக்குப் பகீர் என்றது. உடனே அவர்களில் ஒருவன் உள்ளே சென்று பார்த்தான்.

"லமயா நே. பையனைக் கணேல."

என்று அவன் சிங்களத்திலும் தமிழிலும் சத்தமிட்டான்.

"மொன? லமயா நேத?"

("என்ன? பையன் இல்லையா?")

குறுந்தாடிக்காரன் ஆத்திரத்துடன் கேட்டான்.

"சத்தம் போட வேணாம். அது நமக்குத்தான் ஆபத்து"

என்று இன்னொருவன் கூற, எல்லோரும் அமைதியாகி விட்டார்கள். அவர்கள் வீதியின் இருபுறமும் தொலைதூரம் வரை பார்த்தார்கள். அவ்வப்போது வந்த வாகனங்களை தவிர, மனிதர்கள் யாரும் வீதியில் செல்லவில்லை.

பின்னர் அவர்களில் ஒருவன் தனது 'ஹேன்ட் போனின்' 'டோர்ச்சை' இயக்கி வேலிக்குப் பின்னால் இருந்த தோட்டத்தில் அடித்துப் பார்த்தான். யாரையும் காணவில்லை. வீதியிலோ அல்லது அந்தத் தோட்டத்திலோ தாங்கள் தேடினால், அது அங்குள்ள வர்களுக்கு சந்தேகத்தை ஏற்படுத்தி விடும் என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைத்தார்கள். அதனால் அவ்வாறு செய்வதைக் கைவிட்டு, அவர்கள் அங்கிருந்து புறப்பட்டார்கள்.

கன்சுல் தப்பி விட்ட பதற்றத்தில், அவனை படுக்கப் போட்டிருந்த 'சீட்டி'ன் கீழ் வைத்த அவனுடைய 'ஸ்கூல் பேக்'கை அவர்கள் மறந்து விட்டார்கள். கணிசமான தூரம் சென்றதும், அவர்கள் 'வேனி'ன் இலக்கத் தகடுகளை மாற்றி விட்டார்கள். தாங்கள் கடத்திய பையன் தப்பி விட்டதால், இன்னுமொரு பையனை எப்படியாவது கடத்த வேண்டும் என்று அவர்கள் தீர்மானித்தார்கள். அதனால் அவர்கள் ஒரு விடுதியில் அன்று தங்கினார்கள்.

அன்று இரவு கடுமையான மழை பெய்ததால் பல பகுதிகளில் வெள்ள அபாயம் ஏற்படக் கூடிய நிலைமை இருப்பதாக செய்திகள் மூலம் அவர்கள் அறிந்தார்கள். வெள்ளத்தினால் அகதிகளாக வரக்கூடியவர்களில் யாராவது ஒரு சிறுவனைக் கடத்தலாம் என்று அவர்கள் முடிவு செய்தார்கள். அதனால் நிவாரணம் வழங்க வந்தவர்கள் போன்ற பாவனையில் அவர்கள் அகதி முகாமை நோக்கி சென்றார்கள். அந்த அகதி முகாம், துரதிஷ்டவசமாக கன்சுல் இருந்த பாடசாலையாக இருந்தது.

அந்த பாடசாலையை அவர்கள் அண்மித்தபோது, அங்கு ஆட்கள் நடமாட்டம் அதிகமாக இருந்தது. அதனால் சற்றுநேரம் பொறுத்து உள்ளே சென்று பார்க்கலாம் என்று அவர்கள் முடிவு செய்து வாகனத்திலேயே அமர்ந்து கொண்டார்கள்.

கன்சுல் அச்சத்துடன் பின்னால் திரும்பித் திரும்பி பார்த்தவாறு நடந்தான். சிறிது தூரம் சென்றதும், தலையில் தொப்பி அணிந்து, தாடி வைத்திருந்த ஒருவர் எதிரே வருவதை அவன் கண்டான். அவரைக் கண்டதும் அவனுக்கு நிம்மதியாக இருந்தது. அவர் அவனுக்கு அருகே வந்ததும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அஸ்ஸலாமு அலைக்கும்" ("உங்கள் மீது சாந்தி உண்டாகட்டும்")

என்று கன்சுல் அவரிடம் கூறினார். முன்பின் தெரியாத ஒரு சிறுவன் தனக்கு 'ஸலாம்' கூறியதைக் கேட்டு முதலில் அவர் குழம்பி விட்டார். பின்னர் அவர்,

"வ அலைக்கு முஸ்ஸலாம்" ("உங்கள் மீதும் சாந்தி உண்டா கட்டும்") என்று அவனுக்கு பதில் 'ஸலாம்' கூறினார்.

"மாமா நான் ஆபத்தில் இருக்கிறேன். எனக்கு உதவி செய்வீங்களா?"என்று அவன் அவரிடம் கேட்டான். அவனுடைய குரல் பயத்தில் நடுங்கியது. அவனுடைய பயமும், கோரிக்கையும் அவரை மேலும் குழப்பத்தில் ஆழ்த்தியது. அவர் சுற்றுமுற்றும் பார்த்தார். சந்தேகத்திற்கு இடமான முறையில் யாரும் தென்படவில்லை. பின்னர், அவர் ஏதோ நினைத்தவராக, கன்சுலின் கையைப் பிடித்துக் கொண்டு அருகில் இருந்த ஒரு தேனீர்க் கடைக்குள் சென்றார்.

அக்கடைக்குள், ஆட்கள் இல்லாமல் தனியாக இருந்த ஒரு மேசைக்கு அவனைக் கூட்டிச் சென்றார். அவனை ஒரு கதிரையில் அமரச் செய்து, அவனுக்கு-அருகே தானும் ஒரு கதிரையில் அமர்ந்து கொண்டார். உணவு பரிமாறுபவனிடம், சிற்றுண்டி களுக்கும் தேனீருக்கும் 'ஓடர்' கொடுத்து விட்டு,

"மகன் நீங்க யாரு. எங்க இருந்து வாறீங்க?"

என்று அன்பாகக் கேட்டார். அவர் பேசிய முறை கன்சுலுக்கு நம்பிக்கையையும், நிம்மதியையும் ஏற்படுத்தியது. அவன் அவரிடம் தனக்கு நடந்த அனைத்தையும் கூறினான்.

அவன் சொல்லிக் கொண்டிருக்கும்போதே அவர் தனது 'போனை' இயக்கி, அதில் முகநூலில் எதையோ தேடினார். அவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேடிய இடத்தில், "சிறுவனைக் காணவில்லை" என்ற தலைப்பில், ஒரு புகைப்படத்துடன் ஒரு செய்தி காணப்பட்டது. அவர் அந்தப் புகைப்படத்தில் இருந்த சிறுவனையும், தனக்கு முன்னால் இருந்து நடந்தவற்றை சொல்லிக் கொண்டிருந்த கன்சுலையும் ஒப்பிட்டுப் பார்த்தார். இருவரும் ஒருவர்தான் என்பது தெரிந்தது.

கன்சுல் சொல்லி முடித்ததும் இறுதியில், தன்னைக் கடத்திய ஆட்கள் இப்போது தான் தங்கியிருந்த பாடசாலைக்கு அருகில் நிற்கின்ற விடயத்தையும் கூறினான். பின்னர் தன்னுடைய வாப்பாவின் 'போன்' 'நம்பரை' அவரிடம் சொல்லி, அதற்கு 'கோல்' எடுத்துத் தரமுடியுமா என்று கேட்டான்.

உடனே அவர் தனது 'போனி'ல் அந்த இலக்கத்திற்கு 'கோல்' பண்ணினார். கன்சுலின் வாப்பா தனது 'போன்' அடித்தபோது, அதன் திரையில் புதிய ஒரு நம்பரைப் பார்த்து, திடுக்கிட்டார். எனினும் தன்னை சமாளித்துக் கொண்டு,

"ஹலோ!" என்று கூறினார். மறுமுனையில் இருந்து,

"அஸ்ஸலாமு அலைக்கும். கன்சுல் உங்க மகனா?"

என்று ஒரு புதிய நபர் அவருடன் பேசினார். அவர் கன்சுலின் பெயரைக் கூறியதைக் கேட்டவுடன் கன்சுலின் வாப்பா ஒரு கணம் பேச்சற்றுப் போனார். பின்னர் பரபரப்புடன் பேசினார். போனில் பேசியவர் கூறிய 'ஸலாத்'துக்குப் பதிலளிக்கவும் அவர் மறந்து போனார்.

"ஓம், கன்சுல் என் மகன்தான். நீங்க யார்? கன்சுல் இப்போது எங்கே இருக்கிறான்?"என்று படபடவென்று கேட்டார். அவர் பேசியதைக் கேட்டவுடன் அந்த 'வேனி'ற்குள் இருந்தவர்களும் பரபரப்பிற்குள்ளா னார்கள்.

"பயப்பட வேணாம். கன்சுல் இப்போது என்னுடன்தான் இருக்கிறான். இதோ, அவனுடன் கதையுங்க"என்று சொல்லி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டு அவர், கன்சுலிடம் போனைக் கொடுத்தார். போனை வாங்கிய கன்சுல்,

"வாப்பா"

என்று அழைத்தான். அவன் குரல் நடுங்கியது.

"கன்சுல், எப்படிப்பா இருக்கிறாய்?"

அவருடைய குரலும் கரகரப்புடன் ஒலித்தது.

"வாப்பா, நான் நல்லா இருக்கிறேன். என்ன வந்து கூட்டிப் போங்க வாப்பா."

என்று சொல்லி விட்டு திடீரென்று ஞாபகம் வந்தவனாய்,

"வாப்பா, என்னைக் கடத்தி வந்த ஆட்கள் இப்ப நான் இருக்கிற இடத்திற்குக் கிட்டத்தான் இருக்கிறாங்க. அவங்க வந்திருக்கிற 'வேனி'ன் 'நம்பர்" எனக்குத் தெரியும் வாப்பா. அதைச் சொல்கிறேன். குறிக்கிறீங்களா?"

என்று கேட்டான். உடனே அவர் தன்னுடைய சட்டைப் பைக்குள் இருந்த பேனையை எடுத்து, அதை அருகில் இருந்த கன்சுலின் மாமாவிடம் கொடுத்து எழுதும்படி சைகை செய்தார். பின்னர்,

"சொல்லும்மா"

என்று கன்சுலிடம் கேட்டார். கன்சுல் ஸ்ரீ என ஆரம்பித்து முழு ஆங்கில எழுத்துக்களையும், இலக்கங்களையும் சொல்லி விட்டு,

"வாப்பா அது கறுப்பு வேன். நம்ம வேன் மாதிரி முன்னால நீளமாக இருக்கிற வேன் இல்லை. அது தட்டையான 'வேன்'"

என்று கூறினான். அவன் கூறியதும் அவர்,

"கன்சுல், நீ தங்கியிருந்த 'ஸ்கூலுக்கு' முன்னாலதான் நாங்க இப்ப நிற்கிறோம். நீ அவருக்கிட்ட 'போன' கொடு"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று கூறினார். கன்சுல் அவரிடம் 'போனை'க் கொடுத்ததும், அவர் தாங்கள் இப்போது வந்து நிற்கின்ற இடத்தின் பெயரைச் சொல்லி,

"நாங்க இப்ப அந்த ஊரிலுள்ள 'ஸ்கூலி'ல்தான் நிற்கிறோம். நீங்க எங்கே இருக்கிறீங்க?"

என்று கேட்டார். அதற்கு அவர்,

"நானும் இங்கு பக்கத்தில்தான் நிற்கிறேன். நீங்க அவசரப் படாதீங்க. உங்க மகனக் கடத்தின ஆட்களும் 'ஸ்கூலுக்கு' அருகிலுள்ள ரோட்டி'ல் நிற்பதாக அவன் கூறுகிறான். அதனால் இதைப் பற்றி 'பொலீசுக்கு' தகவல் கொடுக்க முடியுமா என்று பாருங்க"

என்று கூறினார்.

அதற்கு கன்சுலின் வாப்பா,

"நாங்க 'பொலீசுடன்தான்' வந்திருக்கிறோம். நீங்க இப்போது இருக்கிற இடத்திலேயே இருங்க. கொஞ்ச நேரத்தில் நான் உங்களுக்கு 'போன்' பண்ணுகிறேன்"

என்று கூறினார். தாங்கள் வரும்போது வீதியில் நின்றிருந்த ஒரு கறுப்பு நிற 'வேன்' பின்னர் மெல்ல மெல்ல நகர்ந்து சற்றுத் தூரத்தில் நிற்பதை அவர் கண்டார். அவரால் அதனுடைய இலக்கங்களை வாசிக்க முடியவில்லை. அவர் ஒரு முடிவுக்கு வந்தவராக, 'வேனி'ல் இருந்து இறங்கி பாடசாலைக்குள் சென்றார்.

அங்கு 'பொலீஸ் இன்ஸ்பெக்டரும்', ஏனைய பொலிசாரும் கிராம சேவையாளரும் கட்டிடங்களை பார்த்தவாறு மெல்ல் மெல்ல நடந்து வருவதைக் கண்டார். அவர் வேகமாக 'இன்ஸ்பெக்டரிடம்' சென்று, தான் கன்சுலிடம் "போனில்' பேசியதையும், அவன் கூறியது போன்ற ஒரு 'வேன்' சற்றுத் தள்ளி நிற்பதையும் அவரிடம் கூறினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடனே அந்த 'இன்ஸ்பெக்டர்' தனக்கு அருகில் நின்ற ஒரு பொலீஸ் உத்தியோகத்தரிடம் கறுப்பு நிற 'வேனை'ப் பற்றிச் சொல்லி,

"டிரைவரிடம் போய் 'ஜீப்'பை அந்த கறுப்பு நிற 'வேனி'ற்கு முன்னால் கொண்டு போய் நிறுத்தச் சொல்லும். அந்த 'வேன்' போவதற்கு முயற்சி செய்தால் தடுத்து விடும்"

என்று சொன்னார். அந்த உத்தியோகத்தர் சென்றதும், மற்ற இரு பொலீஸ் உத்தியோகத்தர்களுடன் அவர் பின்னால் சென்றார். அவரது வலது கை, அவருடைய இடுப்பில் சொருகப்பட்டிருந்த கைத்துப்பாக்கியின் மீது இருந்தது. அவர்களின் பின்னால் கன்சூலின் வாப்பா சென்றார்.

அவர்கள் வீதிக்குச் சென்றபோது, பொலீஸ் 'ஜீப்' அந்த கறுப்பு நிற 'வேனி'ன் முன்னால் போய் நிற்பதைக் கண்டார்கள். தங்களுடைய 'வேனி'ற்கு முன்னால், பொலீஸ் ஜீப் வந்து நிற்பதைப் பார்த்ததும், 'வேனின்' சாரதி தமது 'வேனை' பின்னால் எடுத்து, புறப்படுவதற்கு முயற்சி செய்தான். அதற்குள் 'இன்ஸ்பெக்டரும்' பொலீஸ் உத்தியோகத்தர்களும் அந்த இடத்தை அடைந்து விட்டனர். 'இன்ஸ்பெக்டர்' 'வேனின்' சாரதியிடம் சென்று, அவரை வெளியே இறங்கும்படி கூறினார். அதேநேரத்தில் ஏனைய பொலீஸ் உத்தியோகத்தர்கள் 'வேனை' சுற்றி வளைத்தவாறு நின்றனர்.

பொலீசாரைக் கண்டதும், வேனிற்குள் இருந்தவர்களின் முகங்கள் இருண்டு விட்டன. எனினும், கன்னத்தில் மச்சமுள்ள, குறுந்தாடிக்காரன் பொறுப்பதிகாரியிடம்,

"ஏன் சேர், எங்களை இறங்கும்படி சொல்றீங்க? நாங்க யார் தெரியுமா? நாங்க அகதிகளுக்கு உதவி செய்ய வந்திருக்கிறோம்"

என்று சற்று உரத்த குரலில், சிங்களத்தில் கூறினான். அதற்கு 'இன்ஸ்பெக்டர்',



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நீங்கள் யாரென்று எங்களுக்குத் தெரியாது. ஆனால் நாங்கள் உங்கள் வாகனத்தை சோதனையிட வேண்டும். அதனால் தயவு செய்து எல்லோரும் கீழே இறங்குங்க"

என்று கூறினார். அதைக் கேட்டதும் அவர்களின் முகங்கள் மேலும் கூடுதலாக இருண்டன.

"சேர், நாங்கள் அகதிகளுக்கு உதவி செய்வதற்காக இங்கு வந்திருக்கிறோம். நீங்கள் ஏன் எங்களுடைய வாகனத்தை சோதனையிட வேண்டும்"

என்று மீண்டும் அந்த குறுந்தாடிக்காரன் கேட்டான்.

அதற்கு 'இன்ஸ்பெக்டர்',

"எங்களுக்கு கிடைத்துள்ள தகவல்களின்படி உங்களுடைய வாகனத்தை சோதனை செய்ய வேண்டியுள்ளது. தயவு செய்து எங்களுக்கு ஒத்துழையுங்கள்"

என்று அவர்களிடம் வினயமாகக் கேட்டார். வேறுவழியின்றி அனைவரும் 'வேனில்' இருந்து இறங்கினார்கள். அதன் பின்னர் 'இன்ஸ்பெக்டர்', இரண்டு 'பொலீஸ்' உத்தியோகத்தர்களை அழைத்து, அவர்களில் ஒருவரை 'வேனின்' முன்புறமும், மற்றவரை பின்புறமும் சோதனையிடும்படி கட்டளையிட்டார். அந்த 'பொலீஸ்' உத்தியோகத்தர்கள் உள்ளே சென்று சோதனையிட்டார்கள்.

அவர்களில் முன்புறம் சோதனையிட்டவர் இரண்டு இலக்கத் தகடுகளுடனும், பின்புறம் சோதனையிட்டவர் ஒரு 'ஸ்கூல் பேக்'குடனும், இறங்கினார்கள். அவற்றைப் பார்த்த அந்த வேனில் இருந்தவர்கள் திருதிருவென விழித்தார்கள். 'ஸ்கூல் பேக்கை' கையில் வாங்கிய 'இன்ஸ்பெக்டர்' அதைத் திறந்து பார்த்தார். அதற்குள் சில உடைகள் இருந்தன. பின்னர் அந்த 'பேக்கை' கன்சுலின் வாப்பாவிடம் நீட்டிய அவர்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இது உங்கள் மகனினுடையதா என்று பாருங்க"

எனக் கேட்டார். அந்தப் 'பேக்கை'யும், அதற்குள் இருந்த கன்சுலின் உடைகளையும் பார்த்த அவர்,

"ஓம், இது என்னுடைய மகனுடைய 'பேக்'தான்"

என்று கூறினார். உடனே 'இன்ஸ்பெக்டர்' ஏனைய பொலீஸ் உத்தியோகத்தர்களைப் பார்த்து,

"இவர்களை கைது செய்யுங்கள்!"

என்று கட்டளையிட்டார். உடனடியாக அவர்கள் ஐவரும் கைவிலங்கிடப்பட்டார்கள். பின்னர் அவர் கன்சுலின் 'பேக்'கை தான் வாங்கிக் கொண்டு, அவனுடைய தந்தையிடம்,

"நீங்கள் உங்கள் மகனை அழைத்துக் கொண்டு பொலீஸ் நிலையத்துக்கு வாருங்கள். உங்கள் மகனிடம் வாக்குமூலம் எடுக்க வேண்டும்."என்று சொல்லி விட்டு, அந்த ஐவரையும் 'ஜீப்'பில் ஏற்றினார். இன்னொரு 'பொலீஸ்' உத்தியோகத்தரிடம் 'வேனை' ஓட்டி வரும்படி சொல்லி விட்டு, அவர் 'ஜீப்'பில் ஏறி காவல் நிலையத்தை நோக்கி விரைந்தார்.

இதற்குள் அந்த இடத்தில் ஆட்கள் கூடி விட்டார்கள். அவர்களில் காமினியும், அவனுடைய தாயும் இருந்தார்கள். அவர்களுக்கு மெல்ல, மெல்ல விடயம் புரியத் தொடங்கியது. கடத்தப்பட்ட ஒரு பையனை த்தான் தமது வீட்டில் தாம் வைத்திருந்திருக்கிறோம் என்ற உண்மை அவர்களுக்கு அப்போது புலப்பட்டது.



oundation.
m.org

# -15-

# கன்சுலின் பிரியாவிடை

'பொலீசார்' சென்றதும், கன்சுலின் வாப்பா, தன்னுடன் சற்று முன்னர் கதைத்த தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு, அவர்கள் இருக்கும் இடத்தை அறிந்து கொண்டார். உடனடியாக அவர்கள் அந்த தேனீர் கடைக்குச் சென்றார்கள்.

அவர்கள் கடையை அடைந்ததும், கடை வாசலில் கன்சுல், ஒரு நபருடன் நிற்பதை, அவனுடைய வாப்பா கண்டார். உடனே 'வேனை' நிறுத்தி விட்டு,

"கன்சுல்"

என்று கூப்பிட்டுக் கொண்டு அவனிடம் ஓடினார். வாப்பாவின் குரலைக் கேட்டதும் கன்சுலும்,

"வாப்பா"

என்று அலறிக் கொண்டு ஓடி வந்தான். வாப்பா அவனை இழுத்து அணைத்துக் கொண்டார். கன்சுல் அவருடைய இடுப்பில் தலையை சாய்த்தவாறு அழத் தொடங்கினான்.

"அழாதேம்மா, நாங்கதான் வந்திட்டோமே. அழாதே"

என்று அவர் கன்சுலைத் தேற்றினார். பின்னர் அவர் அந்த நபரைப் பார்த்து,

“ஜஸாகல்லாஹூமுல் ஹைறன். (அல்லாஹ்வின் அருள் உங்களுக்குக் கிடைப்பதாக) நீங்க எங்களுக்குப் பெரிய உதவி செய்திருக்கிறீங்க”

என்று கண்கள் கலங்க கூறினார். அதற்கு அவர்,

“எல்லாம் அல்லாவின் நாட்டம். உங்க மகனுக்கு உதவக் கிடைத்ததற்கு நான்தான் அல்லாவுக்கு நன்றி சொல்லணும்”

என்று கூறினார். சிறிது நேரம் அவருடன் கதைத்த பின்னர், அவருக்கு மீண்டும் நன்றி சொல்லி விட்டு அவர்கள் புறப்பட்டார்கள்.

வாப்பாவையும், தன்னுடைய ஊரைச் சேர்ந்தவர்களையும் பார்த்ததால், கன்சுலுக்கு சொல்ல முடியாத மகிழ்ச்சியும், நிம்மதியும் ஏற்பட்டன. அவனுக்கு இந்த இரண்டு நாட்களும் எத்தனையோ நாட்கள் கடந்தது போன்ற உணர்வை ஏற்படுத்தின. இந்த இரண்டு நாட்களில் தனக்கு நிகழ்ந்தவற்றை நினைக்கும் போது அவனால் நம்ப முடியாமல் இருந்தது. எத்தனை ஆபத்துகள்! எத்தகைய சூழல்கள்! அவனையறியாமலே அவன் தனது வாப்பாவின் அருகே நெருங்கி அமர்ந்து கொண்டான். இப்போது வாப்பாவின் அருகில் இருக்கும்போது, அவன் முழுமையான பாதுகாப்புணர்வைப் பெற்றான். அவன் தான் தங்கியிருந்த குடும்பத்தைப் பற்றி வாப்பாவிடம் கூறினான்.

கன்சுல், முதலில் ‘வேனை’ அவன் இரவு தங்கியிருந்த பாடசாலைக்கு செலுத்தும்படி கூறினான். அங்கு அவர்கள் சென்றபோது, அந்த இடத்தில் இன்னமும் கூட்டமாகவே இருந்தது.

கன்சுல் ‘வேனி’ல் இருந்து இறங்கி, காமினியையும், அவனுடைய தாயையும் தேடினான். அவர்கள் ஒரு ஓரமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நின்றார்கள். காமினியின் தந்தையும் அப்போதுதான் வீட்டில் இருந்து திரும்பியிருந்தார். அவரும் அவர்களுடன் நின்றிருந்தார்.

கன்சுல் அவர்கள் நின்ற இடத்திற்கு ஓடினான். அவர்களிடம் போய், காமினியின் கைகளை அவன் பற்றிக் கொண்டான். காமினி சிரித்தவாறு மௌனமாக நின்றான். அவனுடைய தாய், தந்தையருக்கு என்ன சொல்வதென்று தெரியவில்லை. கன்சுலின் பின்னால் சென்ற அவனுடைய வாப்பா, காமினியின் தந்தையினுடைய கைகளைப் பற்றிக் கொண்டார். அவர் கரங்களும், உதடுகளும் நடுங்கின. அவரது கண்களில் இருந்து கண்ணீர் வழிந்தது. அவரது நிலையைப் பார்த்து காமினியின் தந்தையின் கண்களும் கசிந்தன.

சட்டென்று எதையோ நினைத்துக் கொண்ட கன்சுலின் தந்தை, தன்னுடைய சட்டைப் பைக்குள் கைகளை விட்டு, பண நோட்டுகளை வெளியே எடுத்தார். அவற்றை எண்ணிக்கூடப் பார்க்காமல், காமினியின் தந்தையின் கைகளில் வைத்தார்.

பணத்தைப் பார்த்ததும், காமினியின் தந்தை, நெருப்பில் கையை வைத்தவர் போல் கைகளை உதறிக் கொண்டு பின்னால் போய்விட்டார்.

“எபா, எபா. அபிட சல்லி எபா. அபி ஒக்கொம மினிசு. அபி அனித் மினிசுட உதவு கரன்ட ஓன”

(“வேணாம், வேணாம். எங்களுக்கு காசு வேணாம். நாம் எல்லோரும் மனிதர்கள். நாங்க மற்ற மனிதர்களுக்கு உதவி செய்ய வேணும்.”)

என்று கூறினார்.

“ஒயா, மகே புதாவ ஆரக்ஷ கரா. மம மொனஹறி கரன்ட ஓன. மெ சல்லிய ஒயாகே புதா இகன கன்ட வீதங் கரன்ட”



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

("நீங்க என் மகனைப் பாதுகாத்தீங்க. அதற்கு நான் ஏதாவது செய்ய வேணும். இந்த காசை உங்க மகன் படிப்பதற்கு செலவு செய்யுங்க")

என்று கூறியவாறு கன்சுலின் வாப்பா அப்பணத்தை காமினியின் கரங்களில் வைத்தார். காமினி எதுவும் புரியாமல் தனது தந்தையைப் பார்த்தார். அவர்

"கன்ட புதே"

("வாங்கு மகன்")

என்று தலையை ஆட்டி அவனிடம் கூறினார். காமினி பணத்தை வாங்கியபோது, கன்சுல் அவனைப் பார்த்து நட்புடன் சிரித்தான். பின்னர் கன்சுல் குமாரைத் தேடினான். அவனும் தனது தாயுடன் அந்த இடத்தில் நின்றான். கன்சுல் அவனுக்கு அருகில் சென்று,

"இதுதான் என் வாப்பா. நான் போறேன். என்னுடைய 'அட்ரஸைத்' தாறேன். எனக்கு கடிதம் போடுவீங்களா?"

எனக் கேட்டான் அவனும் சிரித்தவாறு தலையை ஆட்டினான். கன்சுல் வாப்பாவிடம் இருந்து பேனையையும், ஒரு காகிதத் துண்டையும் வாங்கி, தன்னுடைய வீட்டு விலாசத்தையும், அதன் கீழ் தொலைபேசி இலக்கத்தையும் எழுதி, அவனிடம் கொடுத்தான். பின்னர் அவன் குமாரிடம்,

"இந்த விலாசத்தை காமினியிடம் சிங்களத்தில் எழுதிக் கொடுங்க. அவனையும் எனக்கு கடிதம் எழுதச் சொல்லுங்க"

என்று காமினியைப் பார்த்தவாறு கூறினான். கன்சுல் சொன்னதைப் புரிந்து கொண்டவன் போன்று காமினியும் சிரித்தவாறு தலையை ஆட்டினான். பின்னர் கன்சுல் காமினியின் தாயிடமும், தந்தையிடமும் சென்று அவர்களின் கைகளைப் பிடித்தவாறு,

"அம்மா... தாத்தா"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று அவர்களை அழைத்தான். அவன் குரல் தழுதழுத்தது. கண்களில் கண்ணீர் துளிர்த்து வடிந்தது. அவன் அவ்வாறு தங்களை அழைத்ததும், அவர்கள் இருவரின் கண்களில் இருந்தும் கண்ணீர் வழிந்தன. காமினியின் தாயினால் எதுவும் கதைக்க முடியவில்லை. அவர் கன்சுலின தலையை தடவிக் கொடுத்தார்.

"ஹரி புதே. கிஹிங் என்ட.."

("சரி மகன், போயிட்டு வாங்க...")

என்று காமினியின் தந்தை தழுதழுத்த குரலில் கூறினார். அவரால் அதற்கு மேல் கதைக்க முடியவில்லை.

இவர்களைப் பார்த்துக் கொண்டு அங்கு நின்ற அத்தனை பேரும் உணர்ச்சிவசப்பட்டு விட்டார்கள். சிலரது கண்களில் இருந்து அவர்கள் அறியாமலேயே கண்ணீர் வழிந்தது. சிலரின் தொண்டைகள் இறுகிக் கொண்டன.

இறுதியில் கன்சுல் அவர்களிடம் இருந்து விடை பெற்றான். காமினியும், அவனது பெற்றோரும், குமாரும் 'வேன்' வரை வந்தார்கள். கன்சுல் அதில் ஏறி அவர்களுக்கு கை அசைத்தான். அவர்களும் வீதியில் நின்றவாறு, அந்த 'வேன்' தங்கள் பார்வையில் இருந்த மறையும் வரை தமது கைகளை அசைத்துக் கொண்டு நின்றார்கள். கன்சுல் தன்னுடைய உடைகளைப் பார்த்தான். அது காமினியின் உடைகள். அவனுடைய உடைகள் காமினியின் குடும்பத்தினரிடம் உள்ளன.

'காமினியின் உடைகளை அவர்களின் நினைவாக நான் பாதுகாத்து வைப்பேன்'

என்று அவன் அப்போது நினைத்தான்.

அவர்களின் 'வேன்' காவல் நிலையத்தை அடைந்ததும் 'இன்ஸ்பெக்டர்' தாம் கைது செய்த ஐவரையும் ஒவ்வொருவராக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கன்சுவிடம் காட்டினார். கன்சுல் அவர்களில் குறுந்தாடி வைத்திருந்தவனையும், தன்னிடம் தமிழில் கதைத்து வழிகாட்டும்படி கேட்டவனையும், தனக்கு 'சொக்லேட்' தந்தவனையும் சரியாக அடையாளம் காட்டினான். சாரதியையும், மற்றவனையும் அவனால் அடையாளம் காட்ட முடியவில்லை.

பின்னர், அவர் ஒரு படிவத்தில் நடந்த சம்பவங்களை எழுதி, அதில் கன்சுலையும், அவனுடைய தந்தையையும் கையெழுத்திடும்படி கூறினார். அத்துடன் கன்சுலின் மாமாவையும் ஒரு சாட்சியாக கையெழுத்து இடும்படி கேட்டு கொண்டார். பின்னர், இந்த வழக்கு தொடர்பான விசாரணைகளின்போது அவர்கள் வந்து தமக்கு உதவ வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார். அவர் கன்சுலின் தோளைத் தட்டி,

"புதே ஒயா லொகு சூரயா"

("மகன் நீ பெரிய வீரன்")

என மகிழ்ச்சியுடன் கூறினார். அவர் கூறியது விளங்காதபோதிலும், கன்சுலுக்கு வெட்கமாக இருந்தது.

இவ்வளவும் நடந்து கொண்டிருக்கும்போதே, அந்த காவல் நிலையத்தில் ஊடக நிறுவனங்களைச் சேர்ந்தவர்கள் கூடி விட்டார்கள். அவர்கள் கன்சுலை வெவ்வேறு கோணங்களில் புகைப்படங்களும், காணொளிப் படங்களும் எடுத்தார்கள். என்ன நடந்தது எனக் கூறும்படி அவர்கள் கன்சுலிடம் கேட்டார்கள். அவன் நடந்த அனைத்தையும் கூறினான். பின்னர் அவன் காமினியின் குடும்பத்தினருக்கு தன்னுடைய நன்றிகளைத் தெரிவித்தான். அத்துடன் தனக்கு தன்னுடைய வாப்பாவுடன் தொலைபேசி அழைப்பை ஏற்படுத்தி தந்தவருக்கும் நன்றியைத் தெரிவித்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாம் நலமாக முடிந்து விட்டன. இதோ! கன்சுலும் ஏனையோரும் தமது வீடு நோக்கிச் சென்று கொண்டிருக் கிறார்கள். அவர்கள் பயணம் செய்து கொண்டிருக்கும்போதே, தொலைக்காட்சிக ளிலும், வானொலியிலும், சில மாலைநேரப் பத்திரிகைகளிலும் பின்வரும் செய்திகள் வெளியிடப்பட்டன:

**"சிறுவர்களைக் கடத்தி உடல் உறுப்புகளை எடுத்து விற்பனை செய்யும் கும்பல் பிடிபட்டது"**

**"ஒரு சிறுவனின் புத்திசாதுரியத்தால் ஒரு கடத்தல் கும்பல் பிடிபட்டது."**

**"சிறுவர்களை கடத்தி வந்த கும்பலை பிடிக்க உதவிய சிறுவன். ஜனாதிபதி, பிரதமர் உட்பட அரசியல் தலைவர்கள் பாராட்டு!"**

கன்சுலின் ஊரில் அவனை வரவேற்பதற்கும், பாராட்டுவதற்கும் ஒரு மாபெரும் விழா ஒழுங்கு செய்யப்பட்டுக் கொண்டிருந்தது.

## பிற்குறிப்பு:

*பிள்ளைகளே!*

*நீங்களும் கன்சுலுக்கு பாராட்டுகளைத் தெரிவிக்க விரும்பினால், கீழ்வரும் தொலைபேசி இலக்கத்திற்கு நீங்கள் குறுந் தகவல்களை (SMS) அனுப்பலாம். உங்களின் கருத்துக்கள் கன்சுலின் அடுத்த சாகசக் கதையில் பிரசுரிக்கப்படும்.*

தொலைபேசி இல: 077 8089827



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இணைப்பு

இந்நாவலில் பயன்படுத்தப்பட்டுள்ள ஆங்கிலச் சொற்களுக்கான விளக்கங்கள்

| ஆங்கில சொல் (தமிழ் எழுத்துக்களில்) | ஆங்கில வடிவம் | கருத்து (தமிழில்) |
|---|---|---|
| ஸ்கூல் | school | பாடசாலை |
| பேக் | bag | பை |
| கிரிக்கட் | cricket | மட்டைப்பந்து |
| சைக்கிள் | bicycle | துவிச்சக்கர வண்டி |
| ரியூப் | tube | குழாய் |
| ஸ்கொலர்ஷிப் | scholarship | புலமைப்பரிசு |
| பாஸ் | pass | சித்தி |
| சப்போர்ட் | support | ஆதரவு |
| மொபைல் | mobile | நடமாடும் |
| போன் | phone | தொலைபேசி |
| கேம்ஸ் | games | விளையாட்டுகள் |
| ரீவி / (ரெலிவிசன்) | TV/ (television) | தொலைக்காட்சி |
| கார்டூன் | cartoon | சித்திரப்படம் |
| டவல் | towel | துவாய் |
| ஓபன் | open | திறந்த |
| அப்ஸ் | Apps | செயலிகள் |
| ஓ.ீப் | off | செயலற்று |
| பேர்த் டே | birthday | பிறந்த நாள் |
| மோட்டார் சைக்கிள் | motor cycle | உந்துருளி |
| ஐஸ்பழம் | ice cream | குளிர்களி |
| ரிமோர்ட் | remort | தொலை இயக்கி |
| வேன் | van | மகிழூர்தி |
| கிளாஸ் ரீச்சர் | class teacher | வகுப்பாசிரியர் |
| ரியூசன் | tuition | தனியார் வகுப்பு |
| கிரௌன்ட் | ground | மைதானம் |
| ஜெம் | gem | இரத்தினம் |
| பெட் | bat | மட்டை / மட்டையால் அடித்தல் |
| டீம் | team | அணி |
| ரன் | run | ஓட்டம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| மெட்ச் | match | போட்டி |
| சொக்ஸ் | socks | காலணிகள் |
| ஃபீல்ட் | field | களத்தடுப்பு |
| போல் | bowl | பந்தெறிதல் |
| விக்கட் | wicket | ஆடுகளம் / ஆட்டமிழப்பு |
| டிரைவர் | driver | சாரதி |
| பேப்பர் | paper | காகிதம் / தாள் |
| நியூ | new | புதிய |
| ஸ்டோர் | store | கடை / சேமிப்பிடம் |
| ஏசி | air condition | குளிரூட்டி |
| சீட் | seat | இருக்கை |
| சொக்கலேட் | chocolate | மிட்டாய் |
| ரிவேர்ஸ் | reverse | எதிர்த்திசையில் திருப்புதல் |
| கப் | cup | குவளை |
| அலுமாரி | almyrah | நிலைப்பேழை |
| பொலீஸ் | police | காவல்படை |
| ஸ்டேசன் | station | நிலையம் |
| இன்ஸ்பெக்டர் | inspector | பரிசோதகர்/பொறுப்பதிகாரி |
| குட்மோர்னிங் | good morning | காலை வணக்கம் |
| குட்ஈவினிங் | good evening | மாலை வணக்கம் |
| போட்டோ | photo | புகைப்படம்/நிழற்படம் |
| நம்பர் | number | இலக்கம் |
| அக்சன் | action | செயல் |
| கெமரா | camera | புகைப்படக்கருவி / நிழற்படக்கருவி |
| யூனிபோர்ம் | uniform | சீருடை |
| அலேர்ட் | alert | எச்சரிக்கை |
| பெனியன் | vest | மேலுள்ளாடை |
| வீடியோ | video | காணொளி |
| ஜீப் | jeep | காவல்துறை வாகனம் |
| மெசேஜ் | message | செய்தி |
| ஹேண்ட்போன் | handphone | கையடக்கத் தொலைபேசி/ கைபேசி |
| டோர்ச் | torch | மின்சூள் |
| கோல் | call | அழைப்பு |
| அட்ரஸ் | address | விலாசம்/முகவரி |
| கார்பெட் | carpet | மெத்தென்ற |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நூலாசிரியரின் ஏனைய நூல்கள்:**

1. சோனக தேசம்
2. இலங்கை முஸ்லிம்களின் பூர்வீகம்
3. இங்ஙினயும் ஒரு மஹ்சர்
4. ஜனநாயகம்: வெள்ளை - கிறிஸ்தவ சமூகங்களின் அரசியல்முறை.
5. பாடசாலை உளவியல்
6. அசன்பேயுடைய கதை - ஓர் மீள்வாசிப்பு
7. இலங்கை முஸ்லீம்களை புரிந்து கொள்ளல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கட்டுரைகள், ஆய்வு நூல்கள், சிறுகதைகள் போன்ற தளங்களில் எழுதி வருகின்ற அ.வா. முஹ்சீன், "காணாமல்போன கள்சுல்" என்ற நாவல் மூலமாக இளையோர் இலக்கியத்திலும் கால் பதித்துள்ளார். இலங்கைத் தமிழ் சூழலில் வாசிப்பின் மீதான ஆர்வம் வெகுவாகக் குறைந்துள்ள நிலையில், இளையோர் மத்தியில் வாசிப்பைத் தூண்டும் விதத்தில் இந்நாவலை அவர் எழுதியுள்ளார். அத்துடன் இளையோர் மத்தியில் வாசிப்பையும் தாண்டி, அவர்களை எழுதுவதற்குத் தூண்டும் வகையிலும் இந்நாவல் அமைந்துள்ளது.

இளையோரின் வாசிப்பு பெருமளவில் பெற்றோரில் தங்கியுள்ளது. தமது பிள்ளைகளின் ஆளுமைக் கட்டமைப்பு, நேர்சிந்தனை, துணிவு, சுயமாக முடிவெடுத்தல் போன்ற அம்சங்களை வளர்க்கும் வகையில் இந்நாவல் எழுதப்பட்டுள்ளது. எனவே பெற்றோர்கள் பாடநூல்களுடன், இத்தகைய நூல்களையும் தமது பிள்ளைகளுக்கு வாங்கிக் கொடுப்பது சிறந்தது.

ISBN 978-624-6135-21-8

9786246135218

Printed By : ART 0776566173

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org